
அருள்மிகு

# பத்திரகாளியம்மன்

## ஆலய வரலாறும் மகிமைகளும்!



டாக்டர் அ.ஸதீஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு பத்திரகாளியம்மன்

# ஆலய வரலாறும் மகிமைகளும்

ஆசிரியர்:

**டாக்டர் அ. ஸதீஸ்குமார், MBBS**

பதிப்பாசிரியர்:

**முனைவர் லேனா தமிழ்வாணன், எம்.ஏ.,**
டிப்ளமோ இன் ஜர்னலிசம்

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082
மின்அஞ்சல் : manimekalai1@dataone.in
மின் இணையம் : www.tamilvanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | **அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்** |
| ஆசிரியர் | **டாக்டர் அ. ஸதீஸ்குமார்** |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2014 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12 x 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | XX + 100 = 120 |
| நூலின் இந்திய விலை | ரூ. 250/- |
| அட்டைப்பட ஓவியம் | மோகன் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | பி.எஸ். முத்து கிராஃபிக்ஸ் சென்னை - 600 015. |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 600 094. |
| நூல் கட்டுமானம் | தையல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஆழிக்கடல் மேவி சோதரியர் புடை சூழ
மேழிச்சுழி மக்கள் வாழ்பதிசம்பூர் நாடி
அனல்மகுட பத்தர குண்டல வதை கோலத்தில்
நாலிரண்டு கைகளி லாயுத மேந்தி எமைக்
காத்தருளும் – சம்பூர் காளித் தாயே போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | தல வரலாறு | 1 |
| 2. | குளக்கோட்டன் திருப்பணிக் காலம் | 5 |
| 3. | தாய்த்தெய்வ வழிபாடு | 7 |
| 4. | ஆலய வரலாறு | 12 |
| 5. | பழைய பத்திரகாளி அம்பாள் ஆலயம் (பெட்டகத்து அம்பாள்) | 24 |
| 6. | தோணிக்கல்லும் - விக்கிரகங்களும் | 26 |
| 7. | ஊர் வேள்வியும் காளி அம்மனும் | 30 |
| 8. | சம்பூர் பத்திரகாளி சிலை கூறும் கதை | 33 |
| 9. | அழிவடைந்த ஆலய அமைப்பு | 35 |
| 10. | ஆரம்பகால வழிபாட்டு முறைகள் | 37 |
| 11. | ஸ்ரீ பத்ரகாளி மான்மியத்திலிருந்து | 43 |
| 12. | காளி | 45 |
| 13. | நல்ல தண்ணீர் கல் - நல்ல தண்ணீர் பிள்ளையார் வழிபாடு | 47 |
| 14. | வில்லுக்குளம் | 49 |
| 15. | கேதார கௌரி விரதம் | 51 |
| 16. | நவராத்திரி விரதம் | 56 |
| 17. | அம்பிகையின் திருநாமங்களின் பொருள் | 59 |
| 18. | சக்தி பீடங்கள் | 63 |
| 19. | மீள் ஆலய பிரவேசம் | 66 |
| 20. | சம்பூர் பத்திரகாளி மீதான காவியங்கள் | 69 |
| | ஆனந்தக் கும்மி | 87 |
| | சம்பூர் தாயே! | 89 |
| | கும்மி | 91 |
| | திருவூஞ்சல் | 94 |
| | பராக்கு, எச்சரிக்கை, லாலி, மங்களம் | 97 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

திருகோணமலை, சம்பூர் அருள்மிகு ஸ்ரீ பத்திர காளியம்பாள் ஆலயமானது ஒரு பழமை வாய்ந்த ஆலயமாகும். இதற்குப் பல வரலாற்றுச் சிறப்புகள் உள்ளன. அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் அருளை இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்லாது வெளிநாட்டு மக்களுக்கும் நன்கு தெரியும்.

அம்பாளின் வரலாற்றினை முழுமையாக எல்லோரும் அறியவேண்டும் என்பதற்காக இந்த நூல் வெளி வருவதையிட்டு நான் மிகவும் சந்தோசமடைகின்றேன். இந்த நூலானது சிறந்த முறையில் வெளிவரவேண்டும். இந்நூலை எல்லோரும் வாசித்து அருள்மிகு சம்பூர் பத்திரகாளி அம்பாளின் வரலாற்றை அறிந்து அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு எனது நல்லாசியை கூறிக் கொள்கின்றேன்.

"அலங்கார பூசணம், நற்புருஷ சிவாச்சாரியார்"
**சிவஸ்ரீ இ. கோபாலசிங்கம் குருக்கள்**
ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயம்
சம்பூர்
திருகோணமலை,
இலங்கை

*2014-10-19*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

ஒரு பிரதேசத்தின் பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றின் அடையாளங்கள் பேணப்படும் போதுதான் அது பெருமை பெறுகின்றது. கிழக்கிலங்கையில் தொன்மையும் பாரம்பரியமும் கொண்ட கருவூலமாக சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. இதற்கு முக்கியமாக கல்வெட்டு சாசனங்கள், தொன்மைகள், ஆலய வரலாறு போன்றவை சான்று பகர்கின்றன.

இதனுடன் தொடர்புபட்டதாக குளக்கோட்டு மகாராஜன் கொண்டுவந்த ஏழு குடி மக்கள் விளங்குகின்றார்கள். இதனை நினைவுபடுத்துமுகமாக ஏழு சாடி வைத்து பொங்கல் செய்யும் வழக்கமும் சப்த கன்னிமார் குடம் எடுக்கும் வழக்கமும் இன்று பேணப்பட்டு வருகின்றது. இம்மக்கள் ஏனைய ஐந்து குடி மக்களையும் இணைத்து ஒற்றுமையாக ஆலய வழிபாடுகளினைச் செய்து வருவதைக் காணலாம். அத்தோடு தோணிக்கல்லும் அதில் வந்து இறங்கியதாகக் கருதப்படும் விக்கிரகங்களும் முக்கியம் பெறுகின்றன. சம்பூர் பதியுறையும் அம்மனும் ஏனைய விக்கிரகங்களும் தோணி மூலம் வந்ததாகவும் அவை பிற்காலத்தில் கல்லாக காணப்பட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதை மூலமாக அறிய முடிகின்றது. கல்லாகி இறுகிக் கிடக்கும் தோணியை இன்றும் கடலோரம் காணமுடிகின்றது. இதனோடு இணைந்ததாக கல்லாகிப் போன சங்கிலியின் வடிவத்தையும் கண்டு கொள்ளலாம்.

குளக்கோட்டு மன்னனோடு தொடர்புபட்டுக் காணப்படும் சம்பூர் ஸ்ரீ அருள்மிகு பத்திரகாளி அம்பாளின் நிர்வாகக் கட்டமைப்பின் குடிவழியாக வந்த தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காரியப்பர்) முதன்மை பெறுகின்றார். பூத கணங்களால் உருவாக்கம் பெற்ற வில்லுக்குளமும், அங்கே நிறைந்து பூத்துக் குலுங்கும் தாமரையும் அழகு தருவனவாய் அமைந்துள்ளன. இப்பிரதேசத்தின் வரலாறுகள், தொன்மங்கள், கல்வெட்டு சாசனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை காலத்தின் கட்டாயமாகும். 600 வருடம் பழமை வாய்ந்த இவ் ஆலயம் பற்றிய குறிப்புகளும் செய்திகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்பட்ட போதிலும் இவற்றை ஒழுங்குபடுத்தி சமூகத்திற்கு வழங்க முன்வந்துள்ள வைத்தியர் திரு. அ. ஸதீஸ்குமார் அவர்களின் முயற்சி போற்றுதற்குரியதாகும்.

"கல்லிலே இறைவனைக் கண்டவர்கள் இந்துக்கள்." அந்த வகையில் தொன்மையான ஆலயம் அழிந்தொழிந்து போயிருந்தாலும் தானே விரும்பி காட்டுத் தேங்காய் மரத்தை தல விருட்சமாகக் கொண்டு அமர்ந்திருக்கும் ஆதிபராசக்தி எந்தவித அழிவின்றி வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளித்து பல அற்புதங்களை வழங்கி மக்களின் இன்னல் களைத் துடைத்து வருவதைக் காணலாம். இப் பத்திரகாளி அம்பாளை மூலஸ்தானமாகக் கொண்டு இப்பிரதேச மக்களும், ஆலய நிர்வாக சபையும் இணைந்து புதிய ஆலயத்தினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள். அது கைகூடும் வேளையில் வரலாறு பேசப்படும் என்பதை நம்பலாம்.

இவ்வண்ணம்
**திரு. துரையப்பா கிருபைராஜ்**
தலைவர் (காரியப்பர்)
சம்பூர் ஆலய பரிபாலன சபை
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

"நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம்
பெறலாம்"

என்பது சத்தியமான வார்த்தையாகும். "கோயிலுஞ்சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" இவ்வாறு தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணமலை மாவட்டத்திலே முத்தூராம் மூதூரின் கிழக்கிலே வந்தாரை வாழவைக்கும் சம்பூரணமாம் சம்பூரிலே விரும்பிவந்து குடியிருந்தவள் அன்னை பத்திரகாளியாவாள்.

திருகோணமலை மாவட்டம் மட்டுமல்ல, வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இந்துக்கள் மட்டுமல்லாது ஏனைய சமய மக்களும் பேதமின்றி வழிபடப்படுபவள் அம்பாள். இதனால் இன மத மொழி வேறுபாடுகளைக் கடந்து நிற்பவள். குழந்தை பிறந்தால் முடியிறக்கு அன்னையின் தலத்தில்தான். அறுவடையின்போது அன்னைக்கு முதல் பொலி வழங்கிய பின்பே ஏனைய செலவுகள். எக்காரியத்தை செய்யத் தொடங்குவதற்கு முன்னர் அன்னையை வழிபட்டே ஆரம்பிப்பர். இவ்வாறு "வாழ்வுமானவள் துர்க்கா வழியுமானவள்" எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் கிராமத்தின் குட்டி இராசாவாக கோலோச்சியவர் காளியப்பு விதானையாராவார். பொலிஸ் நிலையமில்லாத அக்காலத்தில் பொலிஸ் விதானையாராகச் செயற்பட்டவர். நூலாசிரியரின் தந்தை அவரின் பேரனாவார். நூலாசிரியர் மட்டுமல்லாது அவரது பெற்றோரும் எனது மாணவர்களாவர். இவ்வாறு நூலாசிரியர் பரம்பரைப் பெருமையும் செல்வமும் செல்வாக்கும் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கொப்ப கல்வி கற்கும் இளமைக் காலத்திலே சிறந்த செயற்பாட்டினைக் காண்பித்து ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றவர்.

சம்பூரின் முதல் வைத்தியக் கலாநிதியாக விளங்கிய போதிலும் வரலாற்று ஆய்வுகளில் ஈடுபடுவதிலும், நூல்கள் பல ஆக்குவதிலும் தனது ஓய்வு நேரங்களை அவப் பொழுதாக்காமல் தவப்பொழுதாக மாற்றி வருபவர்.

சம்பூர் காளி பற்றிய இந்நூலிலே அருள்மிகு பத்திரகாளி கோவிலின் தல வரலாறு, குளக்கோட்டனின் திருப்பணிக் காலம், தாய்த்தெய்வ வழிபாடு, தோணிக்கல்லும் விக்கிரகங்களும், ஊர் வேள்வியும் காளியம்மனும், ஆரம்பகால வழிபாட்டு முறைகள் போன்ற அத்தியாயங்கள் ஆசிரியரின் வரலாற்றுத் தேடலையும் அது தொடர்பான ஈடுபாட்டினையும் சுட்டி நிற்கின்றன.

வரலாற்றோடு இணைந்த புராதன சின்னங்கள், ஆதாரச் சுவடுகள் மறைந்து வருகின்ற இக்காலத்திலே அவற்றைத் தேடிப் புத்துயிரளித்து வரும் இது போன்ற முயற்சிகளையும் தன்னலம் கருதாத செயற்பாடுகளையும் பாராட்டுவதோடு ஆசிரியர் மேலும் பல்லாண்டுகள் சீரும் சிறப்புடன் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் புகழும் உயர்ந்து இன்னும் பல நூல்களை ஆக்க வேண்டும். அதன் மூலம் அகிலம் வரை அவர் புகழ் ஓங்க வேண்டுமென வாழ்த்தி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்
**திரு. க. வெற்றிவேல்**
கொட்டியாபுரப்பற்று இந்துசமய
அபிவிருத்தி ஒன்றியத் தலைவர்
இலங்கை

*13.11.2014*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

சம்பூர் என்னும் பழம்பெரும் பாரம்பரியம் மிக்க பதியைச் சேர்ந்த வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார் அவர்கள் கடந்த வருடம் (2013) 'சம்பூர் பிரதேசத்தின் தொன்மை' என்ற நூலை எழுதி வெளியிட்டு இவ்வருடம் 'அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்' என்ற ஆலயத்துடன் தொடர்பான வரலாற்று ஆய்வு நூலை எழுதி வெளியிட முன்வந்திருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இது நூலாசிரியரின் வரலாற்றுச் சாதனையாகும். இதற்காக இவரை மனதாரப் பாராட்டி வாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

காலத்தின் கட்டாயத் தேவை கருதி இந்நூல் வெளி வருவது மிகவும் சிறப்புக்குரியது. நூலாசிரியர் 'சம்பூர் பிரதேசத்தின் தொன்மை' என்ற நூலில் சம்பூர் ஆலயங்கள் என்ற தலைப்பில் இவ்வாலயம் பற்றிச் சுருக்கமாக வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். இந்நூலில் பழம் பெருமை மிக்க இவ்வாலயத்தின் வரலாற்று ஆய்வுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே சிறப்பாக விளங்கிவந்த ஐந்து ஈச்சரங்களில் ஒன்றான பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரத்துடன் மிக நெருக்கமான தொடர் பினைக் கொண்டது சம்பூர் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் வரலாற்றுச் சாசனங்கள் இயற்கை அனர்த்தங்களினாலும், போர்க்காலச் சூழலினாலும் அழிந்து போய்விட்டது. இருந்தும் நூலாசிரியர் பல சிரமத்தின் மத்தியில் இவ்வாலயத்தோடு சம்பந்தமுடைய வரலாற்று நூல்களையும் சாசனங்களையும் தேடிக் கண்டுபிடித்து ஆராய்ந்தும், ஆலயத்தின் வரலாறு தெரிந்த பல மனித வளங்களோடு தொடர்பு கொண்டும் இந்நூலை எழுதியுள்ளார்.

முக்கிய தலைப்புகள் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அத் தலைப்புகளின் கீழ் ஆலய வரலாற்றினை தக்க ஆதாரத்துடன் திரிபுபடாமல் எழுதியுள்ளது சிறப்புக்குரியதே. இவ் வாலயத்தையும் இப்பிரதேசத்தையும் மேலும் ஆய்வுக்குட்படுத்த விரும்பும் ஆர்வலர்களுக்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகவும், ஆவணமாகவும் உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.

வைத்தியத்துறையில் முழுநேரச் சேவகனாக தன்னை அர்ப்பணித்து சேவை செய்துகொண்டு, இத்துறையிலும் ஈடுபாடு கொண்டு வெற்றி கண்டிருப்பது சாதாரண விடயமல்ல. இவர் பிறந்து வளர்ந்த இயற்கை வளங்கொழிக்கும் இப்பிரதேசத்தின் மீதான பற்றும் அங்கு வாழ்ந்த மக்களிடம் வைத்திருக்கும் அளவு கடந்த அன்பும் மரியாதையும் இதற்கு உந்துசக்தியாக அமைந்திருக்கும் எனக் கருதுகின்றேன். நூலாசிரியர் இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் மானசீகமாக இப்பிரதேசத்தை விட்டு நீங்காது என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும், சம்பூர் மகாவித்தியாலயமும் இப்பிரதேசத்தின் இரு கண்கள். இப்பிரதேச மக்களின் கல்வி, சமய, கலாச்சார, பண்பாட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களை வளர்த்த முதுசொம்கள். ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு நித்திய, நைமித்திய பூசைகள், விழாக்கள் செய்ய முடியாத நிலைமை. வைத்தியம், பொறியியல், விஞ்ஞானம், சட்டம், கலைத்துறைகளில் கல்விமான்களை உருவாக்கிய கல்விக்கூடம் இன்று கடற்படை பயிற்சி முகாம். தமது வளமான பூர்வீக பூமியில் கடின உழைப்பினால் செல்வச் சிறப்போடு வாழ்ந்து, மற்றவர்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் கைகொடுத்த மக்கள் இன்று எட்டு வருடங்களுக்கு மேல் அகதி முகாம்களில் முடக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒரு வேளை உணவுக்கும் கையேந்தும் நிலை தொடர்கின்றது. இப்பிரதேசத்தின் பூர்வீக வரலாறுகளும் வளங்களும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் இவை போன்ற இப்பிரதேச வரலாற்று ஆய்வு நூல்கள் வெளிவருவது மிக அவசியம் எனக் கருதுகின்றேன். நூலாசிரியர் தமக்கிருக்கும் வேலைப்பளுகளுக்கிடையில் இத்துறையிலும் ஈடுபட ஊக்கமும் உற்சாகமும் பெற அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். இப்பணி தொடர வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும்.

நன்றி.

அன்புடன்

**திரு. க. துரைரெட்ணசிங்கம்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
திருகோணமலை மாவட்டம், இலங்கை.

*10.10.2014*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

**வை**த்தியர் அ. ஸதீஸ்குமார் அவர்கள் தனது பிறந்த மண் மீது பற்றுக் கொண்டவர். சம்பூரின் வரலாறு பற்றி தாம் அறிந்தவரையில் பெற்ற தகவல்களைக் கொண்டு ஒரு ஆவணமாக வெளியிட்டிருந்தார். தனது ஊர் மக்களினது குலதெய்வமாகிய பத்திரகாளியின் கோவில் தொடர்பான தகவல்களைத் திரட்டி ஒரு ஆவணமாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டு அதன் பேறாக 'அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்' என்னும் நூலினை எழுதியுள்ளார்.

தல வரலாற்றைப் பற்றி குறிப்பிடும்போது சம்பூரின் குடியேற்றம் பற்றியும் குளக்கோட்டன் பற்றியுமான தொடர்பினை எடுத்துக் காட்டியுள்ளார். ஊரில் அம்மன் வழிபாடு பயபக்தியுடன் நடைபெற்றமைக்குச் சான்றுகளை எடுத்துக் காட்டியுள்ளார். தொடக்கத்தில் ஊரவர்களே பூசை செய்து மடைபோட்டு பயபக்தியுடன் செய்த வழிபாடு பற்றியும், பின்னர் இந்தியாவிலிருந்து பல அம்மன் விக்கிரகங்கள் தோணிக்கல் என்னும் இடத்தை அடைந்ததாகவும், அவற்றில் ஒன்றே தற்போது காட்டுத் தென்னை மரத்தின் கீழ் கோவில் கொண்ட பத்திரகாளி எனவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக் கட்டும் நோன்பானது கி.பி. *1600* ஆம் ஆண்டின் பிற்கூற்றிலிருந்து இங்கு நடைபெற்று வருவதாகவும் அதுவே கேதார கௌரி விரதமாக இருக்கும் என்னும் கருத்தினையும் முன்வைத்துள்ளார். யுத்தம் மூண்ட காலத்தில் இவ்வூரில் இருந்து மக்கள் வெளியேறிய பின்னரும் காளியை மனதில் இருத்தி வழிபட்டு வந்தமையால் கோவில் மீண்டும் *2012*-இல் திறக்கும் நிலை ஏற்பட்டது.

இவரது எழுத்தில் நேர்மைத் தன்மையும், திரிபுபடாமல் கருத்துகளைக் கூறிய தன்மையும், இத் திருத்தலத்தைப் பற்றிய வரலாற்றை இப்போதைய சந்ததியும் வருங்கால சந்ததியும் அறியக்கூடியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. வைத்தியர் அவர்களின் இம் முயற்சியைப் பாராட்டுவதுடன் மேலும் பல ஆவணங்களை உருவாக்க காளியம்மன் அருள் கிடைக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன். வளர்க அவர் பெரு முயற்சி.

நன்றி.

அன்புடன்
**திரு. ந. பிரதீபன்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
மூதூர், திருகோணமலை
இலங்கை

*2014-10-23*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை.

ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ තරුණ හින්දු මහා සංගමය.

FEDERATION OF TRINCOMALEE DISTRICT YOUNG MEN'S HINDU ASSOCIATIONS

TDYMHA

Founded :- 20-04-1974
Regd. No:-HA/04/TM/06 – DS/TG/VSO/18

தொலைபேசி / දුරකථන / Telephone : +94 026-2222719
தொலைநகல் / ෆැක්ස් / Fax : +94 026-2222719

294, உட்துறைமுக வீதி, திருக்கோணமலை. இலங்கை
294, ඇතුළු වරාය පාර. ත්‍රිකුණාමලය. ශ්‍රී ලංකාව.
294, Inner Harbour Road, Trincomalee. Sri Lanka.

# வாழ்த்துரை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராலும், அருணகிரிநாத சுவாமிகளாலும் புகழ் பாடப்பெற்ற தெட்சண கயிலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்தின் பரிபாலனத்தை இலகுவாகக் கையாள்வதற்காக திருக்கோணமலை மாவட்டத்தை கட்டுக்குளப்பற்று, தம்பலகமப்பற்று, கொட்டியாபுரப்பற்று என மூன்று பிரிவுகளாகப் பிரித்து பரிபாலனம் செய்த சோழ மன்னர்கள் திருக்கோணேஸ்வரத்தின் தொழும்பர்களான புலவன் குடியையும், திருக்கோணேஸ்வரத்திற்குரிய பூசைப் பொருட்கள் அனைத்தையும் சம்பூரணமாக கோணேஸ்வரத்திற்கு எடுத்துச்செல்லப் பயன்பட்டதும், திருக்கோணேஸ்வரத்தின் ஏழு எல்லைக்காவல் தெய்வங்களில் ஒன்றாக ஸ்தாபிப்பதற்கு ஓடத்தில் எடுத்து வரப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றுப் பெருமைமிக்க கொட்டியாபுரத்தில் உள்ள சம்பூரணம் என அறியப்பட்டு சம்பூர் என மருவிவந்த பழம்பெரும் சைவக்கிராமத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் எல்லாம் வல்ல சர்வலோக நாயகியாம் அன்னை அருள்மிகு சம்பூர் பத்திரகாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளின் பெருமைமிக்க வரலாறு மற்றும் இது சார்ந்த சம்பிரதாயங்கள் விரதங்கள், காவியங்கள், பாடல்கள் என்பனவற்றைக் கொண்டதாக வெளிவரும் இந்நூல் தற்போதைய காலகட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே நோக்கப்படுகின்றது.

இப்பெரும் பணியை தனது அயராத முயற்சியினால் மேற்கொண்டுவரும் வைத்திய கலாநிதி திரு.அ.ஸதீஸ்குமார் அவர்கள் இது போன்ற பல சமய நூல்களைப் படைத்து இந்து சமய வளர்ச்சிக்கு மென்மேலும் பணியாற்ற வேண்டும் என வேண்டிக்கொள்வதோடு அனைத்து இந்துப் பெருமக்களும் இந்நூலைப் படித்து அருள்மிகு சம்பூர் பத்திரகாளி அம்பாளின் வரலாற்றுப் பெருமைமிக்க பாரம்பரியங்களை அறிந்து கொள்ள வேண்டும் எனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்வதுடன் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் அன்புடன் தெரியத்தருகின்றோம்.

நன்றி.

இவ்வண்ணம்
இந்து சமயப் பணியில்
**செ. விஜயசுந்தரம்,**
மதிப்பார்ந்த பொதுச் செயலாளர்
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை

*30.10.2014*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

திருகோணமலை தேசம் ஒரு புண்ணிய பூமி. சிவபூமி. இங்கு பிறக்கவும் வாழவும் பெரும்பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்பது சைவத் தமிழறிஞர்களின் கருத்தாகும். அடிக்கொரு லிங்கத்தைக் கொண்டுள்ளதாகக் கூறப்படும் இத் தேசத்தில் எண்ணிறந்த பல ஆலயங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் நடுநாயகமாக விளங்குவது தென் கயிலாய பதியான திருக்கோணேஸ்வரம் ஆகும். இத் திருக்கோணேஸ்வரத்தின் தொழும்புகளுக்காக குளக்கோட்டு மன்னனால் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட குடிமக்கள் வாழுகின்ற "சம்பூர்" என்னும் சைவத் தமிழ் கிராமத்தின் கண்ணே கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள 'அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்' பற்றிய வரலாற்றுச் சிறப்பையும் அதனோடிணைந்த பாரம்பரியங்களையும் குறிப்பிட்ட அளவிலேனும் வெளிக்கொண்டுவரும் இச்சிறு நூலில் கருத்து வேறுபாடுகள் இருப்பின் அதை அறியத்தந்து, சைவத் தமிழ் சமூகம் இந்நூலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வேண்டுகின்றேன்.

சம்பூரைக் காக்கும் தாயாக கோவில் கொண்டுள்ள பத்திரகாளித் தாயின் அரும்பெரும் சிறப்புகளையும், அற்புதங்களையும் தாங்கி வெளிவருகின்ற இம் முதலாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலினை நிறைவு செய்கையில் நெஞ்சில் இனம்புரியாத ஓர் ஆத்ம திருப்தியை உணருகின்றேன். காலத்தின் கட்டாயமாக வெளிவரும் ஒரு நூலாகவே இதை நான் கருதுகின்றேன். "ஒரு எழுத்தாளன் தன் சமூகம் சார்ந்த பிரதான நெருக்கடிகளை பகிரங்கமாக விவாதிக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திலும் கடப்பாட்டிலும் இருக்கிறான். தன் வாழ்வு சார்ந்து கண்டறியும் உண்மைகளை மக்கள் முன் பகிரங்கப்படுத்துவதன் மூலம் எமது அடிப்படைப் பிரச்சினைகளை நாம் மட்டுமல்ல, பல்வேறு பின்னணிகள் கொண்ட பலரும் உணர்ந்து தெளிவடைய முடியும். இதன்மூலம் நம் மக்களின் வாழ்வில் மறைக்கப்பட்ட பல உண்மைகள் துலக்கம் பெறும் என்று எனது முதலாவது ஆக்கமான "சம்பூர் பிரதேசத்தின் தொன்மை" (2013) என்னும் நூலுக்கான அணிந்துரையை வழங்கிய முதுபெரும் எழுத்தாளரும், திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபை செயலாளருமான திரு. க. அருள்சுப்பிரமணியம் ஐயா அவர்களின் கூற்றுக்கு இச்சிறு நூல் சிறிதளவேனும் பங்காற்றியுள்ளது என்று நினைக்கின்றேன்.

அத்தோடு இந்நூலுக்கு தனது நல்லாசிகளைக் கூறி ஆசியுரை வழங்கும் அம்பாள் ஆலய பூசகர் சிவஸ்ரீ இ. கோபாலசிங்கம் குருக்கள் ஐயா அவர்களுக்கும்; வாழ்த்துரை வழங்கிய சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் காரியப்பருமான திரு. துரை. கிருபைராஜ் அவர்களுக்கும்; சிறப்புரைகளை மனமுவந்தளித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரை ரெட்ணசிங்கம் மற்றும் மூதூர் பிரதேச செயலாளர் திரு. ந. பிரதீபன் அவர்களுக்கும் எனது உள்ளங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இத் திருகோணமலை மண்ணிலே இந்து மதம் சிறப்புற்று செழித்தோங்க அயராது பாடுபடும் திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் திரு. செ. விஜயசுந்தரம் மற்றும் கொட்டியாபுரப்பற்று இந்துசமய அபிவிருத்தி ஒன்றிய தலைவர் திரு.க. வெற்றிவேல் ஆகியோர் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கியமைக்காக அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பத்திரகாளி அம்பாள் மீது பாடப்பட்ட காவியங்கள் மற்றும் பாடல்களை பல சிரமங்களுக்கு மத்தியிலும் மனமுவந்து வாய்மொழியாகவும், எழுதியும் தந்து இந்நூல் சிறப்பாக வெளிவர ஊக்கப்படுத்திய அனைவருக்கும், இவ் ஆலய வரலாறு பற்றிய எனது சந்தேகங்களை தெளிவுபடுத்திய பூசகர்களான திரு. இ. பத்மநாதன், திரு. க. சிவநேசன் மற்றும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. துரை கிருபைராஜ் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக இந்நூலை வெளிக்கொண்டு வருமாறு என்னைத் தூண்டியதுடன் உந்துசக்தியாகவும் இருந்த என் மனைவி மேனகா, நண்பர்களான சம்பூர் அரவிந்தன் மற்றும் சேனையூர் அச்சுதன் ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள்.

நன்றி.

என்றும் அன்புடன்
தேசமான்ய வைத்திய கலாநிதி
**அ.ஸதீஸ் குமார்**
சம்பூர், மூதூர்,
திருகோணமலை,
இலங்கை.

*14.11.2014*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## தல வரலாறு

இலங்கையின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான கிராமங்களின் வரலாறானது திருக்கோணேஸ்வரப் பெருமானுடன் தொடர்பு பட்டனவாகவே காணப்படுகின்றன. அந்த வகையில் பத்திர காளித் தாயானவள் தானே விரும்பி காட்டுத் தென்னை மரத்தின் கீழ் அமர்ந்துள்ள "சம்பூர்" என்னும் தமிழ் சைவக் கிராமமும் திருக்கோணேஸ்வரப் பெருமானுடன், அப்பெருமானுக்குப் பெருந்தொண்டாற்றிய குளக்கோட்டு மகாராசனுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக வுள்ளதை "கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசர் சாசனம்" மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. கி.பி. பதினாறாம் நூற்றாண்டளவில் தோன்றியதாகக் கொள்ளப்படும் திருக்கோணேஸ்வரர் புகழ்பாடும் இக்கல்வெட்டு சாசனம் இலங்கையில் தோன்றிய ஆதியான தமிழிலக்கியங்களுள் முதன்மையானதாகும். அத்தோடு சம்பூர் பிரதேசத்தில் குளக்கோட்டு மன்னன் மற்றும் திருக்கோணேஸ்வரம் தொடர்பான பல செவிவழிக் கதைகளும் உலவுகின்றன.

இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து திருக்கோணேஸ்வரத் திருப்பணிக்காக குளக்கோட்டு மன்னனால் அழைத்துவரப்பட்ட புலவர் தலைமையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்களுக்காக உருவாக்கப்பட்ட கிராமமே சம்பூர் ஆகும். கோணேசர் கல்வெட்டு சாசனத்திலுள்ள "புலவன் வரவு" என்னும் பகுதியில் இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது:

"செகராசரடிபரவு திருக்குளக்கோட்டு மகாராசன் காஞ்சிபுர சிவாலயத்திற்குச் சென்று, சிவதரிசனம் செய்து, துதி செய்து நிற்கும் தருணத்தில், தெய்வப் புலவன் சுவாமி திருமுன்னிலையினின்று சிவதோத்திரங்களோதுகின்ற ராகப்பண்ணையும், ஆசாரவலங்காரத்தையும் கண்டு தெய்வப் புலவனைப் பார்த்து உன் வங்கிஷத்தில் ஒரு பிள்ளை தரவேண்டுமென்று கேட்க, தெய்வப்புலவனும் அரசனுடைய பாதத்தில் விழுந்து நமஸ்காரம் பண்ணித் தேவரீர் அடியேனை ஒரு பிள்ளை தரச்சொல்லிக் கேட்டது என்ன காரியத்திற்கென்ன, இலங்காபுரியிலே திரிகயிலை நாதர் திருவாலயத்திற்கு முன்னின்று நாதகீதத்துடன் சிவதோத்திரமோதுதற்காகவென்று அரசன் சொல்ல, மிகவும் சந்தோஷப்பட்டுத் தன் குடியில் ஒரு குடித்தனமழைத்துக் கொடுக்க, அவர்களுடன் அரசன் திரிகயிலைக்கு வந்து நித்தியமுஞ் சிவாலயத்திற்றிகு முன்னே நாதகீதம் பாடத்திட்டம் பண்ணிப் பள்ளவெளியில் இரண்டவண விதைப்புத் தரையுங் கொடுத்துக் கொட்டியாபுரத்திற் சமுத்திரக் கரையருகாக ஒரு கிராமத்தை நல்லதோ என்று கேட்கப் புலவனும் பார்த்து நல்லவூர் அடியேனுக்குச் சம்பூரணமென்ன, அரசனும் மகிழ்ந்து அந்த வூருக்குச் சம்பூர் என்று பேரிட்டு எந்தக் காலத்துக்கும் உன் குடியில் மனுஷருக்குப் பரவணியாகத் தந்தோமென்று செப்புக் கம்பை போட்ட பத்ததியுங் கொடுத்துக் கோயிற்றிரு வாசகப் புலவனென்று அரசனுரை நிறுத்தியது. அரசன் கூட்டிவந்த தெய்வப்புலவன் திருநாமம் சிவசித்திரப் பெருமாள் புலவன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் சம்பூர் கிராமத்தை குளக்கோட்டு மகாராசாவே தோற்றுவித்தாரென்பது வரலாற்றுண்மை. இது நிகழ்ந்தது கலியுக வருடம் 512-களில் ஆகுமென கூறப்பட்டுள்ளது. திருக்கோணேஸ்வரர் ஆலயம் கி.பி. 1624-இல் போர்த்துக்கீசரால் இடித்தழிக்கப்பட்டபோதும், தம்பலகாமத்திலுள்ள ஆதிகோணைநாயகர் கோவிலில் குளக்கோட்டு மன்னனால் ஏற்படுத்தப்பட்ட சிவதோத்திரமோதும் நடைமுறை இன்று வரையும் சம்பூர் "புலவன் குடி" மக்களால் தொடரப்பட்டு வருகின்றது.

இவ்வாறு கோணைநாயகருக்காக குளக்கோட்டு மன்னனால் கொண்டுவரப்பட்ட குடிமக்களுக்குரியதான சம்பூர் என்னும் பெயர் கொண்ட கிராமத்தில் குடியிருப்புகளின் எல்லைப்புறமாக அமர்ந்துகொண்டு, ஊரைக் காத்தருள்கின்ற காளித்தாயின் புகழ் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்லாது அதற்கு வெளியேயும் பரவியுள்ளது என்பதற்கு இக்கோவிலுக்கு தினமும் வருகின்ற அடியவர்களே சான்று.

இப்பத்திரகாளி ஆலயத்திற்கு முன்பாக அழகிய பசுஞ்சோலைகள் நிறைந்ததும், வெண்டாமரைகளைக் கொண்டதுமான வில்லுக்குளம் காணப்படுகின்றது. வில் போன்ற வளைவைக் கொண்டதாக இக்குளம் காணப் படுவதனால் இதற்கு "வில்லுக் குளம்" என்ற பெயர் ஏற்பட்டது. இக்குளத்தையும் குளக்கோட்டு மன்னனே அமைத்ததாகவும், கந்தளாய் குளத்தைப் போல இவ் வில்லுக்குளத்தையும் அமைக்க பூதங்களைக் கொண்டே பாரிய கற்களை இங்கு கொண்டுவரப்பட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இப்பாரிய கற்கள் இன்றும் காணக்கூடியதாகவுள்ளது.

தண்மையான சோலைகள் நிறைந்த, அமைதியான இவ்விடத்திற்குச் சில கிலோ மீற்றர்கள் தொலைவிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணிக்கல் கடற்கரை, நல்ல தண்ணீர் கல், மத்தளமலை, நெய்மலை போன்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று சம்பூர் கிராமத்தின் மக்கள் உள்நாட்டிலே போரால் இடம் பெயர்ந்தவர்களாக, 2006-ஆம் ஆண்டிலிருந்து அகதி முகாம் வாழ்வை கிளிவெட்டி, பட்டித்திடல், மணல்சேனை மற்றும் கட்டைபறிச்சான் ஆகிய நான்கு அகதிகள் நலன்புரி நிலையங்களில் கழித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் சம்பூர் காளித்தாய் ஒன்றையே நம்பிய வண்ணமுள்ளனர். ஏனெனில் இவர்கள் தங்களது சொந்த கிராமமான சம்பூரில் மீளவும் குடியேறி வாழ அவளால் மட்டுமே முடியுமென்பது இவர்களனைவரதும் நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# குளக்கோட்டன் திருப்பணிக் காலம்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திருகோணமலைப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகாமப்பற்று, கட்டுக்குளம்பற்று முதலான நான்கு பற்றுகளிலும் மக்களைக் குடியேற்றி, வயல் நிலங்கள், குளங்கள் ஆகியனவற்றை ஏற்படுத்தி திருக்கோணேஸ்வரப் பெருமானுக்குக் கோவில் திருப்பணிகள் பல செய்து பெருந்தொண்டாற்றிய குளக்கோட்டு மகாராஜாவின் ஆட்சிக்காலம் பற்றி பலவாறான தகவல்கள் பல்வேறு நூல்களிலும் காணப்படுகின்றன.

குளங்கள் பலவற்றை வெட்டியும் கோட்டங்களை (கோவில்) உருவாக்கியும் அரசாட்சி புரிந்ததன் காரணமாக குளக்கோட்டன் என்னும் பெயர் வழங்கியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இம்மன்னனின் இயற்பெயர் சோழகங்கன் அல்லது சோடகங்கனாக இருக்கலாம் என்றொரு கருத்தும் நிலவுகின்றது. குளக்கோட்டு மகாராஜாவின் திருப்பணிகள் சிலாபம் முன்னேஸ்வரம், திருக்கரைசையம்பதி, மட்டக்களப்பு என்னுமிடங்களில் இடம்பெற்றுள்ளதாக வரலாறுகள் கூறுகின்றபோதிலும் பெருமளவிலான செயற்பாடுகள் திருக்கோணமலை திருக்கோணேஸ்வரம் சார்ந்ததாகவே அமைந்துள்ளதை பழந்தமிழ் இலக்கியங்கள் (இலங்கை), கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய இந்தியாவின் சோழ நாட்டையாண்ட மனுநீதிச் சோழன், வீதிவிடங்கன், பிரியவிருத்தன், வரராமதேவர் ஆகியவர்களுக்குப் பின் குளக்கோட்டன் பெயர் இடம்பெறுவதாக ஈழத்து சைவப் புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் "திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்" எனும் நூலில் கூறியுள்ளார். கோணேசர் கல்வெட்டு கலி பிறந்து 512 ஆண்டுகள் என்று கூறுகின்றது. அதாவது கி.மு. 2590 ஆகும். யாழ்ப்பாண சரித்திரம் எழுதிய திரு. செ. இராசநாயகம் முதலியார் சக வருடம் 358 அதாவது கி.பி. 436 என்கிறார். மட்டக்களப்பு மான்மியத்தில் (பதிப்பாசிரியர் திரு. F.X.C. நடராசா அவர்கள்) கலி பிறந்து 3180 ஆண்டுகள் எனக் கூறப்பட்டுள்ளது. சில வரலாற்றாய்வாளர்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்கிறார்கள்.

ஆனால் எது எவ்வாறு இருப்பினும் குளக்கோட்டு மாமன்னன் இந்தியாவில் இருந்துவந்து திருகோணமலையில் செய்த ஆலய திருப்பணிகள், ஏற்படுத்திய நீதி நிர்வாக கட்டமைப்புகள் காரணமாக குளக்கோட்டன் மகாராஜா பெயர் கூறாமல் திருகோணமலை வரலாறு பூரணமாகாது என்பதே உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# தாய்த்தெய்வ வழிபாடு

திருகோணமலை தேசத்திலே பல எண்ணிக்கையிலான சிறியதும் பெரியதுமான ஆலயங்கள் பண்டைக் காலத்திலிருந்து இக்காலம் வரை காணப்படுகின்றன. தெட்சண கயிலாயமான திருக்கோணேஸ்வரத்தை தலைமையகமாகக் கொண்டே பல ஆலயங்களும் பல கிராமங்களும் தோற்றம் பெற்றன என்பது வரலாறு.

அந்த வகையில் கொட்டியாபுரப்பற்று என்று அன்றைய நாட்களில் அழைக்கப்பட்டதும் இன்று மூதூர் என்று அழைக்கப்படுவதுமான பிரதேசத்தில் உள்ள பழந்தமிழ் சைவக்கிராமமான சம்பூர்பதியின்கண்ணே எழுந்தருளி யிருந்து, வேண்டும் வரங்களை ஈந்தருளும் தாயாகிய அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளும் திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கான எல்லைக் காவல் தெய்வங்களுள் ஒன்றாகவே அமைந்துள்ளமையை நாம் அறிய முடிகின்றது. இதேபோல சம்பூர் கிராமமும் கோணேஸ்வரர் கோவிலில் புலமை பாடும் மக்களுக்காகவே குளக்கோட்டு மன்னனால் உருவாக்கப்பட்டமையையும் ஆதாரபூர்வமாக அறியக் கூடியதாகவுள்ளது. காளிக்கும் புலவனுக்கும் புலமைக்கு மான தொடர்பில் இந்துக்களிடையே வேற்றுமை காண்பது அரிதான செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்த்தெய்வ வழிபாடு என்பது இன்று நேற்று தோன்றிய ஒன்றல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வழிபாடு இடம் பெற்றுள்ளமையை அகழ்வாராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. சங்க காலத்திற்கு முன்னரே அதாவது சிந்துவெளி நாகரிக காலப் பகுதியில் (கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னர்) சிவன், தாய்க் கடவுள் சிவலிங்கம் ஆகிய வழிபாடுகள் இடம் பெற்றுள்ளமையை அகழ்வாராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர். இக்கடவுள்களின் உருவங்கள் களிமண்ணினால் செய்யப்பட்டு சூளையில் சுடப்பட்டு கெட்டியாக்கப் பட்டிருக்கின்றன. பழந்தமிழர்களின் போர்த்தெய்வமாகிய கொற்றவையும் தாய்த்தெய்வமே. இதைவிட துர்க்கை, காளி, பத்திரகாளி, மாரி, பேய்ச்சி (பேர்+ஆச்சி) - (பெரிய-ஆச்சி) பத்தினி தெய்வங்களும் இவற்றுள் அடங்கும்.

சம்பூரில் பத்திரகாளி அம்மன், கட்டைபறிச்சானில் அம்மச்சியம்மன், நீலாப்பளையில் பத்தினியம்மன், இலங்கைத் துறையில் செண்பக நாச்சியம்மன், இலங்கைத் துறைமுகத்துவாரம் கல்லடியில் மலை நீலியம்மன், கிளி வெட்டி முத்துமாரியம்மன், சேனையூர் வராகி அம்மன், நவரெட்ணபுரம் படபத்திரகாளி அம்மன், சூடைக்குடா வீரமாகாளி அம்மன், கூனித்தீவு காளிகாதேவி, கொக்கட்டி காடேறியம்மன், மேன்காமம் அபிராமியம்மன் போன்ற பிரசித்தமான அம்மன் ஆலயங்கள் கொட்டியாபுரப்பற்றில் அமைந்துள்ளன. இவற்றில் பலவற்றிற்கு நூற்றாண்டுகள் பல கடந்த புராதனம் உண்டு. இவ்வாலயங்கள் சிலவற்றிலுள்ள சிலைகள் (சம்பூர், கட்டைபறிச்சான், இலங்கைத் துறையிலுள்ளவை) புடைப்பு கருங்கற் சிற்பங்களாக அமைந்துள்ளன.

மேற்கூறிய ஆலயங்கள் பலவற்றில் முற்காலங்களில் ஆகம முறை சாராத பூசை வழிபாடுகளே நடைபெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளன. பிரமணரல்லாத ஊரவர்களே நேரடியாக தெய்வங்களுக்கு வழிபாடியற்றினர். விலங்கு பலியிடல் முறையுடன் கூடிய வழிபாடுகளும் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

கடவுளை அன்னையாகப் பாவனை செய்து அம்மா! தாயே! ஆச்சி! ஆத்தா! என கூறியழைத்து துன்பங்களை அகற்றி பாதுகாக்கும்படி வேண்டியழைக்கின்ற தாய்த் தெய்வ வழிபாட்டில் அக்காலம் முதல் இக்காலம் வரை மக்கள் ஈடுபட்டு வருவது சிறப்புக்குரியது.

தமிழ்நாட்டிலே காளி வணக்கமுறை எப்போது தோன்றியது என வரையறுத்துக் கூறமுடியாதுள்ளதாக கருதப்படுகின்ற போதிலும் சோழ மன்னர்கள் காலத்திலேயே காளிக்குக் கோவில் கட்டப்பட்டு காளி வணக்கமுறை சிறப்புற்று விளங்கியதையும் அறிய முடிகின்றது. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழப் பெருமன்னன் விஜயாலயச் சோழன் நிகம்பசூதனி என்ற துர்க்கைக்கு கோவில் எடுத்த செய்தி அவனது சாசனங்கள் மூலமாக அறியப்படுவதாக கூறப்படுகின்றது. இக்காலத்திலே இதன் தாக்கம் இலங்கைக்கும் பரவியிருக்க இடமுண்டு. இருப்பினும் திருகோணமலையில் பல்லவர் காலத்திற்குரியதான புடைப்புச் சிற்பங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றதாகக் கூறப்படுகின்றது.

இந்து மதமானது பல உட்பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பவையே அவையாகும். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் சைவர்களாவர். விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் வைணர்களாவர். இதே போல சக்தியை, கணபதியை, முருகனை, சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் முறையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்தர்கள், காணாபத்தியர்கள், கௌமாரர்கள், சௌரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இன்று சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன சைவத்துடன் கலந்துவிட்டதாகவும், வைணவம் மட்டும் தனித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

சக்தியை பிரதான தெய்வமாக வணங்கும் சாக்தர்கள் இந்தியாவில் வங்காளத்திலேயே அதிகளவில் உள்ளனர். ஆனால் உலகின் பல பாகங்களிலும் சக்தி ஆலயங்கள் அமைக்கப்பட்டு சக்தியை வழிபடுவோர் பலருளர். இலங்கையிலும், குறிப்பாக கிழக்கிலங்கையானது சக்தி வழிபாட்டுக்கு பெயர்போனது. மிக அதிகளவிலான சக்தி அதாவது அம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன. இவை பிரதான தெய்வங்களாகவும் பல சிறு தெய்வ வழிபாடுடையவையாகவும் உள்ளன.

சக்தியின்றி சிவமில்லை, சிவமின்றி சக்தியில்லை எனும் கோட்பாட்டுத் தத்துவத்தை சைவர்களாகிய நாம் பின்பற்றுகின்றபோதிலும் ஒரு குழந்தை எவ்வாறு தனது தாயை அன்போடும் பலவித எதிர்பார்ப்புகளோடும் அணுகுகின்றதோ, அவ்வாறே நாமும் அன்னையாகிய ஆதிபராசக்தியை பலவித வடிவங்களாக ஆவாகனம் செய்து அணுகுகின்றோம். சக்தியின் முக்கியத்துவத்தை நமது வாழ்வியல் நடைமுறையிலும் உபயோகிக்கின்றோம். உதாரணமாக, ஒருவரிடம் நாம் ஏதாவது செய்யும்படி வேண்டும்போது "சக்தி இருந்தால் செய் அல்லது சிவனே என்று கிட..." என்று பேச்சு வழக்கில் பாவிப்பதிலிருந்து அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் கடவுள்

தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை

தன்னலமற்றது தாயின் நெஞ்சம்
தாய்மை நிறைந்தது கடவுளின் நெஞ்சம்
மண்ணுயிர் காத்தவர் மாந்தருள் தெய்வம்
அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்

பொறுமையில் சிறந்த பூமியும் உண்டு
பூமியை மிஞ்சும் தாய்மையும் உண்டு
கோவிலில் ஒன்று குடும்பத்தில் ஒன்று
கருணையில் தாயும் கடவுளும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

## ஆலய வரலாறு

ஈழத்தில் புகழ்வாய்ந்த அம்மன் ஆலயங்களுள் திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்திலுள்ள சம்பூர் என்னும் பழம்பெரும் சைவக் கிராமத்தில் விரும்பியமர்ந்துகொண்டு அருள் நல்கும் "அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும்" ஒன்றாகும்.

சக்தி வழிபாட்டுக்குப் பிரசித்தி பெற்ற கிழக்கிலங்கையிலே அம்மன் வழிபாடு பல்வேறு பெயர்களில் சிறப்புற நிலவி வருகின்றது. பெரியதும் சிறியதுமான பல அம்மன் ஆலயங்களை பயங்கலந்த பக்திப் பரவசத்துடன் சைவ அடியார்கள் வணங்கி வழிபாடு செய்து வருவதை இன்றும் நாம் காணலாம். இவ்வாறான நிலையில் சம்பூர் மக்கள் இவ் அம்மனை பத்திரகாளியாக வழிபட்டு வருகின்றனர். இவ் ஆலயத்தின் வரலாற்றை எடுத்தியம்பும் முதல் நூலாக, 1990களில் இக்கோவிலில் நவக்கிரக தேவர்களின் மகா கும்பாபிஷேகத்துக்காக வெளியிடப் பட்ட, "சம்பூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் நவக்கிரக தேவர்களின் கும்பாபிஷேக மலர்" என்னும் நூல் விளங்குகின்றது.

இவ்வூர் ஏராளர் கையேந்தி இரவு பகலாய் துதிக்கின்ற இப் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் அரிய வரலாறுகள் சில ஏட்டுப் பிரதிகளில் பெட்டகம் ஒன்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் அவை 1964 ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட அகோரப் புயலின் விளைவாக சிதைவுண்டு காணாமல் போனதாகவும் பெரியவர்கள் கூறுகின்றனர். எனினும் பரம்பரை பரம்பரையாக இவ்வூர் மக்களால் கூறப்படும் செவிவழிக் கதைகளைக் கொண்டு அம்பாளின் வரலாற்றை அறிய முடிகின்றது.

திருகோணமலை கோண நாயகர் ஆலயத் திருப்பணிகள் குளக்கோட்டு மன்னனால் பூர்த்தி செய்யப்பட்ட பிற்காலங்களில் இந்திய சிற்பிகளைக் கொண்டு சில விக்கிரகங்கள் கல்லிலே வடிக்கப்பட்டன. இவையாவன: பத்திரகாளி, பிள்ளையார், காளி, வைரவர், பத்தினியம்மன், செண்பகநாச்சியம்மன் என்னும் பெயர் தாங்கிய சிலைகளாகும். இத் தெய்வச் சிலைகள் ஓடமொன்றின் மூலம் கோணேசர் மலைக்குத் தென்கிழக்குப் புறமாய் அமைந்த சம்பூர் கிராமத்தின் கெவுளிமுனை கடற்கரைப் பகுதிக்கு திசைமாறி கொண்டு வரப்பட்டு, இங்குள்ள ஓர் மலையில் மேற்படி சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இப்பகுதிக்குப் பொறுப்பாயிருந்த வன்னிமை என்பான் வணங்கி வந்ததாக முதியவர்கள் கூறுவர். இவ்வாலயம் அமைந்த மலை களஞ்சிய சாலைகளைக் கொண்ட மத்தள மலை ஆகும். (திருக்கோணேச்சரநாதர் கோவில் திரவியங்களின் ஒரு பகுதி இம்மத்தள மலையிலே சேகரித்து வைக்கப்பட்டிருந்தது என்பதை கோணேசர் கல்வெட்டு சாசனத்தில் திரவிய இருப்பு என்னும் தலைப்பின் கீழ் காணலாம்.) இம்மலை மத்தள வடிவில் அமைந்ததால் இப்பெயர் பெற்றது என்று கூறப்படுகின்றது. அத்தோடு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இம்மலையில் இரவு வேளைகளில் மத்தள ஒலி முழங்கியதாகவும் பல கதைகள் இப்பகுதியில் வழங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்களை ஏற்றிக்கொண்டு வந்ததாகக் கூறப்படும் தோணி சம்பூர் கடற்கரையருகே கல்லாக சமைந்த நிலையில் காணப்படுகிறது என இப்பிரதேச மக்கள் கூறுவர். இக்கல்லாலான தோணியும், மத்தள மலையும் சம்பூர் கடற்கரை அருகே இன்றும் காணப்படுகின்றன. மத்தள மலையில் ஸ்தாபிக்கப்பட்ட விக்கிரகங்கள் காலத்தின் விளைவினால் பல இடங்களுக்கும் இடம்பெயரப்பட்டுச் சென்றிருக்கின்றன. அவற்றில் பத்திரகாளி அம்மன் சிலை சம்பூரிலும், பத்தினியம்மன் சிலை நீலாப்பளையிலும், செண்பக நாச்சியம்மன் சிலை இலங்கைத்துறையிலும் (தற்போது இதன் பாதப்பகுதி இலங்கைத் துறையிலும், பாதங்கள் தவிர்ந்த சிலை ஈச்சிலம்பற்றை கிராமத்திலும் உள்ளது.) அம்மச்சியம்மன் சிலை கட்டைபறிச்சானிலும், எல்லைக் காளியம்மன் சிலை பன்குளத்திலும், கண்ணகியம்மன் சிலை அம்பாறை தம்பிலுவில் என்னும் இடத்திலும் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (இவற்றுக்கான ஆதாரங்கள் எழுத்துருவில் கிடைக்கப் பெறாமையால் இவற்றை உறுதி செய்ய முடியாதுள்ளது.)

இன்னுமொரு செவிவழிக் கதைகளின் பிரகாரம் இவ்வாறு தென்னிந்தியாவிலிருந்து பல விக்கிரகங்களை ஏற்றிக்கொண்டு இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்த தோணி இலங்கையின் கிழக்குக் கடலினூடாக வடக்கு நோக்கி சென்றுகொண்டிருக்கும்போது இலங்கைத்துறை என்னுமிடத்திற்கு அப்பால் செல்லமுடியாது அவ்விடத் திலேயே தரித்து நின்றது. தோணியிலுள்ள அனைவரும் கடலிலேயே இரவைக் கழிக்க நேரிட்டது. அவ்வேளையில் படகோட்டியின் கனவில் குறிப்பிட்ட ஒரு விக்கிரகத்தை இலங்கைத் துறையில் இறக்கிவிடுமாறு கூறப்பட்டதற் கிணங்க விக்கிரகமொன்று (செண்பகநாச்சியம்மன்) இங்கு இறக்கப்பட்டது. பின்னர் படகோட்டி ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்களுடன் வடக்கு நோக்கி பயணமாகியதாகவும், இத்தோணியானது சம்பூர் கெவுளி முனை கடற்கரையை அண்மித்ததும் கரை தட்டி கல்லாக மாறிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

(இதே கருத்தைக் கூறுகின்ற இலங்கைத் துறை, ஈச்சிலம்பற்று பிரதேச மக்கள் இதற்கு மேலதிகமாக இன்னுமொரு செவிவழிக் கதையையும் தெரிவிக்கின்றனர். இவ்வாறு இலங்கைத் துறையில் இறக்கிவிடப்பட்ட விக்கிரகத்துடன் ஏழு குடி மக்களும் இங்கு இறங்கியதாகத் தெரிவிக்கின்றனர். இவர்களின் பாவனைக்கென தனித்தனியானதான ஏழு குளங்கள் பயன்படுத்தப்பட்டன. இக்குளங்களை இன்றும் இலங்கைத் துறையில் காணலாம்.)

பத்திரகாளி அம்மன் விக்கிரகம் சம்பூர் கிராமத்தில் தற்போதுள்ள ஆலயத்திற்கு எழுந்தருளிய வரலாறு அற்புதமானது. காலங்கள் பல உருண்டோடிய பின்னர் ஒரு நாள் இரவு சம்பூரிலுள்ள அன்பர் ஒருவரின் கனவில் தோன்றிய தேவி தான் சிலையாக இருக்குமிடத்தைக் கூறி தன்னை ஒரு சோலையில் காட்டுத் தென்னை மரத்தின் கீழ் வைக்கும்படி கூறியதோடு, அவ்விடத்தையும் காட்டி மறைந்தாள். அவ் அன்பர் அதிகாலையில் எழுந்ததும் ஊர் மக்களையும் பெரியவர்களையும் கூட்டி விடயத்தைக் கூறினார்.

மக்கள் அனைவரும் காரியப்பர் தலைமையில் மல்லிகைப்பூ, பசு நெய், தேன், தாவரத் தண்டு, சந்தனக் கட்டைகள், வில்வம் என்பனவற்றை கெவுளி முனையிலிருந்து திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு ஓடத்தின் மூலம் எடுத்துச் செல்கின்ற மீகாமனின் உதவியுடன் குறிப்பிட்ட இடத்தை அடைந்து பார்த்தபோது, என்ன அதிசயம்! அங்கே அம்பாள் கம்பீரமான தோற்றத்துடன் கனவில் கூறியிருந்தவாறு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீற்றிருந்த விக்கிரகம் காணப்பட்டது. தம்மைக் காக்க அன்னையே நாடி வந்ததையிட்டு பெருமகிழ்வும் பெருமிதமும் கொண்டனர் மக்கள். பின் அன்னையை வேண்டி விக்கிரகத்தை எடுத்துச்செல்லத் தூக்கியபோது அது சிறிதளவும் அசைந்து கொடுக்கவில்லை. அனைவரும் பலமுறை முயன்றும் முடியாமல் போய்விட்டது. இதனால் வந்தவர்கள் தாம் ஏதும் பிழையாக நடந்து விட்டோமோ என்று வருந்தி, அன்னையைப் பிரிந்து செல்ல முடியாமல் மிகவும் கவலையுடன் வீடு திரும்பினர்.

அன்றிரவு அன்னை மீண்டும் அவ்வன்பரின் கனவில் தோன்றி, "மங்கள மேள தாளங்களுடன் நிலபாவாடை விரித்து அழைத்தால் வருவேன்" என்று கூறி மறைந்தாள். விடிந்ததும் அவர் கனவை மக்களுக்குத் தெரியப்படுத்த, அவர்களும் ஊரை அலங்கரித்து நிறைகுடங்கள் வைத்து மேளதாளங்களுடன் குறிப்பிட்ட இடத்தை அடைந்து அன்னையை வணங்கிவிட்டுத் தூக்கினர். என்ன அதிசயம்! ஒரு சிலர் சேர்ந்து தூக்கியபோதும் விக்கிரகம் இலகுவாக நகர்ந்தது. பின்னர் நிலபாவாடை விரித்து அன்னையை சுமந்து கொண்டு சம்பூரில் பசுஞ்சோலைகளடர்ந்த குளக்கோட்டு மன்னனால் உருவாக்கப்பட்ட வில்லுக்குளத்தருகே, சிறிய தாவரமாகக் காணப்பட்ட காட்டுத் தென்னை மரநிழலில் இலை குழையால் பந்தலிட்டு அதன் கீழ் சிலையை தாபித்து வழிபட்டனர். இக்காலத்தில் காரியப்பராக திரு. கதிரவேலு என்பவர் இருந்ததாக அறிய முடிகின்றது. இவ்வாறு கூனித் தீவினூடாக எடுத்து வரப்படும்போது பத்ரகாளியின் ஒரு கலை "காளிகாதேவி"யாக அங்கே தங்கிவிட்டதென்பர்.

அன்று முதல் சில காலம் வரை திரிய காரியப்பர் குடியைச் சேர்ந்த சைவ அன்பர்களே அம்பாளுக்கு பூசை செய்து வந்தனர். வாரத்தில் ஒரு நாள் செவ்வாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமைகளில் மட்டுமே பூசைகள் நடைபெற்றதாகவும், ஏழு சாடி பொங்கல் பொங்கி வழிபாடுகள் இடம்பெற்றதாகவும் பெரியோர் கூறுவர். இங்கு மார்கழி மாதம் ஆலயத்திற்குச் சென்று வணங்குதல் தவிர்க்கப்பட்டிருந்ததாகவும் இக்காலத்தில் அம்பாள் தவத்தில் இருப்பதாகவும் கூறுவர். பூசகர் மட்டுமே விடியற்காலையில் சென்று பூசை நைவேத்தியங்களை முடித்துவிட்டு வீடு திரும்புவார். இங்கு விலங்கு பலியிடும் சம்பிரதாயமும் காணப்பட்டது. இதுவே பூர்வீக வரலாற்றுடன் கூடிய பூசை நடைமுறைகளாகும்.

ஆரம்ப காலம் முதல் ஆலயத்தின் நிர்வாகத்தை ஏழு குடிகளின் தலைவர்களே நிர்வகித்து வந்தனர். பின்னர் மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாகவும், ஆலய வளர்ச்சியில் எல்லோரும் பங்குகொண்டு அன்னையின் அருளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் ஒவ்வொன்றாக மேலும் ஐந்து குடிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. தற்போதுள்ள தகவல்களின் படி பின்வரும் குடிகள் சம்பூரில் காணப்படுகின்றன. இவை தாய்வழி பாரம்பரியம் மிக்கதாகவே அமைந்துள்ளன.

1. திரிய காரியப்பர்குடி
2. புலவன்குடி
3, பெரிய காரியப்பர்குடி
4. இறையாத்துக்குடி
5. காப்புக்கட்டுக்குடி
6. திருமஞ்சள்நீர்குடி
7. இளங்குடி
8. பசுங்குடி
9. திருச்செட்டிக்குடி
10. வளர்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பாட்டுவாழிகுடி

12. சந்தானர்குடி.

காலம் செல்லச் செல்ல அன்னையின் அருள் எங்கும் பரவத் தொடங்கியபோது திருகோணமலை மாவட்டத்தி லிருந்து மட்டுமல்லாது இலங்கை நாட்டின் நாலாபுறங் களிலுமிருந்தும் மக்கள் இங்கு வந்து சம்பூர் பத்திரகாளி அம்பாளை வழிபட்டு தீராத பல பிணிகள், கவலைகளைப் போக்கிக் கொண்டனர். சைவ அடியார்கள் மட்டுமன்றி சிங்கள பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என அனைத்து மதத்தவர்களும் இங்கு வந்து வழிபடுவதை இந்த தசாப்தத்திலும் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு அருள்புரிந்த அம்மன்பால் மக்கள் கொண்ட அன்பின் காரணமாக ஓர் ஆலயம் அமைத்து அதில் அம்பாளை வைத்து வழிபட எண்ணி காட்டுத் தென்னை மரத்தின் அடியில் இருந்த அம்மன் விக்கிரகத்தை தூக்கியபோது, அதை சற்றும் நகர்த்த முடியாமல் இருந்தது. பின்னர் பேசும் தெய்வமாகிய பத்திரகாளி அம்பாளின் விருப்பத்தைக் கேட்டபோது, அவள் தான் காட்டுத் தென்னை மரத்தடியிலேயே இருக்க விரும்புவதாகவும், புதிய ஆலயம் அமைப்பதாயின் தன்னைப் போலமைந்த இன்னுமொரு சிலையை அமைத்து வழிபடுமாறும் கூறினாள்.

இக்காலத்திலே தம்பலகாமம் ஆதிகோணைநாயகர் கோவில் திருத்தல வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. எனவே, அவர்கள் மூலம் அன்னையைப் போலமைந்த புதிய விக்கிரகமும் ஏனைய சில விக்கிரகங்களும் வடிவமைக்கப்பட்டு, அவை சம்பூருக்குக் கொண்டு வரப்பட்டு, புதிதாக அமைந்த ஆலயத்தில் வைக்கப்பட்டு, 1970-02-08 அன்று பிரதிஷ்டை செய்யப் பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய ஆலயக் கட்டடம் அப்போதைய காரியப்பரான திரு. அகிலேசபிள்ளை அவர்கள் தலைமையில் கட்டிமுடிக்கப்பட்டபோதும் திரு. வ. குழந்தைவேல் காரியப்பர் அவர்கள் தலைமையிலேயே கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இக் கும்பாபிஷேகம் பற்றிய தகவல்கள் அன்றைய தினபதி பத்திரிகையிலும் *(1970-02-08)* வெளியாகியிருந்தது.

ஆகம முறை சாராது ஊரவர்களால் பூசை செய்யப்பட்டுவந்த அம்பாளுக்கு மூலஸ்தானம், மண்டபங்கள், கொடித்தம்பம் ஆகியவற்றை அமைத்து திருவிழாக்களை நடாத்தவும், சம்பூர் குடிவழி மக்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த அம்பாள் ஆலயத்தில் இவர்களோடு கூனித்தீவு, சூடைக்குடா, சேனையூர், கட்டைபறிச்சான் மக்களும் பங்குகொள்ளத் தக்கதாகவும் நிர்வாக முறை மாற்றியமைக்கப்பட்டது. அப்போதைய சம்பூர் மற்றும் கட்டைபறிச்சான் கிராம சபைத் தலைவர்கள் காரியப்பரான திரு. வ. குழந்தைவேல், திரு. சாம்பசிவ ஐயர் (மூதூர் D.R.O/இறைவரி உத்தியோகத்தர்), சம்பூரிலிருந்த குடிகளின் நிர்வாகிகள், ஊர்ப் பெரியவர்கள் ஆகியோரின் ஒத்துழைப் போடு அமைந்த ஆலய நிர்வாகத்தின் முதலாவது பூசைக்குரிய குருக்களாக கணபாடி குருக்கள் அவர்கள் நியமிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

ஒவ்வொரு பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை கும்பாபிஷேகம் என்ற வகையில் *1982-06-02* அன்று மீண்டுமொரு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் இவ்வாலயத்தில் நவக்கிரக தேவர்களுக்கான ஆலயம் அமைக்கப்பட்டு அப்போதைய காரியப்பரான திரு. வ. மாணிக்கராசா தலைமையில் *1990.01.29* அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆனால் *1994*-ஆம் ஆண்டு நடைபெறவிருந்த மகாகும்பாபிஷேகம் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக நடைபெறாமல் இருந்து அன்னையின் திருவருளால் 1997-03-24 இல் வெகு சிறப்பாக மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கும்பாபி ஷேகத்திற்கு திரு. வ. மாணிக்கராசா காரியப்பர் அவர்கள் தலைமை வகித்திருந்தார்.

சம்பூர் பத்திரகாளி ஆலயத்தின் மூர்த்தி, விருட்சம், தீர்த்தம் என்பன முறையே ஸ்ரீ பத்திரகாளி அம்பாள், காட்டுத் தென்னை மரம், சம்பூர் கடற்கரை ஆகும். மூலமூர்த்தியாக அம்பாளும், பரிவார மூர்த்திகளாக விநாயகர், முருகன், வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர் ஆகியோரும் உள்ளனர்.

நித்திய பூசை நடைபெறும் அம்பாளிற்கு ஒவ்வொரு வருடமும் பங்குனி உத்தரத்தன்று கொடியேற்றமும் அதைத் தொடர்ந்து பதினாறு நாட்கள் திருவிழாக்களும் நடைபெறுவது வழமை. திருவிழாக்களின் போது கொடியேற்றம் முதல் நாளும், இறுதி நாட்களில் தீர்த்தோற்சவம், பூங்காவனம் என்பனவும், அதைத் தொடர்ந்து வைரவர் பொங்கலும் இடம்பெறும். இவை தவிர ஏனைய ஒழுங்குகள் திருவுள சீட்டின் பிரகாரம் நடைபெறுகிறது. திருவிழாக் காலங்களில் தவில் நாதஸ்வர கச்சேரிகளுடன் கலை நிகழ்ச்சிகளும் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் உபயகாரர்களால் நடாத்தப்படும். பூங்காவனத்தன்று இரவு அம்பாளை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் வைத்து ஊஞ்சல் பாட்டு பாடப்படும்.

## திருவிழாக்கள் விவரங்கள்

1. புலவன்குடி
2. இளங்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வளர்குடி
4. பசுங்குடி
5. காப்புக்கட்டுக்குடி
6. பெரிய காரியப்பர்குடி
7. திருமஞ்சள்நீர்குடி
8. திருச்செட்டிக்குடி
9. இறையாத் தீவுகுடி
10. திரிய காரியப்பர்குடி
11. பாட்டுவாழிகுடி
12. சந்தாணர்குடி
13. மீகாமன் மக்கள்
14. விஸ்வகுல மக்கள்
15. சேனையூர் - கட்டைபறிச்சான் மக்கள்
16. பாரதிபுரம் மக்கள்.

இது தவிர கார்த்திகை விளக்கீடு தினத்தன்று அம்பாள் அலங்கரிக்கப்பட்டு சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா, கடற்கரைச்சேனை, கட்டைபறிச்சான், சேனையூர் முதலான கிராமங்களூடாக ஊர்வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பாள். இதன்போது ஊர்மக்கள் பிரதான வீதிகளில் பூரண கும்பங்களை வைத்து அம்பாளை வரவேற்று ஆராதிப்பர்.

இவ் ஆலயத்தின் சிறப்பைப் பற்றி கி.பி. 1600 காலப் பகுதிகளில் கொட்டியாபுரப்பற்று வன்னிமையாகவிருந்த "இருமரபுந்துய இளஞ்சிங்கம் வன்னிமை" காலத்தில் வாழ்ந்தவரும், தம்பலகாமப்பற்றைச் சேர்ந்தவருமான திரு. ஐ. வீரக்கோன் முதலியாரால் பாடப்பட்ட "வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல்" என்னும் நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வன்னமிகு கோணமலை வாசருக்கும் வாமமுறும்
அன்ன நடையாட்கு மபிஷேகஞ் செய்வமென்பார்
நீருலவு வாவிதிகழ் நீலாப்பளை யுறையும்
பாருலவு பத்தினிக்குப் பண்பாக நேருமென்பார்.
செய்ய சம்பூர் மேவுகின்ற தேவி பத்ரகாளி தனக்
கைய மற நேர்ந்திழை எய்யாயிழை கைக்
கட்டுமென்பார்
தென்வெருகன் மீதுறையுஞ் சித்திரவேலாயுதர் தம்
பொன்படியிலைஞ் நூறு பொன் வைப்போ
மென்றுரைப்பர்...''

*- வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்*

அதாவது கோணேசர் ஆலயத்திலே கோணமலை நாதருக்கும் நாயகிக்கும் நேர்த்திக்கடனாக அபிஷேகம் செய்தல், நீலாப்பளையிலுள்ள பத்தியம்மனை வேண்டி நேர்த்தி செய்தல், சம்பூரில் உள்ள பத்திரகாளி கோவிலில் நேர்த்தியாக இழை கட்டுதல், வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி கோவிலில் பொற்காசு நேர்த்தியாக வைத்தல் முதலிய கருமங்களை தேசத்தார் செய்வது வழமை என்று இற்றைக்குப் பலநூறு வருடங்களுக்கு முன்னரே கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக திருகோணமலை தேசத்திலே கையில் இழை கட்டி நேர்த்தி செய்யும் வழமை சம்பூர் பத்திரகாளி கோவிலில் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பிரசித்தமான முறையில் நடைபெற்று வருகின்றமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

இத்தகைய பெரும் சிறப்புகளுடன் இயங்கிவந்த இவ் ஆலயம் 2006-ஆம் ஆண்டு சித்திரை மாதம் இப்பகுதியில் இடம்பெற்ற ஆயுத மோதல்களுக்கிடையே அகப்பட்டு, ஆலயக் கட்டடங்கள் அனைத்தும் மீள்பாவனைக்கு உதவாத வகையில் சேதமுற்றிருந்தன. ஆலய மதிலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபுறத்தையும் அலங்கரித்த சிங்க உருவங்கள் இரண்டும் தொலைந்து விட்டன. மணிக்கூட்டுக் கோபுரம் சிறிய சேதங்களுடன் காணப்படுகின்றது. இவ்வளவு பாரிய தாக்குதல்களின் மத்தியிலும் பெரிதாக வளர்ந்து காணப்படுகின்ற காட்டுத் தென்னை மரத்திற்கோ அல்லது அதன் கீழேயுள்ள அம்பாள் விக்கிரகத்திற்கோ எதுவித சிறு சேதம் கூட ஏற்படவில்லை. இதைக் கண்ணுற்று அனைவரும் அம்பாளின் தெய்வீகத்தை எண்ணி மெய்சிலிர்த்து நிற்கின்றனர்.

ஆனால் இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து சம்பூர் கிராமத்திலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட சம்பூர் மக்கள் தமது வீடுகளுக்குச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து தினமும் பத்திரகாளி கோவிலில் பூசை வழிபாடுகளை நடாத்த அனுமதிக்கப்பட்டுள்ளமை சற்று ஆறுதலான விடயமாகவுள்ளது.

இச் சம்பூர் கிராம மக்கள் மீளவும் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் சென்று வாழவும், அம்பாள் ஆலயத்தை மீளக் கட்டி சீரும் சிறப்புமாக வைத்திருக்கவும் அம்பாளை நாள்தோறும் மக்கள் பிரார்த்தித்த வண்ணமேயுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

# பழைய பத்திரகாளி அம்பாள் ஆலயம் (பெட்டகத்து அம்பாள்)

சம்பூர் பிரதான வீதியிலிருந்து 100 மீ தூரத்தில் ஊரின் மத்தியில் ஆறாம் வட்டாரத்தில் அமைந்துள்ளது இவ்வாலயம். இது 1969 - 1970 காலப் பகுதியிலேயே தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. சம்பூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கான பூசை முறைகள் பெளராணிக முறையிலிருந்து நித்திய பூசை முறைக்கு மாற்றம் பெற்றபோது சிலர் அதனை விரும்பவில்லை. இருந்தபோதிலும் நாட்டிலுள்ள பெரும்பாலான கோவில்களில் கொடித்தம்பம், கோபுரங்கள் அமைக்கப்பட்டு பிராமணர்கள் பூசகர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில், தமது அம்பாள் கோவிலையும் அவ்வாறே அழகு பார்க்கவும், திருவிழாக்களை நடாத்தவும் விரும்பிய ஊர்மக்கள் இம்முறையை ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதவராக அப்போதிருந்த காரியப்பர்களுள் ஒருவரான திரு. கந்தப்பு அவர்கள் காணப்பட்டார். இதே சமயத்தில் அவரை குணப்படுத்த முடியாத நோயொன்று பீடித்தது. பலராலும் குணப்படுத்த முடியாது வருந்திய அவர், பத்திரகாளி அம்பாளின் அருள்வாக்குக்கு இணங்க, அம்மனுக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணங்கள், ஆயுதங்கள் அடங்கிய பெட்டகம் இருந்த இடத்திலேயே அம்பாளை ஆவாகனம் செய்து மீண்டும் பௌராணிக முறைப்படி பூசை செய்து வந்தார். அவரது நோயும் அவரை விட்டு நீங்கியது.

இவ்வாறு பெட்டகத்து சாமான்களைக் கொண்டு தனியாக அமைக்கப்பட்ட கோவில், “பெட்டகத்து அம்பாள் கோவில்” என்றும் அழைக்கப்பட்டது. இங்கு வைகாசி விசாகத்தைத் தொடர்ந்துவரும் திங்கள் கிழமையன்று திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## தோணிக்கல்லும் - விக்கிரகங்களும்

**தோ**ணிக்கல் என்று அழைக்கப்படும் இடமானது சம்பூர் கிராமத்தின் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. தெய்வ விக்கிரகங்களை ஏற்றிக்கொண்டு கடலில் வந்ததாகக் கூறப்படுகின்ற தோணியானது இக்கடலோரத்தில் தரை தட்டி பின்னர் இங்கேயே கல்லாக சமைந்ததாக கூறப்படும் இடமே தோணிக்கல் என்று இன்றளவும் அழைக்கப் படுகின்றது. இச்சம்பவமானது குளக்கோட்டு மன்னனால் திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணிகள் நிறைவுபெற்ற பின்னரான காலப்பகுதியில் இடம் பெற்றதாகக் கருதப் படுகின்றது.

(இக்காலத்தில் இவ்விடத்திற்கருகாமையில் மகாவலி கங்கையாறு சென்று கடலில் கலந்ததாகவும், சம்பூருக்கும் கோணேசர் ஆலயத்திற்குமிடையே மிகக் குறுகிய நீர்ப்பரப்பே காணப்பட்டதாகவும், தினமும் கோணேசர் கோவிலுக்கு சிவதோத்திரம் பாடச்செல்லும் புலவன் மற்றும் சம்பூர் மக்கள் இதனூடாகவே சிறு தோணி மூலம் நீர்ப்பரப்பைக் கடந்து கால்நடையாகச் சென்று கோணேசப் பெருமானை வழிபட்டதாகவும் தங்கள் மூதாதையர் கூறியதாக ஊர்ப் பெரியவர்கள் கூறுகின்றனர். இதன் உண்மைத் தன்மை கேள்விக்குரியது. ஆனால் தினமும் சிவதோத்திரம் ஓத அழைத்துவரப்பட்ட புலவர் வழிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பாரம்பரியம் மத்தளமலை, நெய்மலை, கெவுளிமுனை என்பன சம்பூரிலேயே இன்றும் காணப்படு கின்றன.)

இத்தோணியிலே வந்த சிலைகள் இப்பிரதேசத்திற்குப் பொறுப்பாகவிருந்த வன்னிமையால் மத்தள மலையில் வைத்து வழிபடப்பட்டு வந்தன என்றும் பின் காலவோட் டத்தின் விளைவினால் இவை பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன என்றும் செவிவழிக் கதைகள் மூலம் அறிய முடிகின்றது.

இத்தோணியில் வந்த சிலைகளாக பத்திரகாளி (சம்பூர்), பத்தினியம்மன் (நீலாப்பளை - இச்சிலை மண்ணுள் புதைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது), செண்பக நாச்சியம்மன் (இலங்கைத் துறை - இது தற்போது ஈச்சிலம்பற்றையில் உள்ளது), அம்மாச்சியம்மன் (அம்மன் நகர் - கட்டைபறிச்சான்), பைரவர் (கிழல்வெளி - சம்பூர்), கெவுளியா பிள்ளையார் (கூனித்தீவு), காளி (வட்டம் - கடற்கரைச் சேனை), எல்லைக்காளி (பறையனாலங்குளம் - பன்குளம்), செண்பகச் செல்வி என்னும் கண்ணகையம்மன் (தம்பிலுவில் - அம்பாறை) போன்றவை கருதப்படுகின்றன என்று கர்ணபரம்பரைக் கதைகளாகக் கூறப்படுகின்றன. (இவை பற்றிய ஆய்வு முயற்சிகள் தொடரப்பட வேண்டும்.)

**தோணிக்கல் சடங்கு**

கடந்த இரண்டு ஆண்டுகளாக (2013 இலிருந்து) தோணிக்கல் சடங்கு நடைபெறுகின்றது. அதாவது இத்தோணிக்கல் தீர்த்தக்கரையிலேயே பத்திரகாளி அம்பாள் சிலை வந்திறங்கியதாகக் கூறப்படுவதனால் இச்சடங்கு இங்கு நிகழ்த்தப்படுகின்றது. பத்திரகாளி அம்பாள் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து மேள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளத்துடன் நிலப்பாவாடை விரித்தே காட்டுத் தென்னை மரத்தின் கீழ் வைப்பதற்குக் கொண்டுவரப்பட்டதன் காரணமாக இதே முறையிலான சடங்கு சம்பிரதாயத்துடன் தோணிக்கல் சடங்கு நடைபெறுகின்றது. இதன்போது ஏழு குடங்களில் கன்னிப் பெண்களால் (சப்த கன்னியராகப் பாவனை செய்து) கடல்நீர் எடுக்கப்படும். அவ்விடத்திலேயே நெல்லுக்குற்றி இயந்திர தாபனம் செய்து கும்பம் வைக்கப்படும். அம்பாளுக்குரிய காவியங்கள், பாடல்கள் பாடப்பட்ட பின்னர் சடங்கு முடிந்ததும் பறைமேளம், குழல் இசையுடன் அம்பு வில் கொண்ட காவலுடன், வலது புறமாக மகரக் கொடியும், இடதுபுறமாக அனுமர் கொடியும் வர கும்பமானது நிலப்பாவாடை விரித்து அம்பாள் ஆலயத்திற்கு எடுத்து வரப்படும். இது புரட்டாதி மாதம் உத்தர நட்சத்திரத்தன்று நடைபெறுகின்றது.

இக்கும்பமானது கோவில் வளாகத்துக்குள் வந்ததும் அது அதிக சக்தியுடன் மேலே எழும்புவதாகவும், அதை இழுத்துப்பிடிக்க முடியாமல் அதை தலையில் சுமப்பவர் அவதியுறுவதையும், இக்கும்பத்தை பலர் சேர்ந்து கீழே இழுத்துப் பிடித்துக்கொண்டு உள்வீதி வலம் வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இது அதிசயமான செயலாகவே கருதப்படுகின்றது.

தீர்த்தக் குடமெடுத்தல், ஆராத்தி, அபிஷேக நைவேத்தியப் பொருட்கள் கொண்டுவரல் இப்பிரதேசத்திலுள்ள பன்னிரு குடிகளைச் சேர்ந்தவர்களாலும், வலது புறமாக மகரக் கொடி பிடித்தல் மீகாமன் வழிவந்த மக்களாலும், இடதுபுறமாக அனுமர் கொடி பிடித்தல் விஸ்வகுல மக்களாலும், அம்பு வில் ஏந்துதல் ஆதிக்குடி மக்களாலும், மேற்கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்வின்போது கடற்கரையருகே இவ்விடத்தில் வெற்றிலை, பாக்கு, பழங்கள் வைத்து, இங்கேயே கையால் நெல்லுக்குற்றி, கும்பதாபனம் செய்து வழிபாடுகள் இடம்பெறுகின்றன. தற்போது இதற்கு பூசகர்களாக திரு. இராசையா பத்மநாதன் மற்றும் திரு. கண்டுமணி சிவநேசன் ஆகியோர் செயற்படுகின்றனர். இக்குடமெடுக்கும் நடைமுறையை தற்காலத்தில் மிகுந்த சிரமத்தின் மத்தியில், சம்பூர் கிராமத்திற்கூடாக மக்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட போதிலும், கடற்படையினரின் அனுமதி யுடன் அவர்கள் ஒழுங்கு செய்த பேருந்து மூலம் ஊர் எல்லைவரை மக்கள் கொண்டு செல்லப்பட்டு, அதற்கப்பால் ஒற்றையடிப்பாதை மூலம் தோணிக்கல் கடற்கரைக்குச் சென்று திரும்பும் நடைமுறை திரு. துரை. கிருபைராஜ், காரியப்பர் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றது.

இங்கு தற்போதுள்ள ஒழுங்கின் பிரகாரம் திரிகாரியப்பர்குடி, புலவன்குடி, பெரிய காரியப்பர்குடி, இறையாத்துக்குடி, காப்புக்கட்டுகுடி, திருமஞ்சள்நீர்க்குடி, இளங்குடி கன்னியர் தீர்த்தக் குடமெடுத்து வர; பசுங்குடி, பாட்டுவாழிகுடி கன்னியர் ஆராத்தி எடுக்க; திருச்செட்டிகுடி கன்னியர் பூக்கள் கொண்டுவர; வளர்குடி கன்னியர் சேலை எடுத்து வர; சந்தாணர்குடி கன்னியர் அபிஷேகப் பொருட்கள் தாங்கிவர இச்சடங்கு இனிதே நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

## ஊர் வேள்வியும் காளி அம்மனும்

சம்பூர் கிராம மக்களின் குடியிருப்புகளின் எல்லையிலே தன்னந்தனியாக வீற்றிருந்து கொண்டு, இம் மக்களுக்கு ஏற்படும் துன்ப துயரங்களைத் தடுத்து, காத்தருள் புரியும் இவ் அம்பாளையே சம்பூர்த்தாயாக மக்கள் போற்றி வழிபட்டு வருகின்றனர் என்பது கண்கூடு.

இதன் ஒரு அம்சமாகவே ஊர் வேள்வியையும், வழியமுது படைத்தலையும் காலங்காலமாக இவ்வூர் மக்கள் செய்து தெய்வங்களைக் குளிர்வித்து வருகின்றனர். ஆனால் சில வருடங்களாக இச்சம்பிரதாயங்களைக் காண முடிவதில்லை. இதற்கு இப்பகுதியில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிகழ்வுகளே காரணமாகும். போர்ச் சூழலில் அன்றாடம் உயிர்ப்பயங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்த இம்மக்கள் ஊர்த் தலைவர்களையும் இழந்து எந்நேரமும் உயிரைக் கையில் பிடித்தபடியாகவே வாழ்ந்து வந்தனர். ஆனாலும் எம்மைக் காத்து, எமக்காகவே இங்கு குடிகொண்ட தெய்வங்களுக்கு உரிய நிவேத்தியங்களை பரம்பரை பரம்பரையாக செய்து வந்தபடி செய்விப்பது ஊர்ப்பெரியவர்களின் கடமையாகும். இதிலிருந்து அவர்கள் விலகுவதும் முறையல்லவே!

இவ் ஊர் வேள்வி, வழியமுது செய்தல் என்பன மூன்று வருடங்களுக்கொருமுறை நடைபெறுகின்றன. அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கப்பட்ட ஒரு வெள்ளிக்கிழமையன்று ஊர் எல்லையில் நின்றுகொண்டு ஊருக்கு வெளியே இருக்கின்ற சிறு தெய்வங்களை கூவி அழைப்பர்.

**''கோணை நாயகருக்காக குளக்கோட்டு மன்னனால்**
**கொண்டு வரப்பட்ட மக்கள் நாங்கள்**
**குளக்கோட்டு மன்னன் ஆணைப்படி....**
**... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...**
**... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...''**

என்று தொடங்குகின்ற பாடல் / மந்திரத்தை உச்சாடனம் செய்து சிறு தெய்வங்களைக் கூவி ஊருக்குள் அழைப்பர்.

இதன்போது அடுத்து வருகின்ற வெள்ளிக்கிழமை வில்லுக்குளத்தருகே ஏந்தலையில் வீற்றிருக்கின்ற வெள்ளைக் கல்முந்தன் மாரியம்மனுக்கு மடையும், தொடர்ந்து வருகின்ற திங்கள் கிழமை தோணாவடியில் பனிச்சை மரத்தின் கீழ் வீற்றிருக்கின்ற பத்தினியம்மனுக்கு மடையும், செவ்வாய்க்கிழமை, காட்டுத் தென்னை மரத்தின் கீழ் வீற்றிருக்கின்ற பத்திரகாளி அம்பாளுக்கு மடையும், புதன்கிழமை வில்லுக்குளத்தருகிலுள்ள நாயன்மாருக்கு கயிறு நேர்ந்து பின்னர் சனிக்கிழமை நாயன்மார் மடையும் நடைபெறும்.

இவ்வாறான மடை வேள்விகள் நடைபெற்ற பின்னர், அதைத் தொடர்ந்து வில்லுக்குளத்தெதிரே, கம்பீரமாக வீற்றிருக்கின்ற பத்திரகாளி அம்மன் கோவிலடியில் வழியமுது செய்யும் நிகழ்வு இடம்பெறும். இதன் தொடர்ச்சியாக ஏற்கனவே ஊருக்குள் அழைக்கப் பட்டிருந்த தெய்வங்களை மீண்டும் ஊர் எல்லைக்கு அப்பால் அழைத்துச்சென்று வழியனுப்புதல் இடம் பெறும். இந்நடைமுறை சம்பூர் கிராம மக்களிடையே காலாகாலமாக நடந்துவருகின்ற நிகழ்வுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற தசாப்த காலப்பகுதிகளில் வெள்ளைக் கல்முந்தன் வேள்வி நடைபெறும் இரவில், ஏத்தாலைப் பகுதி வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மூதூரின் பல பிரதேசங்களில் இருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக மாட்டு வண்டில்களில் வந்து கொண்டிருப்பர். கடைத்தெருக்கள் காணப்படும். இரவிரவாக இவ்வேள்வி மிகச் சிறப்பாக நடைபெறும். கழுவில் ஏற்றிய சேவல் கூவுவதை அனைவரும் ஆச்சரியமாகப் பார்ப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## சம்பூர் பத்திரகாளி சிலை கூறும் கதை

திரிசூல காளி என்று கூறப்படும் சம்பூர் பத்திரகாளி சிலையின் வடிவத்தை உற்றுநோக்கும்போது, கடும் கோபாவேசமான முகத்துடன் எட்டுக் கைகளுடன் கோரப்பல்லும் ஒரு கால் தூக்கி ஒருவரை திரிசூலத்தால் வதம் செய்யும் தோற்றத்துடன் சிலை செதுக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

இதற்குரிய காரணத்தைப் பின்வருமாறு, புராணக் கதையொன்று கூறப்படுகின்றது: அதாவது வேண்டும் வரங்களையெல்லாம் தனது பக்தர்களுக்குக் கொடுப்பவர் சிவபெருமான். இதனை பலரும் கூறக்கேட்ட அசுர குணம் கொண்ட ஒருவன் சிவபெருமானை பரீட்சிக்குமுகமாக சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். இதனால் கவரப்பட்ட சிவபெருமான் இவ் அசுரனுக்கு காட்சி யளித்து, "பக்தனே! நீ யாது வேண்டி இக்கொடிய தவத்தில் ஈடுபட்டாய்?" என வினவினார். அவனும் சிவபெருமானைப் பார்த்து "நான் வேண்டும் வரம் எதுவாகினும் நீர் கொடுப்பீரா?" என்று கேட்டபோது சிவபெருமான் அதற்கு அடியவர்கள் வேண்டுவனவற்றைக் கொடுப்பதே எனது கடமை என்றார். மிகவும் மகிழ்ந்த அசுரனும் அப்படியாயின் நான் இப்போது கேட்கும் வரத்தை மறுக்காமல் தந்தருள வேண்டும் என்று கேட்டு வணங்கி தனது வரத்தை கேட்கத் தொடங்கினான். "நான் உமது மனைவியாகிய பார்வதியின் அந்தரங்க உறுப்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க வேண்டும்" என்று வரங்கேட்க சிவனும் "அப்படியே ஆகட்டும்" என்று கூறி வரமளித்தார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பார்வதி தேவியார் கோபத்துடன் சிவனை நோக்கி, "பரமனே! இதெப்படி சாத்தியமாகும்? இச் செயலைப் புரிய என்னால் முடியாது" என்று வாதிட்டார். அதற்கு சிவபெருமான் தேவியை பார்த்து தேவி நீர் எனது மனைவியாவீர். உமக்கொரு அவமானமெனில் அது உம்மை ஏற்றுக்கொண்ட எனக்கே அவமானமாகும். ஆதலால் நான் வரமளித்தபடி நடப்பதே உகந்தது என்று கூற, மிகவும் ஆவேசமுற்ற பார்வதி தேவி அப்படியாயின் தனக்கும் ஒரு வரம் தரவேண்டும் என்று வேண்டி நின்றார். கேளுங்கள் என்று சிவபெருமான் கூற, "ஒரு தரம் பார்த்து மறுதிசை திரும்புமுன் நான் அவனை வதைக்க வேண்டும்" என்று வேண்டினார். "அவ்வாறே ஆகட்டும்" என்று வரங்கொடுத்த சிவபெருமானின் கையிலிருந்த திரிசூலத்தைப் பறித்தெடுத்து ஒரு காலை உயர்த்தி அசுரனைக் கீழே தள்ளி வரங்களுக்கேற்றாற்போல் அசுரனை வதைத்தாள் தேவி. இக்கோலத்தில் அமைந்துள்ள சிலையே சம்பூரிலுள்ள பத்திரகாளி அம்மன் சிலை என்று பெரியோர் கூறுகின்றனர். இச்சம்பவங்களின்பின் சிவபெருமானுடன் கோபித்துக் கொண்டு தேவி காட்டுக்குச் சென்றதாகவும் (காடேறி - காடு + ஏறுதல் (செல்லல்), சிவபெருமான் சுடலைக்குச் சென்று நடனமாடியதாகவும் புராணக் கதை நீண்டு செல்கிறது.

இதற்கேற்றாற்போல இந்தியாவிலுள்ள தொல்லியல் விற்பன்னர் ஒருவருடன் இச்சிலை சம்பந்தமாக ஆராய்ந்த போது அவர் இச்சிலையானது அரக்கன் வதை செய்யும் கோலத்தில் எட்டுக் கைகளுடன் கோரப்பல், பத்தர குண்டலம், உடுக்கை மற்றும் அனல் மகுடம் என்பவற்றைக் கொண்டமைந்ததாகக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9

## அழிவடைந்த ஆலய அமைப்பு

இந்து ஆலயங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆலயத்திலும் ஆதியான விக்கிரகமே மூலஸ்தானத்தில் இருக்கும். இது இங்கு இரு ஆலயமாகக் காணப்படுகின்றது. காட்டுத் தென்னை மரத்தின் கீழ் ஆதியான பத்திரகாளி அம்மனும், அதற்கு சில மீற்றர்கள் முன்னால் அதே வடிவத்தையொத்த இன்னுமொரு கருங்கல்லில் செதுக்கப்பட்ட அம்மன் விக்கிரகமும் மூலஸ்தானமாகக் காணப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து கர்ப்பக்கிரகத்தோடு சேர்ந்ததாக அர்த்த மண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம், கொடித் தம்பம் என்பனவும் அழகான முறையில் அமைந்து காணப்பட்டது. இவை தவிர விநாயகர், வீரபத்திரர், வைரவர், நவக்கிரக தேவர்கள் ஆகியோருக்கான தனிக் கோவில்களும், தீர்த்தக் கிணறு, அழகான சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட மணிக்கூட்டுக் கோபுரம் என்பனவும் காணப்பட்டன. அத்தோடு அம்மனின் 10 பரிவார மூர்த்திகளுக்கும் தனிக்கோவில்களும் காணப் பட்டன.

1990 ஆம் ஆண்டு தலைதூக்கிய வன்செயல்கள் காரணமாக ஆலயம் மாசுபடுத்தப்பட்ட போதும், 2006ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு சித்திரை மாதம் தொடங்கிய கோரப்போரின் விளைவாகவே ஆலய வளாகம் அதிகளவு சேதத்தைச் சந்தித்தது. ஆதியான பத்திரகாளி அம்மன் கோவிலும், மணிக்கூட்டுக் கோபுரமும் தவிர்ந்த சகல ஆலய கட்டடங்களும் அழிக்கப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டு போரின் பின்னர் மக்கள் குடியிருக்க சம்பூர் கிராமம் அனுமதிக்கப்பட்டிராத போதிலும், கோவில் அம்மன் வழிபாட்டுக்காக சில நிபந்தனைகளுடன் அனுமதி பெற்று பூசைகள் நடாத்தப்பட்டு வந்தது. சில காலங்களின் பின்னர் இவ் ஆலயத்திற்கு மட்டும் எந்நேரமும் சென்று வரக்கூடிய நிலை தற்போது வரை காணப்படுவதிலிருந்து சம்பூர் காளித் தாயின் மகிமையை உணர முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

## ஆரம்பகால வழிபாட்டு முறைகள்

அன்னை பத்திரகாளிக்கு, காட்டுத் தென்னை மரத்தின் கீழ் சிலை வைக்கப்பட்டதிலிருந்து 1970களில் கும்பாபிஷேகம் நடைபெறும் வரை ஆகமநெறி சாராத முறையிலேயே பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. பிராமணர்கள் திராவிடர்களுடன் கலப்பதற்கு முன்னர் தாங்களே நேரடியாக கடவுள்களுக்கு வேண்டிய நைவேத்தியங்களைப் படைத்து வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்வது வழக்கம். பிற்காலங்களில் ஆலயங்கள் ஆரியமயமாக்கலுக்கு உள்ளாகியபோது கும்பாபிஷேகம், ஆகம முறைப்படியமைந்த கோவில், பிராமணர்களின் பூசை, யாகங்கள் முதலியவற்றை ஏற்றுக் கொண்டன. ஆனால் இலங்கையில் தற்போதும் ஆகம முறை சாராத பௌராணிக முறையிலான திராவிடத் தமிழர் பெருமையைப் பறைசாற்றும் கோவில்களும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன.

பூசை என்பது பூக்களால் செய்யப்படும் வழிபாடு என்பது பொருள். இதிலிருந்தே பூஜை, பூஜா முதலிய சொற்கள் தோன்றின. வெற்றிலை, பாக்கு, பூ, பழம், சோறு, கறிகள் (மரக்கறி சிலவிடங்களில் மச்சம், மாமிசமும்) கொண்டு ஆரம்பத்தில் வழிபாடுகள் செய்யப்பட்டன. ஏழு சாடிகளில் பொங்கல் பொங்குவது பிரசித்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவருக்குப் படைக்கப்படும் தவிட்டுக் கொழுக்கட்டை அல்லது தவிட்டாங் கொழுக்கட்டை தனிச்சிறப்பானது.

பத்திரகாளி அம்பாளுக்கு பூசை வழிபாடுகள் நடைபெறும்போது அம்பாளுக்குரிய அணிகலன்கள், வாள், சூலம், முதலான ஆயுதங்கள், முகப்பட்டயம், கண்கள் என்பன சம்பூரின் குடியிருப்புகளுக்கிடையில் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட பாதுகாப்பறையில் இருந்து, (இறுதிக்காலங்களில் காரியப்பரின் வீட்டில் அதாவது இன்றைய பழைய பத்திரகாளி அம்பாள் ஆலயம் அமைந்துள்ள இடம். 6-ஆம் வட்டாரம்.) பட்டுக்கட்டி எடுத்துச்சென்று காட்டுத் தென்னை மரத்தடி அம்பாள் ஆலயத்தில் வைக்கப்படும்.

சம்பூரில் பத்திரகாளி ஆலயம் அமைந்தது முதல் காரியப்பரே தலைவராகவும், பூசகராகவும் இருந்து வருகின்ற காலத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறும் பொங்கல், பூசை முதலியனவற்றை யாராவது செய்யவேண்டுமென்று கருதினால் பூசகரிடம் அத்தினத்துக்கு முதல் வருகின்ற செவ்வாய்க்கிழமை அல்லது திங்கள்கிழமை அறிவிக்க வேண்டும். அத்தோடு அவரிடமிருந்து பூசை பொங்கலுக்கான பொருட்களடங்கிய பெயர் பட்டியலையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பொருட்களில் ஏழு பொங்கல் சாடிகள், அம்மனுக்குரிய காதோலை, கரசை மணி, மை, மணம், காப்பு, சீப்பு, கண்ணாடி, வெற்றிலை, பாக்கு என்பன மிக முக்கியமானவையாகும்.

செவ்வாய்க்கிழமை பொங்கல் என திங்கள்கிழமை பூசகர் சிறு அறிவிப்பொன்றை விடுப்பார். அத்தோடு சிறு மடை ஒன்றை வைத்து பொங்கலுக்குரியவரின் பெயரை உச்சரித்து மந்திர உச்சாடனமும் செய்து மேளமடிக்கப்படும். இவ்வாறு மேளமடித்தால் மறுநாளில் பொங்கியே ஆக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பது கட்டாயமாகும். அவ்வாறு பொங்காது விட்டால் பூசகர் கோவில் கணக்கில் பொங்கிவிட்டு அதற்கான செலவினங்களை உபயகாரரிடமிருந்து பின்னர் பெற்றுக் கொள்வது வழக்கமாகும்.

முறைப்படி மேளம் தட்டாமல் யாராவது பொங்க வந்தாலும் அது பூசையாகவே கருதப்படும். பொங்கலின் போது ஏழு சாடி வைத்து பொங்கலுடன் நான்கு கோழிகள் பலியிடும் நேர்கடன் வைபவமும் இடம்பெறும். (கும்பாபிஷேகத்தின் பின்னர் நான்கு கோழிகளுக்குப் பதிலாக மூன்று நீர்த்துப் பூசணிக்காய் வெட்டி குங்குமம் தடவப்படும் சம்பிரதாயம் இடம்பெறுகின்றது.)

பெண்கள் பத்திரகாளி கோவிலுக்குச் செல்வது அக்காலங்களில் மிகக் குறைவாகவே காணப்பட்டது. அப்படிச் செல்வதாயின் மிகத் தூய்மையாகச் செல்ல வேண்டியிருக்கும். அம்பாளை மக்கள் பயங்கலந்த பக்தியுடனேயே தரிசித்தனர். அகங்காரத்துடன் கோவிலுக்குச் செல்லுதல், மிகவும் அழகான ஆடைகளை அணிந்து செல்லுதல், கூந்தலை நீண்டதாக விரித்துவிட்டு செல்லுதல் போன்றவை அம்பாள் கோபத்திற்கு ஆளாகும் செயல்களென அக்காலத்தில் அறியப்பட்டிருந்தது. இவற்றுக்காக சிலர் தண்டனைகளை அனுபவித்ததாகவும் கூறுகின்றனர். மார்கழி மாதங்களில் பக்தர்கள் கோவிலுக்குச் சென்று வழிபடுதல் தவிர்க்கப்பட்டிருந்தது. இக்காலத்தில் பூசகர் மட்டுமே கோவிலுக்குச் சென்று பூசைகள் செய்து திரும்புவார். இம்மாதத்தில் அம்பாள் தவத்தில் இருப்பதாகவும் கூறுவர்.

இவ் ஆலயம் ஊரின் ஒதுக்குப்புறத்திலேயே அமைந்துள்ளதனால் பூசை நடைபெறும் நேரத்திலோ அல்லது பிற நேரங்களிலோ ஆலயத்தின் முன்னால் செல்லுகின்ற வீதியால் பயணிப்பதற்குக் கூட மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுவர். இத்தகைய பயமும் பக்தியும் நிறைந்த காலமாக அக்காலம் இருந்ததாக பெரியவர்கள் கூறுகின்றனர். தானே விரும்பி வந்து இவ்விடத்தில் அமர்ந்ததனால் இவ் அம்மனை ஊர் காக்கும் தெய்வமாக, சம்பூர் தாயாகவே அனைவரும் வழிபட்டனர்.

பேசும் தெய்வமாக, சக்தி மிக்க தெய்வமாக விளங்கிய பத்திரகாளி அம்பாளுக்கு பூசைகள் நடைபெறும் வேளையில் (குறிப்பாக நண்பகல் வேளை) வைரவருக்குப் படையல்கள் செய்து, பூசைகள் செய்து, சங்கு ஊதப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்படும். இச் சந்தர்ப்பத்தில் அம்மன் சிலைக்குக் குறுக்காக யாரும் கடந்து செல்லல் தகாது என்று அன்று தொடக்கம் இன்று வரை கூறப்படுகிறது. ஏனெனில் இவ்வேளையில் கிழல்வெளியில் இருந்து அம்பாளின் காவல்காரரான ஒற்றைக்கால் வைரவர் அம்பாளை நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது. ஒரு சமயம் இவ்வாறு பூசை நிகழும் சந்தர்ப்பத்தில் அம்மனுக்குக் குறுக்காகச் சென்ற ஒருவரின் கழுத்து திரும்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. இவர் தனக்கு முகத்தில் யாரோ ஒருவர் அறைந்தது போலிருந்ததாகவும் கூறியிருந்தார் என்று பெரியவர்கள் கூறுவர். வைரவர் படையலிலுள்ள தவிட்டாங் கொழுக்கட்டை அல்லது தவிட்டுக் கொழுக் கட்டை இங்கு பிரசித்தமானது.

அம்பாள் பூசையின்போது பொங்கலுடன் சோறு அத்தோடு மரக்கறி வகைகள் கொண்ட கறியும் சமைத்து அம்பாளுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்படும். இப்பூசைகள் யாவும் அம்பாள் பத்ததி முறைப்படியே இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

கேதார கௌரி விரதம் கௌரி காப்பு இவ் ஆலயத்தில் மிகவும் சிறப்பானதாக இருந்து வந்துள்ளது. இதைவிட தைப் பொங்கல், விசாகப் பொங்கல், கார்த்திகை விளக்கீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவும் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்ட வழிபாடு களாகும்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில், பலதரப்பட்ட கருத்து வேறுபாடுகள், பயபக்தி என்பவற்றுக்கிடையே அம்பாள் ஆலயத்தை அழகுபடுத்தி, கும்பாபிஷேகம் நடாத்திப் பார்க்க வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தின் காரணமாக பூசை முறைகள் மாற்றியமைக்கப்பட்டு, பிராமணப் பூசகர்கள் நியமிக்கப்பட்டு, கொடியேற்றத் திருவிழாக்கள், கும்பாபிஷேகம் என்பன நடாத்தப்பட்டன என்று பெரியவர்கள் கூறுகின்றனர்.

**கந்தபுராண காப்பு**

கேதார கௌரி காப்பு அணிவதில் சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம் மிகவும் பிரசித்தமானது என்பது போல, சம்பூரில் உள்ள இன்னுமொரு ஆலயமான சித்தி விநாயகர் ஆலயம் கந்தபுராண காப்பு அணிவதில் பிரசித்தி பெற்றதாக பன்னெடுங் காலமாக இருந்து வந்துள்ளது. யாழ்ப்பாணத் தில் நடைபெற்றுவந்த கந்தபுராண கலாச்சாரம் போல சம்பூரிலும் இடம்பெற்றுள்ளதை எண்ணி நாம் பெருமை கொள்ள வேண்டும்.

இதன்போது கந்தபுராண பன்னீராயிரம் பாட்டுகளும் பாடப்பட்டு இன்னொருவரால் பயன் சொல்லப்படும். இது நிறைவடைவதற்குக் கிட்டத்தட்ட மூன்று மாதம் வரை செல்லுமாம். இம் மூன்று மாதமும் சம்பூரிலுள்ள குடிகளுக்கொன்றாக ஒவ்வொரு பெண் என்ற முறையில் காப்பு அணிந்து கொள்வர். இறுதி நாளில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

எம் மூத்தோர் கூறிய ஒரு நிகழ்வு: ஒருமுறை சம்பூரில் பஞ்சம் காரணமாக நெல் விளைச்சல் போதியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திராத ஒரு சந்தர்ப்பத்தில் இக்காப்பு அணியும் காலமும் வந்தது. மக்களிடம் நெல் தரும்படி கூறியபோது மிகக் குறைந்தளவு நெல்லே கிடைத்தது. ஆனால் அன்னதானத்திற்காக வந்திருந்த மக்கள் சம்பூர் கூட்டுறவு நிலையம் அமைந்திருக்கின்ற இடம் வரை திரண்டிருந்தனர். ஏற்பாட்டாளர்கள் கலக்கமுற்று அண்ணனும் தம்பியுமாகிய பிள்ளையாரையும் முருகப் பெருமானையும் வேண்டி அன்னதானத்தில் ஈடுபட்டனர். இதன்போது யாருக்குமே குறைவில்லாததாக சோறு தொடர்ந்தும் அதே அளவிலேயே காணப்பட்டதைப் பார்த்து அதிசயித்தனர் ஊர் மக்கள்.

இவ்வாறான சிறப்பைக் கொண்ட கந்தபுராண படலம் பாடி பயன் சொல்வதில் திரு. செல்லத்துரை, திரு. வவுண் கணபதி, திரு. அருளம்பலம், திரு. கோபாலர் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். இக் கந்தபுராண காப்பு பின்னரான காலங்களில் மக்களின் பொறுப்பற்ற செயல்கள் காரணமாக நிறுத்தப்பட்டு விட்டது எனக் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

## ஸ்ரீ பத்திரகாளி மான்மியத்திலிருந்து

**பி**ரம்மாவுக்கு புத்திரராகத் தோன்றிய தக்கன் என்பவன் சிவனை நோக்கி கடுமையான தவங்கள் புரிந்து வரங்கள் பலவற்றைப் பெற்று வாழ்ந்து வருகின்ற காலத்தில், அவன் பெற்ற ஒரு வரத்தின் காரணமாக உமாதேவியாரே அவனுக்கு மகளாகவும் அவதரித்தார். தக்கனுடைய மகளாகையினால் தாட்சாயணி என்று அழைக்கப்பட்டாள். வளர்ந்து பருவமடைந்ததும் சிவபெருமானை நினைத்து தவம் செய்து அவரை மணந்தும் கொண்டாள்.

தக்கன் யாகம் ஒன்றை மேற்கொண்டபொழுது சிவபெருமான் தனது மருமகன்தானே என்று நினைத்து, தானே பெரியவன் என்று செருக்குற்று, சிவனுக்குரிய அவிர்பாகத்தை அவருக்கு வழங்காமல், சிவனையும் யாகத்துக்கு அழைக்காமல் யாகத்தைத் தொடர்ந்து நடாத்தினான்.

இதனையறிந்த தாட்சாயணி தான் அங்கு சென்று தந்தைக்கு உரிய புத்திமதிகளைக் கூறி அவரை நல்வழிப்படுத்த, யாகசாலைக்குச் செல்ல வேண்டுமென்று கூறியதோடு அதற்கு அனுமதி வழங்குமாறு சிவபெருமானிடம் கேட்டாள். அதனை மறுத்துரைத்த சிவபெருமான் எம்மை மதிக்காமல் எமக்குரிய அழைப்பையும் தராமல் நடக்கும் யாகத்துக்குச் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம் என்றும், அவ்வாறு சென்றால் அவமரியாதையே கிடைக்கும் என்றும் கூறி தடுத்தார். இதனை ஏற்றுக் கொள்ளாத தாட்சாயணி சிவபெருமானுடன் சண்டையிட்டு யாகசாலைக்குச் சென்றாள்.

அங்கு தந்தையாகிய தக்கனைச் சந்தித்து எவ்வளவோ எடுத்துக் கூறியும் அதற்குத் தக்கன் உடன்படாமையினால், அவனுடன் வாக்குவாதம் புரிந்து பயனற்றுப் போக, கணவனான சிவபெருமான் கூறியதையும் நினைத்துப் பார்த்து, மிகுந்த கோபத்துடன் அவ் யாக குண்டத்தில் விழுந்து உயிர் துறந்தாள். அங்கிருந்த தேவர்களும், முனிவர்களும், இனி என்னென்ன நடக்குமோ என்று எண்ணிக் கவலையில் காணப்பட்டனர்.

இங்கு நடந்தவற்றை அறிந்த சிவபெருமான் மிகுந்த கோபத்துடன் தக்கனையும், யாகத்தையும், அவன் சார்ந்தோரையும் தண்டிக்கும் எண்ணம் கொண்டு தனது கூறாக வீரபத்திரரைத் தோற்றுவித்து தக்கனுக்கும், அவன் சார்ந்தோருக்கும், தக்க பாடம் புகட்டி, யாகத்தை அழிக்குமாறு கூறியனுப்பினார். அவ்வாறே வீரபத்திரர் செல்கின்றபோது, உமாதேவியாரும் தனது கூறாக பத்திரகாளியைத் தோற்றுவித்து தக்கனை தண்டித்ததாக பத்திரகாளி மான்மியம் கூறுகின்றது.

இதுவே வீரபத்திரர், பத்திரகாளியின் தோற்றமாகும். இவர்கள் சிவபெருமானும் உமையம்மையாரும் கொண்ட அருள்மூர்த்தங்களேயாகும். வீரபத்திரர் பத்திரை கேள்வன் அதாவது பத்திரகாளியின் கணவன் என்றும் அழைக்கப் படுகின்றார். காளி என்பது பத்திரகாளியின் சுருங்கிய வடிவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

## காளி

காளி என்பதற்கு கருமை நிறத்தவள் என்றும், காலத்தை வென்றவள் என்றும் பொருள் உண்டு. இதை விட கானகத்தில் உறைபவள் என்றும் சிலர் பொருள் கொள்வர். அக்காலங்களில் பெரும்பாலான காளி கோவில்கள் ஊரின் எல்லைப்புறமாக காடுகள் மற்றும் சோலைகளிலேயே அமைந்திருந்தன. இவற்றின் அருகே தனியாக மக்கள் செல்வதற்கு அஞ்சினர் என்றும் அறியமுடிகின்றது. சம்பூர் பத்திரகாளியும், தன்னை ஊரின் ஒதுக்குப்புறமாய் அமைந்த சோலைகளடர்ந்த காட்டுத் தென்னை மரத்தின் கீழேயே வைக்கும்படி கூறியதாக செவி வழிக் கதை.

காளி வடிவமானது மிகவும் கோபாவேசமாய் அமைந்த அம்மனின் வடிவமாகும். காளியின் திருவுருவம் இரு கரங்கள், நான்கு கரங்கள், எட்டு கரங்கள், பத்து கரங்கள், பன்னிரண்டு கரங்கள், பதினாறு கரங்கள், பதினெட்டு கரங்கள் கொண்டனவாக பல்வேறு வடிவங்களில் அமைக்கப்படுகின்றன.

செந்நிறமானவளாக இரு கண்களுடன் கபாலம், சூலம் கொண்டவளாக இரு கரங்களுடன் ஒரு தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகைப்பூ நிறமுடையவளாக ஜடாமகுடத்துடன் கலப்பை, உலக்கை ஏந்திய இரு கரங்களுடன் ஒரு தோற்றம்.

நெத்திப் பல், உயர்த்திய புருவம், நீண்ட கண்கள், நீண்ட மூக்கு, கருமேக நிறம், கம்பீரமான ஒளி, சிவந்த கூந்தல், சிவந்த ஆடை இவற்றுடன் இரு கரங்களிலும் சூலத்தை ஏந்திய தோற்றம்.

இடது கால் மடித்து வலது கால் தொங்கவிட்டவாறு அமர்ந்த நிலையில் ஒரு தோற்றம்.

காளியானவள் இரு கரங்களுக்கு மேற்பட்டபோது ஏந்தும் ஆயுதங்களாக வாள், கதை, சங்கு, சக்கரம், சூலம், கேடயம், அம்பு, வில், இரும்புத்தடி, பாசம், உடுக்கு, ஈட்டி, உலக்கை, அபயம், வரதம் முதலியவை காணப்படுகின்றன.

சம்பூர் பத்திரகாளியின் எட்டுக் கைகளிலும் சங்கு, சக்கரம், திரிசூலம், மழு, சூலம், சுடரொளி வாள், கத்தி, உடுக்கு என்பன காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## நல்ல தண்ணீர் கல் - நல்ல தண்ணீர் பிள்ளையார் வழிபாடு

சம்பூர் தோணிக்கல் கடற்கரையிலிருந்து கெவுளி முனை, மத்தள மலை நோக்கிச் செல்லும்போது சில மீற்றர்கள் தொலைவிலேயே நல்ல தண்ணீர் கல் அமைந்துள்ளது. கடற்கரையின் ஓரத்திலே கடலலைகள் தொட்டுச் செல்லும் கருங்கற்களாலான உயர்ந்த பாறையின் உச்சியில் ஏறத்தாழ மூன்றடி அகலமும் அதனிலும் சற்று நீண்ட நீளமும் கொண்டமைந்த ஆழமான குழி ஒன்று காணப்படுகின்றது. இதிலுள்ள நீர் நன்னீர்ச் சுவை கொண்டதாக உள்ளது. சில காலங்களில் இக்குழி மணலால் மூடப்பட்டிருக்கும். ஆனால் இம்மணல் மண்ணை குழியிலிருந்து வெளியே தோண்டி எடுக்கும்போது மீண்டும் நன்னீர் இங்கு வெளிப்படும். இது ஆச்சரியமிக்க ஒன்றாகவே அனைவராலும் நோக்கப்படுகின்றது.

இந்நல்ல தண்ணீர் கல்லின் அருகாமையில் சிறிய விநாயகர் வழிபாடு ஒன்றும் காணப்படுகின்றது. தற்காலத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் நேர்த்தி வைத்து பொங்கல் செய்து விநாயகப் பெருமானை வழிபடுகின்றனர். இதைவிட இவ்விடத்திற்கருகிலுள்ள மக்களும் இங்கு பொங்கல் வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். இவ்விடத்திலிருந்து பார்க்கும்போது திருக்கோணேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் தெளிவாகத் தெரியும். இங்குள்ள விநாயகரை "கோணேஸ்வரப் பிள்ளையார்" என்றும் அழைப்பார்கள்.

செவிவழிக் கதைகளின்படி குளக்கோட்டு மன்னன் காலத்திலே மன்னனின் கட்டளைப்படி கொட்டியாபுரப் பற்றின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கோணேசப் பெருமானுக்கென சேகரிக்கப்பட்ட பொருட்கள் யாவும் சம்பூருக்குக் கொண்டுவரப்பட்டு இங்குள்ள ஆலயமொன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு கெவுளி முனை மீகாமன் உதவியுடன் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குத் தோணி மூலம் எடுத்துச் செல்லப்படும். இவ் ஆலயம் சம்பூர் கடற்கரையோரத்திலே இருந்ததாகவும் கூறுவர்.

இவ் ஆலயம் இங்கு கூறப்படும் நல்ல தண்ணீர் பிள்ளையார் ஆலயமாக இருந்திருக்கலாம் என்று கருதப் படுகின்றது. இவ்விடத்தைச் சூழவுள்ள பிரதேசத்தை ஆய்வுக்குட்படுத்தின் மேலும் பல உண்மைகள் வெளிவர இடமுண்டு. அத்தோடு இப்பிரதேசத்திற்கு அருகாமையிலேயே கோணேஸ்வரர் ஆலயத்திற்குரிய திரவியங்கள், எண்ணெய், நெய் முதலியன சேகரித்து வைக்கப்படுகின்ற மத்தளமலை, நெய்மலை, வெள்ளைக் கல்மலை (மொட்டைமலை) என்பனவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

# வில்லுக்குளம்

சம்பூருக்குரிய சிறப்புகளுள் ஒன்று வில்லு என்றழைக்கப்படும் நீர்த்தேக்கமாகும். இதனை குளக்கோட்டு மன்னன் பள்ளவெளி முதலான வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய அமைத்ததாகக் கூறுவர். அழகிய நீளமான வில் போன்று வளைந்த அமைப்புடையதான இக்குளத்தை அமைக்க பூதங்களால் கொண்டுவரப்பட்ட பாரிய கற்களை (தற்போது இவை கொக்குத் தீவுக் கற்கள்) இன்றும் இக்குளத்திலே காணக்கூடியதாக உள்ளது. குளத்திலுள்ள மேலதிக நீரானது சம்பூர் பிரதேசத்தினூடாகச் சென்று கடலில் சேரக்கூடியவாறு இரண்டு வடிச்சல் வாய்க்கால்களும் அமைக்கப்பட்டன. இவற்றை தோணா என்று அழைப்பர். கடலில் நீர் மட்டம் உயரும் காலங்களில் கடல்நீர் இவ்வடிச்சல் வழியாக உட்புகுந்து வில்லுக்குளத்திலுள்ள நீர் உவர் தன்மையாக மாறியதால் இக்குளம் பூரணமாக அமைக்கப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. தற்போது இக்கற்களில் கொக்கு இளைப்பாறுவதன் காரணமாக இவை கொக்குத் தீவுக் கற்கள் என்றும் அழைக்கப்படுகின்றது.

இக்குளமானது பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு எதிரேயே அமைந்துள்ளது. இக்குளம் தாமரை படர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடாகமாக காட்சி தருவது பார்ப்போர் கண்களுக்கு குளிர்ச்சியைத் தருவதோடு மனமும் இவ்வழகில் லயித்து விடுகின்றது. சில்லென்று சிலிர்ப்பூட்டும் இதமான குளிர்த் தென்றலில் அம்மன் சாந்தமடைவதாகக் கூறுவோரும் உள்ளனர். பெருமளவிலான மதுர மங்கள், கூழா, இத்தி, தென்னை, பனை, பிரப்பை, ஓவாய, பூவரசு, புளியை, வேம்பு போன்ற மரங்களும், தாமரை, அல்லி, கொக்கு இனங்களான நாரை, மணல்வாரி, சில்லுத்தாரா, நத்தை கொத்தி, தும்பி, வண்ணத்துப்பூச்சி, காகம், பசு, எருது, எருமை மற்றும் நன்னீர் மீனினங்கள் குறிப்பாக யப்பான், விரால், கணையான் முதலிய உயிரினங்கள் வாழும் ஒரு சூழல் தொகுதியாக இவ்வில்லுக்குளம் அமைந்துள்ளது. ஆலயச் சூழலின் குளிர்மைக்கு இந்நீர்த்தடாகம் சிறப்பான தொன்றாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## கேதார கௌரி விரதம்

இது அம்பாளினால் சிவபெருமானை நோக்கி அனுஷ்டிக்கப்பட்ட விரதமாகும். கேதாரம் என்னுமிடத்தில் இது நிகழ்ந்ததால் கேதார கௌரி விரதம் என அழைக்கப்படுகின்றது. ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையில் முடிவுறும் 21 நாள் கொண்ட விரதமாகும். இது பெரும்பாலும் புரட்டாதி மாத வளர்பிறை நவமி அல்லது அதற்கு முதல் நாள் இல்லாவிட்டால் அதற்கு அடுத்த நாள் ஆரம்பமாகும். இத்தினத்தில் காலையில் நீரில் மூழ்கியெழுந்து பூசைகளை முடித்து பூரண உபவாசமாக இருத்தல் வேண்டும். மாலையில் கேதாரேஸ்வர பூசை முடிந்த பின் நிவேதனங்களை உண்டு தீர்த்தமருந்த வேண்டும். இறுதி நாளாகிய இருபத்தோராம் நாள் பூரண உபவாசம் இருந்து மறுநாள் அதிகாலையில் பாரணை செய்தல் வேண்டும். இவ் 21 நாளும் விரதமிருக்க வசதியில்லாதவர்கள் இறுதி நாளாகிய ஐப்பசி மாத அமாவாசை நாளாகிய கேதார கௌரி விரத நாளில் விரதமிருந்து காப்புக்கயிற்றைக் கட்டவேண்டும். இதுவே விரத முறையாகும்.

இதன் வரலாற்றை நோக்குவோமாயின்; முன்னொரு காலத்திலே திருக்கயிலாயத்தில் சிவபெருமானும் பார்வதி, தேவியும் வீற்றிருக்க தேவர்கள், முனிவர்கள், கந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும் இவ்விருவரையும் வணங்கி வழிபடும் நேரத்திலே அங்கு வந்திருந்த பிருங்கி முனிவருக்கு சிவனை மட்டும் வழிபடும் எண்ணம் தோன்றவே, அதை எவ்வாறு நிறைவேற்றுவது என்று யோசித்துவிட்டு வண்டு உருவமெடுத்து பார்வதியை நீக்கி பரமசிவனை மாத்திரம் வலம் வந்து வணங்கினார்.

இதனால் ஆச்சரியமடைந்த பார்வதி தேவி கோபத்துடன் சிவபெருமானை நோக்கி "சுவாமி இந்த பிருங்கி முனிவர் என்னை விலக்கிவிட்டு தங்களை மட்டும் வலம் வந்து வணங்கி நின்றாரே அதற்குக் காரணம் என்ன?" என்று வினாவினாள்.

சிவபெருமானும் தேவி, "சிவயோகியான பிருங்கி முனிவர் முத்தி நிலையை விரும்பி நிற்பவர். அதை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லை என்ற எண்ணத்தில் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார்" என்று கூறினார்.

இதைக் கேள்வியுற்ற தேவி கோபத்தில் அம் முனிவரிடம் இருந்து தனது சக்தியின் கூறு அகலக்கடவது என்று சாபமிட்டாள். பிருங்கி ரிஷியின் உடலும் சக்தியிழந்து தள்ளாடியது. எழுந்து நிற்கவே முடியாத நிலையில் இருந்த முனிவருக்கு சிவபெருமான் ஊன்றுகோல் ஒன்றைக் கொடுக்கின்றார். இதன் உதவியுடன் முனிவர் தனது இருப்பிடம் செல்கின்றார்.

தான் சாபமிட்ட முனிவருக்கு சிவபெருமான் ஊன்றுகோல் கொடுத்ததை பொறுக்க முடியாத பார்வதிதேவி சிவனை விட்டு கயிலாய மலையினின்றும் நீங்கி பூலோகத்திற்கு வருகின்றாள். அங்கே வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கின்ற வனத்திற்கு வந்து ஒரு வில்வ விருட்சத்தின் அடியில் அமர்கின்றாள். இதை கண்ணுற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால்மீகி மகரிஷி, "தேவி தாங்கள் கயிலாய மலையை விட்டு இங்கு எழுந்தருளியிருப்பதன் காரணம் என்ன?" என்று வினவுகின்றார். தேவி தான் பூலோகத்திற்கு வந்த கதையை கூறி "மகரிஷியே பூலோகத்தில் நான் விரதமொன்றை அனுஷ்டித்து சிவனின் ஒரு பாகத்தைப் பெற வேண்டும். அதற்குரிய விரதத்தைக் கூறுங்கள்" என்று கேட்க, வால்மீகி மகரிஷியும் இவ்விரதத்தை விளக்கி அதை அனுஷ்டிக்கும் முறையையும் பார்வதிக்குக் கூறுகின்றார்.

அதைக் கேட்டு புன்னகை செய்த தேவி தனது விரதத்தை ஆலமரத்தின் கீழ் அமர்ந்து கொண்டு ஆரம்பிக்கின்றாள். மணலிலே லிங்கம் பிடித்து அதை ஈஸ்வரன் ஆகப் பாவனை செய்து பூசை செய்கின்றாள். 21 பழம், 21 அதிரசம், 21 வெல்ல உருண்டை, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை என்பவற்றை வைத்து தீபம் காட்டி 21 நாள் பூசை செய்கின்றாள். 21 இழை எடுத்துத் திரித்து 21 முடி முடித்து ஈஸ்வரனை தியானம் செய்து காப்புக் கட்டுகின்றாள். காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்குக் காட்சி கொடுத்து, "தேவி உமக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, தேவியும் ஈசனைப் பார்த்து, "உமது தேகத்தில் சரி பாதி எனக்குத் தந்தருள வேண்டு"மென்று கேட்க, "ஆகட்டும்" என்று சிவன் கூறுகின்றார். பார்வதி தேவியும் பரமசிவன் மேனியில் பாதியாக இருக்கும் பேற்றைப் பெறுகின்றாள்.

அத்தோடு "என்னை நோன்பு நோற்று வரம் பெற்ற உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுஷ்டிக்கின்றார்களோ அவர்கள் உன் மூலம் சகல பாக்கியங்களும் அடைவார்கள்" என்று வரமும் அளித்துவிட்டு அர்த்தநாரீஸ்வர வடிவத்தோடு கயிலாய மலைக்கு எழுந்தருளுகின்றார். அதிலிருந்து கௌரி நோன்பு பூலோகவாசிகளால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராசக்தியை நோக்கி இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுவதனால் இது கௌரி விரதம் என்று அழைக்கப்படுகின்றது. விரத முடிவில் காப்பு அணிவதனால் கௌரி காப்பு என்றும் அழைக்கப்படுகின்றது.

இவ்வாறான சிறப்புடைய கௌரி காப்பு விரதம் திருகோணமலை மாவட்டத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வருகின்றது. இதன் சிறப்பை அறிந்து கொள்ளும் மிகப் பழமை வாய்ந்த நூலாக (தற்போது வரை) 'வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்" என்னும் நூல் காணப்படுகின்றது. இது தம்பலகாமத்தைச் சேர்ந்த திரு. ஐ. வீரக்கோன் முதலியார் அவர்களால் கி.பி. 1600 களில் பாடப்பட்டதாக கருதப்படுகின்றது (கி.பி. 1600 - 1700).

இந் நூலிலே

**''செய்ய சம்பூர் மேவுகின்ற தேவி பத்ரகாளி தனக்**
**கைய மற நேர்ந்திழை எய்யாயிழை கைக்**
**கட்டுமென்பார்''**

என்று கூறப்பட்டுள்ளது. அதாவது அக்காலத்தில் தேசத்து மக்களால் வணங்கி நேர்த்தி செய்து வழிபடப்பட்ட ஆலயங்கள் சிலவற்றில் சம்பூர் பத்திரகாளியும் ஒன்று. இங்கு நேர்த்தி செய்து இழை, அதாவது காப்பு கட்டுதல் தேசத்து மக்களின் வழமை என்று கூறியிருக்கின்றார்.

அண்ணளவாக கி.பி. 1687 இல் பாடப்பட்டதாகக் கூறப்படுகின்ற இந்நூலில் இப்பிரதேசத்தைச் சார்ந்திராத ஒருவரால் சம்பூர் பத்திரகாளி கோவில் இவ்வளவு சிறப்பு கொண்டதாக கூறப்பட்டுள்ளதால் நிச்சயம் இவ்வாறு நேர்த்தி செய்து காப்பு கட்டும் வழக்கம் இதற்கு இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல காலங்களுக்கு முன்னரும் கூட இருந்திருக்க வேண்டும் என்றால் அது மிகையாகாது.

அது மட்டுமல்லாது இவ் ஆலயத்தைப் பாடியவர் இப்பிரதேசத்தைச் சாராது தம்பலகாமத்தைச் சேர்ந்தவராக இருப்பதனாலும், தன்னை தம்பலகாமத்து வீரக்கோன் முதலி என்று அடையாளம் காட்டுவதனாலும் இச்சம்பூர் பத்திரகாளியின் சக்தி, புகழ் என்பன வெளியூர்கள் பலவற்றிலும் பரவியிருந்தமையை உணரக்கூடியதாக வுள்ளது.

1985களின் பின்னரான காலத்தில் இப்பிரதேசங்களில் ஏற்பட்ட ஆயுத மோதல்கள், குழப்பகரமான சூழ்நிலைகள், இடப்பெயர்வுகள் காரணமாக இவ்வாலயத்திற்கு வருகின்ற வெளியூர்க்காரர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்தது. இதனால் கிராமங்கள் பலவற்றிலும் தங்கள் ஊரிலேயுள்ள அம்மன் கோவில்களில் காப்புக் கட்டும் வழக்கமும் தோன்றியது. ஆனால் தற்பொழுது போரற்ற சூழ்நிலையில் மீண்டும் அம்மன் அடியவர்கள் பல இடங்களிலுமிருந்து இங்கு வந்து வழிபாடியற்றுவது அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

# நவராத்திரி விரதம்

இவ் விரதம் புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் நவமி ஈறாக வரும் ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும். கல்வி, செல்வம், வீரத்தை வேண்டி முறையே சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை ஆகிய மூன்று சக்திகளையும் வழிபடப்படும். முதல் மூன்று இரவுகளும் துர்க்கைக்காகவும், அடுத்த மூன்று இரவுகளும் இலக்குமிக்காகவும், இறுதி மூன்று நாள் இரவுகளும் சரஸ்வதிக்காகவும் வேண்டுதல் வழிபாடு இடம் பெறும். பத்தாம் நாள் விஜயதசமி (மானம்பூ திருவிழா) நடைபெறும். இதனையே நவராத்திரி என்பர். வட இந்தியர் இதனை தசரா என்று அழைப்பர்.

இப்புனித விரத நாளின் ஆரம்பத்தில் சக்திகளை கும்பத்திலே ஆவாகித்து (தெய்வத்தை நிறுத்தி வைத்தல்) வழிபாடியற்றுவார்கள். கோவில்கள், வீடுகள், வேலைத் தலங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என எல்லா இடங்களிலும் நவராத்திரி விழா கொண்டாடப்படும். இவ் ஒன்பது இராத்திரிகளின் கடைசி இரவில் ஆயுத பூசை என்னும் நிகழ்வு இடம்பெறும். இதில் மாணவர்களின் புத்தகம் தொடக்கம் தொழிலாளர்களின் ஆயுதங்கள், வேலைக்கு உபயோகிக்கப்படும் முக்கிய கருவிகள் என்பனவற்றை வைத்து சம்பிரதாய வழிபாடு நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செய்யும் தொழிலே தெய்வம்' என்னும் கருத்து இதனால் ஒலிக்கப்படுகின்றது.

பத்தாம் நாளன்று விஜய தசமி (வெற்றி நாள்) தேவி மகிஷாசூரனை வதம் செய்த நாளாக கருதப்படுகின்றது. மகிஷம் என்றால் எருமை மாடு என்று பொருள். எருமையின் முகம் போன்ற வடிவத்தைக் கொண்டு போரிட்ட இவ் அசுரன் தேவியினால் சங்காரம் செய்யப்பட்டமையால் தேவியானவள் மகிஷாசுரவர்த்தனி என்றும் அழைக்கப்படுகின்றாள். அடுத்த நிகழ்வாக வன்னிமரம் அல்லது வாழை மரம் வெட்டும் சடங்கு இடம்பெறும்.

விஜயதசமி தினம் ஏடு தொடங்குவதற்கு சிறந்த நாளாக கொள்ளப்படுகின்றது. இந்நாட்களிலே அனேகமான இந்துக் குழந்தைகள் கைபிடித்து எழுதத் தொடங்கி வைக்கப்படுகின்றனர்.

சம்பூர் காளி கோவிலில், பத்திரகாளி சிலை சம்பூருக்கு வந்து இறங்கியதாகக் கூறப்படும் தோணிக்கல் கடற்கரையில் இருந்து இந்நவராத்திரி தினத்தின் ஆரம்பத்தில் தீர்த்தக் குடம் எடுத்துவந்து கோவிலில் கும்பம் வைத்து வழிபாடுகள் நடைபெறுவது 2013 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றது.

சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் விஷேட தினங்கள்

தை - தைப்பொங்கல்

மாசி - மகாசிவராத்திரி

பங்குனி - கொடியேற்றத் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை - புதுவருடப் பிறப்பு

வைகாசி - விசாகப் பொங்கல்

புரட்டாதி - நவராத்திரி விழா சனீஸ்வர ஹோமம்

ஐப்பசி - கேதார கௌரி விரதம்

கார்த்திகை - கார்த்திகை விளக்கீடு

மார்கழி - திருவெம்பாவை.

சம்பூர் பத்திரகாளி அம்பாள் கோவிலுக்கு ஆலய வளவு தவிர்ந்த நிலையானதும் நிரந்தரமானதுமான வருமானத்தைக் கொடுக்கக்கூடிய சொத்துக்களாக நெற்காணிகள் காணப்படுகின்றன. "மேழிச் செல்வம் கோழை படாது" என்பது பழமொழி (மேழி - ஏர்). இவையாவன:

பெரிய நையந்தைக் குளத்து வெளி - 10 ஏக்கர்கள்

வெம்புச் சேனை வெளி - 4 ஏக்கர்கள்

ஏத்தாலை வெளி - 1 ஏக்கர்

பள்ளிக்குடியிருப்பு
பிரம்புவெளி கீத்துக்கண்டம் - 1 ஏக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

## அம்பிகையின் திருநாமங்களின் பொருள்

1. அம்பிகை - தாயாக இருப்பவள்.

2. காளி - காலத்தைக் கடந்து நிற்பவள், கரிய நிறமுடையவள்.

3. துர்க்கை - காப்பாக இருப்பவள், துக்கத்தைப் போக்குபவள் (துர்க்கம் - கோட்டை).

4. பராசக்தி - மேலான சக்தி.

5. பரமேஸ்வரி - மேலான தலைவி, பரமேஸ்வரன் துணைவி.

6. தேவீ - ஒளிமிக்கவள்.

7. காமாட்சி - அடியார்கள் விருப்பத்தை நிறை வேற்றும் கண்களை உடையவள்.

8. மீனாட்சி - (அக்ஷி - கண்) மீன் போன்ற கண்களை உடையவள்.

9. விசாலாக்ஷி - விசாலமான கண்களை உடைய வள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சிவகாமி - சிவனின் விருப்பத்துக்குரியவள், சிவனை விரும்புபவள்.

11. பார்வதி - பர்வதராஜன் (மலையரசன்) மகள், பூமிக்கு அதிபதி.

12. மகேஸ்வரி - மகேஸ்வரன் துணைவி, பெரிய தலைவி.

13. அகிலாண்டேஸ்வரி - பிரபஞ்சங்களின் தலைவி.

14. லோகேஸ்வரி - உலகங்களின் தலைவி.

15. புவனேஸ்வரி - புவனத்தின் தலைவி (புவனம் - உலகம்).

16. காயத்ரீ - தன்னைத் துதிப்பவர்களைக் காப்பவள்.

17. தக்ஷாயணி - தக்கனின் (தக்ஷசன்) மகள்.

18. மாதங்கி - மாதங்க முனிவரின் புதல்வியானவள்.

19. அன்னபூர்ணா - அன்னம் அளிப்பவள்.

20. கல்யாணி - மங்கலமானவள்.

21. கமலா - தாமரையில் இருப்பவள் (கமலம் - தாமரை).

22. சுலோசனா - அழகிய கண்களையுடையவள் (சுலோசனம் - கண்).

23. பார்க்கவி - ப்ருகு முனிவரின் புதல்வியாக அவதரித்தவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. சங்கரி - சுகத்தைச் செய்பவள். துன்பத்தை சங்காரம் செய்பவள்.

25. சந்தோஷி - சந்தோஷம் தருபவள்.

26. சுபகரி - நலம் செய்பவள் (சுபம் - நலம்).

27. மங்களா - மங்களமானவள்.

28. வரதா - வரம் கொடுப்பவள்.

29. வந்த்யா - வணக்கத்துக்குரியவள்.

30. ஜனனீ - உயிர்களுக்குத் தாய் போன்றவள் (ஜனனம் - பிறப்பு).

31. பூர்ணா - நிறைவானவள் (பூரணம் - நிறைவு).

32. விஜயா - வெற்றியையுடையவள் (ஜயம் - வெற்றி).

33. ஸ்ரீவித்யா - கலைகளுக்குரியவள் (வித்யா - கலை).

34. நிருபமா - ஒப்புவமை இல்லாதவள்.

35. மோகனா - எழிலுருவானவள் (மோகனம் - எழில்).

36. காஞ்சனா - பொன் போல் ஒளிர்பவள் (காஞ்சனம் - பொன்).

37. கிரிஜா - மலைமகள் (கிரி - மலை).

38. வனஜா - அலைமகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. வாகீஸ்வரி - கல்விக்கரசி (வாக - வித்தை, கல்வி).

40. யோகேஸ்வரி - யோகங்களுக்குரிய தலைவி.

41. ஜெகதீஸ்வரி - உலகத்திற்குத் தலைவி (ஜெகம் - உலகம்).

42. மஞ்ஜுபாஷிணி - இனிமையான பேச்சை உடையவள்.

43. காமேஸ்வரி - விருப்பங்களை நிறைவேற்றுபவள்.

44. நிர்மலா - குற்றமற்றவள்.

45. சுசீலா - நல்லொழுக்கம் தருபவள் (சீலம் - ஒழுக்கம்).

46. சுந்தரி - (சுந்தரம் - அழகு) அழகானவள்.

47. சாரதா - சரஸ்வதி.

48. நித்யா - என்றும் உள்ளவள்.

49. காத்யாயனி - காத்தியாயன முனிவரின் மகள்.

50. மந்திரா - மந்திரமலையரசனான மந்திரனின் மகள்.

51. மாதங்கி - மதங்கரின் மகள்.

52. கௌரி - பொன் நிறமானவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

## சக்தி பீடங்கள்

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை மதிக்காமல் தந்தையாகிய தக்கன் செய்த யாகத்திற்குச் சென்ற தாட்சாயணி, தந்தையுடன் சொற்போர் புரிந்து, தானும் தனது நாயகனாகிய சிவபெருமானும் அவநிந்தைக்கு உள்ளாக்கப்பட்டமையை தாங்கிக்கொள்ள முடியாமல், அந்த யாக குண்டத்திலேயே விழுந்து உயிர் நீத்தாள்.

இதனைக் கேள்வியுற்ற சிவபெருமான் அடங்காத வெஞ்சினத்துடன் அவ்விடத்துக்கு வந்து, தனது தேவியின் இறந்த உடலை எடுத்து தலையின் மேல் வைத்து சுழன்றாடி ஆவேசமானார். இதனால் அண்ட சராசரங்களும் நிலை தடுமாறியது. தேவர்கள் முதல் யாவரும் நடுக்கமுற்றனர். இதனைக் கண்ணுற்ற காத்தற் கடவுளாகிய திருமால் தனது சக்கராயுதத்தை ஏவி பார்வதி தேவியாகிய தாட்சாயணியின் உடலைத் துண்டுகளாக்கி கீழே விழும்படி செய்தார். இவ்வுடற் பாகங்கள் பூமியிலே விழுந்த இடங்கள் சக்தி பீடங்கள் என அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு பார்வதி தேவியின் உடற்பாகங்கள் சிதறி வீழ்ந்த இடங்கள் அறுபத்து நான்கு என்று கூறப்படுகின்றது. இதனாலேயே சக்தி பீடங்கள் 64 என கூறுகின்றனர். ஆனால் சில நூல்கள் இச் சக்தி பீடங்கள் 51 என்றும் 108 என்றும் கூறியுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து நான்கு சக்தி பீடங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | மாத்ருபுரம் | - | ரேணுகா பீடம் |
| 2. | கொல்லாபுரம் | - | லக்ஷ்மி பீடம் |
| 3. | துளஜாபுரம் | - | சப்தச்ருங்க பீடம் |
| 4. | இங்குளை | - | ஜவாலாமுகீ பீடம் |
| 5. | ஸ்ரீ காசி | - | அன்னபூர்ணா பீடம் |
| 6. | ரக்த தந்த்ரிகை | - | விந்த்யாசல பீடம் |
| 7. | ரக்த தந்த்ரிகை | - | துர்க்கா பீடம் |
| 8. | சாகம்பரீ | - | ப்ராமீரி பீடம் |
| 9. | மதுரை | - | மீனாட்சி பீடம் |
| 10. | நேபாளம் | - | ரக்ஷ்ய காளி பீடம் |
| 11. | ஸ்ரீநகரம் | - | சாம்பு நகேச்வரி பீடம் |
| 12. | நிலபர்வதம் | - | நீலாம்பரி பீடம் |
| 13. | ஸ்ரீ சந்திரகலை | - | கௌசிகீ பீடம் |
| 14. | ஸ்ரீ காஞ்சி | - | காமாக்ஷி பீடம் |
| 15. | வைத்யநாதம் | - | ஜ்வாலா பீடம் |
| 16. | நீலசரஸ்வதி | - | நீலசரஸ்வதி பீடம் |
| 17. | வேதாரண்யம் | - | ஏகாம்பர பீடம் |
| 18. | வேதாரண்யம் | - | சுந்தரீ பீடம் |
| 19. | மஹாசலம் | - | யோகேஸ்வர பீடம் |
| 20. | ஹிதய பர்வதம் | - | மாதேவீ பீடம் |
| 21. | மணித்வீபம் | - | புவனேஸ்வரி பீடம் |
| 22. | மணித்வீபம் | - | திரிபுரபைரவி பீடம் |
| 23. | அமரேசம் | - | சண்டிகா பீடம் |
| 24. | ப்ரபாஸம் | - | புக்ஷகரேக்ஷணி பீடம் |
| 25. | புக்ஷ்கரம் | - | காயத்ரீ பீடம் |
| 26. | நைமிமீசம் | - | தேவி பீடம் |
| 27. | புக்ஷ்காராக்ஷம் | - | புருகாதா பீடம் |
| 28. | ஆக்ஷாடம் | - | ரதி பீடம் |
| 29. | பாரபூதி | - | பூதி பீடம் |
| 30. | கண்டமுண்டம் | - | தண்டினீ பீடம் |
| 31. | நாமுலம் | - | நாகுலேஸ்வரி பீடம் |
| 32. | ஸ்ரீகிரி | - | சாரதா பீடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 33. | பஞ்சநகம் | - | திரிசூல பீடம் |
| 34. | ஹரிச்சந்திரம் | - | சந்திரா பீடம் |
| 35. | ஆமரதகேஸ்வரம் | - | ஸீக்ஷ்ம பீடம் |
| 36. | மஹாகாளாஸ்தி | - | சாங்கிரீ பீடம் |
| 37. | மத்யா பீதம் | - | சர்வாணி பீடம் |
| 38. | கயை | - | மங்கள பீடம் |
| 39. | கேதாரம் | - | மார்க்கதாயினீ பீடம் |
| 40. | பைரவம் | - | பைரவீ பீடம் |
| 41. | குருக்ஷேத்ரம் | - | தர்ணுப்பிரியை பீடம் |
| 42. | விபினாகுலம் | - | ஸ்வாயம் பலி பீடம் |
| 43. | கணகளம் | - | உக்ரபீடம் |
| 44. | விமகேஸ்வரம் | - | விஸ்வேஸ பீடம் |
| 45. | ஹடாஹாசம் | - | மதாந்தக பீடம் |
| 46. | பீமம் | - | பீம பீடம் |
| 47. | வஸ்த்ரம்பதம் | - | பவானி பீடம் |
| 48. | அவமுக்தம் | - | விசாலாக்ஷி பீடம் |
| 49. | அர்த்த கோடிகம் | - | ருத்ராணி பீடம் |
| 50. | அவமுக்தம் | - | வராஹி பீடம் |
| 51. | மஹாலயம் | - | மஹாபாகா பீடம் |
| 52. | கோகர்ணம் | - | பத்ரகாளி பீடம் |
| 53. | பத்ரகர்ணீகம் | - | பத்ரா பீடம் |
| 54. | ஸ்தாணும் | - | ஸ்தாண்வீசாபீடம் |
| 55. | ஸ்வர்ணாக்ஷம் | - | உத்பலாக்ஷி பீடம் |
| 56. | கமலாலயம் | - | கமலாபீடம் |
| 57. | சகமண்டலம் | - | ப்ரசண்ட பீடம் |
| 58. | மகேடெம் | - | மகுடேஸ்வரி பீடம் |
| 59. | குரண்டலம் | - | த்ரிசந்திரகா பீடம் |
| 60. | மண்டலேசம் | - | சரண்டகா பீடம் |
| 61. | ஸ்தூலகேஸ்வரம் | - | ஸ்தூல பீடம் |
| 62. | சங்க கர்ணம் | - | தீவனி பீடம் |
| 63. | கரவஞ்சம் | - | காளிபீடம் |
| 64. | ஞானிகள் இதயம் | - | பரமேஸ்வரி பீடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19

# மீள் ஆலய பிரவேசம்

சம்பூர் பிரதேசத்தில் இடம்பெற்ற ஆயுத மோதல்கள் காரணமாக 2006-ஆம் ஆண்டு சித்திரை மாதம் இவ்வூர் மக்கள் வெளியேற்றப்பட்டதிலிருந்து மூன்று வருடங்களாக பூட்டப்பட்டிருந்த சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மக்கள் வழிபாடுகளின்றி காணப்பட்டது. பின் இம்மக்கள் தொடர்ச்சியாக எடுத்துவந்த இடைவிடாத முயற்சிகள் காரணமாக ஆரம்பத்தில் விசேட தினத்தில் மாத்திரம் குறிப்பிட்ட நேரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் ஆலய வழிபாடு மேற்கொள்ள அனுமதி கிடைத்தது. இக்காலத்தில் சம்பூர் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் அனுமதி முயற்சிகளை மேற்கொண்டு, சம்பூர் மக்களின் ஆலய வழிபாட்டுக்கு உரிய அனுமதியை தற்போதைய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ. சுசந்த புஞ்சிநிலமே அவர்கள் 2009இல் பெற்றுக் கொடுத்திருந்தார். இதைத் தொடர்ந்து அகதிகள் நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் வாழ்ந்த மக்கள் பேருந்துகள் மூலம் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு வழிபட அனுமதிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து விசேட தினங்களில் மக்கள் கோவிலுக்குச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் (2011) ஆலய பரிபாலனசபைத் தலைவராக திரு. துரை. கிருபைராஜ் அவர்கள் பொறுப்பேற்றார். பின்னர் ஆலய பரிபாலன சபையினரும் மக்களும் மேற்கொண்ட பெருமுயற்சிகளின் பலனாக 2012 ஆனி மாதத்திலிருந்து பிரதி செவ்வாய்க்கிழமைதோறும் பொங்கல் பொங்கி வழிபாடுகள் செய்துவர அனுமதி வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் எந்நேரமும் அம்பாள் ஆலயத்திற்குச் சென்று வழிபாடியற்ற புதிய பாதையும் ஏற்படுத்தப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 19.06.2013 அன்று புதிய பத்திரகாளி அம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் திரு. துரை. கிருபைராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்துவரும் நாட்களில் போரினால் சேதமடைந்த இடிபாடுகளுடன் காணப்பட்ட ஆலய கட்டடங்கள் மக்களின் நடமாட்டத்திற்கு ஆபத்து என உணரப்பட்டதனால் அகற்றப்பட்டன. 2014 ஆவணி மாதம் பெறப்பட்ட விசேட அனுமதியின் பேரில் ஆலயத்திற்கு சுற்றுவேலி அமைக்கப்பட்டது. அத்தோடு ஆலயத்தை மீள அமைப்பதற்கான அனுமதியும் கிடைக்கப் பெற்றிருந்தது. இவ்வாலய புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவுபெறும் நாளை இவ்வூர் மக்கள் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

அனுபவம் : முதன் முதலில் இவ் ஆலயத்திற்கு திருமலை நகரிலிருந்து இடம்பெயர்ந்தோர் நலன்புரி சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பேருந்தில் பயணித்த அம்பாள் பக்தர் ஒருவர் தனது பயணத்தை இவ்வாறு தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை நகரிலிருந்து கந்தளாயூடாக செல்லும்போது பேருந்தின் நான்கு ரயர்கள் ஒவ்வொன்றாக வெடித்தன. அதை திருத்தியமைத்து பயணம் மேற்கொண்டு சாலையூரில் அமைந்திருந்த இராணுவ காவல் முன்னரணை அணுகிய போது அதற்கு அப்பால் செல்ல அனுமதி கிடைக்கவில்லை. பிரதி அமைச்சரான சுசந்த புஞ்சிநிலமே அவர் களினால் அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் கூறியபோதிலும் எமக்கு உள்நுழைய அனுமதி கிடைக்கவில்லை. மிகுந்த ஏமாற்றத்துடன் சுமார் 300 பேரளவில் அவ்விடத்தில் காத்திருந்தனர். அப்போது மூதூருக்கு வருகை தந்திருந்த பிரதியமைச்சரை அவ்விடத்திற்கு அழைத்துவந்து இராணுவத்தினருடன் கலந்துரையாடிய போதிலும் சம்பூர் பத்திரகாளி கோவிலுக்குச் செல்ல அனுமதி கிடைக்காமையால் மிகுந்த ஏமாற்றத்துடன் மீண்டும் திருமலையை வந்தடைந்தேன் என்று கூறினார்.

2 மாதங்களின் பின்னர் பிரதியமைச்சர் கூறியபடி அரச உயர்மட்டத்தினரின் அனுமதியுடன் கோவிலுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டதாகக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

## சம்பூர் காளியம்மன் காவியங்கள்

1. அரியட் சரத்தி திரிசூலி ஓங்காரி
அபிராமி மகமாரி யான கெம்பீரி
திரிபுரசதானந்தி சம்பூர் நகர்ப்பதி
செழிக்கவரு தேவி பத் திரகாளி மீது
தெரிதமிழி னன்பு செறி காவிய மியற்றத்
தெரி கரட கரிமுகமு மழகுவெண் கோடும்
வருகரட விகடதட மனையகுட வயிறன்
மலர டிகளனு தினமு மனதிலய ரேனே.

2. அவ்வுநவ் வுஞ்சவ்வு மான கெம் பீரி
அம்மைபத் திரகாளி மீதுதமி ழோத
மவ்வுமுவ் வுஞ்சிறிய மானசிவ பரனும்
மாதுமையும் மவரயனும் வள்ளி காதலனும்
உவ்வுக்கு றிங்கார மானசிவ பரனும்
ஓதரிய கல்யாண வீரபத்திரனும்
சவ்வுநவ் வும்பவ்வு மானகண் ணகையுந்
தாமரையில் மங்கலரு மேதுணைய தாமே.

3. ஆதியந்தரி கெவுரி யானகெம் பீரி
அரலோக பரலோக அரிசகோ தரியான
பாதிமதி சூடியுட றாடுமக மாயி
பரலோக சிவலோக நவலோக காளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிசங் கரிதுர்க்கை யருள்சிங்க வாகினி
துய்யமகி டாசுரன் சிரநடன வீரி
நீதி செறி மானிடர்கள் நோய்பிணிய கற்றவரு
நேசமுறு வீரபத் திரகாளித் தாயே.

4. இந்துமதி சூடியுட னேசுடலை தன்னில்
இன்பமுட னேநடன மாடுமக மாயி
கந்தனொடு கரிமுகன் தன்னையருள் தேவி
காரணிவா ராகிகலை யேறுசிவ காளி
விந்தை செறி முக்கண்ணி வேதவே தாந்தி
விமலதிரி புரகமல விழியாயி ரத்தி
சந்தமிகு பாடல்புனை அடியார்செ ழிக்கவரு
தாயான வீரபத் திரகாளித் தாயே.

5. ஈசனொடு முப்பத்து முக்கோடி தேவரும்
இருஷிகின் னரர்முனிவ ரெண்டிசையுள் ளோரும்
தோகையே நின்னடி பணிந்துநின் றேத்தச்
சுருதியுடனே சுடலை தனில்நடன மாடி
வாகையுட னெட்டுக்க ரத்திலா யுதமும்
வாகையாக வேபிடித் தசுரரைவ தைத்த
தோகையே அடியவர்கள் நோய்பிணிதொ
லைக்கவரு
சூலியே வீர பத்திரகாளித் தாயே.

6. உம்பர் தொழு பசுவதி பாம்பணிம னோகரி
உத்தண்ட கெம்பீரி வீரி ஓங் காரி
சம்புறுச டாட்சரி மாதங்கி திரிசூலி
சாலோக சாமீப சாயுட்ச தேவி
நம்பின வர்க்குதவு நாரிபர கௌரி
நளின கெறு விதயோக கமலகா மாட்சி
கொம்புகுழல் பலதொனிமு ழங்கிடுங் கோவிலுறை
கோதையே வீரபத் திரகாளித் தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஊழிகா லத்திலொளி யானசிவ சத்திநீ
ஓங்கார றிங்கார மானசிவ சத்திநீ
தாழ்பணிப வர்கருள்கொ டுத்தசிவ சத்திநீ
சாரூப மாகவே தான் முதலி ருந்தநீ
வாழ்புவன வாலைதிரி புரகமல சத்திநீ
மாதவன் தங்கை நீ மதியினொளி யானநீ
காளிநீ யுன்னடிய ருயர்வடைய வேண்டியசெய்
கன்னியே வீரபத் திரகாளித் தாயே.

8. எட்டெட் டறுபத்து நாலுகலை யானநீ
ஈசுவரி யாகவே வடவையை எரித்தநீ
முட்டவே மதுமாதங்கி ஷத்துணி யானநீ
மோதுகட லேழையும் முன்னேகு டித்தநீ
துட்டப்ப சாசிகளை வெட்டியே வென்றநீ
சுடலையிற் பேச்சியுரு வாய்நடன மிட்டநீ
கட்டழகி யுன்னடியர் செல்வஞ்செ ழிக்கவரு
காளியே வீரபத்திரகாளித் தாயே.

9. ஏகபர னாரிடமு றைந்தாய் நமோநமோ
இடர்பிணிகள் துயரகல வந்தாய்ந மோநமோ
நாகச டாட்சரியு மானாய்ந மோநமோ
நாலிரண் டாயுதமெ டுத்தாய்ந மோநமோ
வாகனைய தக்கனைவ தைத்தாய்ந மோநமோ
வருபூதப் படையழகி யானாய்ந மோநமோ
பூகமுயர் நாடுநகர் அடியார்செ ழிக்கவரு
பூவையே வீரபத் திரகாளித் தாயே.

10. ஐயனுட னேயிருள னானசிவ மருளன்
ஆடிவரு காட்டேறி யாதிவ யிரவரும்
துய்யவிறு மன்வீர முண்ட னொரு பரிகலஞ்
சூழவே நார்கொலுவ மர்ந்தினி திருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையமதில் மானிடர்கள் நோய்பிணிய கற்றியே
வரு பூசை பெலிபூசை தானுகந் தருளும்
தையலே யடியாரை வாழ்விக்க வருகின்ற
தாயான வீரபத்திர காளித் தாயே.

11. ஒளியாய் முதற் சத்தி யாயிருந் தாயே
உலகோர்கள் பிணிதீர வருள்புரிந் தாயே
தெளிவான முக்கோண மீதுறைந் தாயே
சிவனாரிடப்பாக மாயிருந்தாயே
களிகூர நின்கிருபை காட்ட வந்தாயே
கருணைதந் தென்றுமே காக்க வந் தாயே
அளிமீறி யிசைபாடு மடியார்கள் துயர்தீர்க்கு
மம்மையே வீரபத் திரகாளித் தாயே.

12. ஓதுபரை யானசிவ சத்திசி வாயநம
ஓங்கார மாறாத ஒளியேசி வாயநம
நாதவொளி யானசிவ தாயேசி வாயநம
நாதாந்த மானமெய்ப் பொருளேசி வாயநம
வேதவே தாந்தியென வந்தாய்சி வாயநம
விண்ணுமண் ணும்புனலு மானாய்சி வாயநம
சோதியே யடியாரை வாழ்விக்கு மன்புடைய
தோகையே வீரபத்திரகாளித் தாயே.

13. ஔவுநவ் வுஞ்சௌவு மானாய்சி வாயநம
ஐயுங்கிலி யுங்கிறியு மானாய்சி வாயநம
சௌவுமை யுங்கிலியு மானாய்சி வாயநம
சகலகலை யாகம மானாய்சி வாயநம
பவ்வுமுவ் வுஞ்சிறியு மானாய்சி வாயநம
பரவைபுனல் வற்றக்கு டித்தாய்சி வாயநம
கொவ்வையித ழன்னையே வந்தவினை நீக்கிடுங்
கோதையே வீரபத்திரகாளித் தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. அஃகர மணிந்துநட மாடிநின் றாயே
அன்றுமகி டாசுரனை வென்றுவந் தாயே
சக்கர மணிந்தமால் தங்கையென் தாயே
சண்முகன் தந்தையு மாகிநின் றாயே
தக்கபுகழ் செல்வங்கள் தயிரியம் பெருவாழ்வு
தந்துனது அடியாரை ரட்சியுந் தாயே
கக்குமத கருவிபாய் செந்நெல்வயல் மிக விளைய
வருள்தெய்வ வீரபத்திகாளித் தாயே.

15. ஏர்வாழி மறைவாழி யடியார்கள் வாழி
யீரேழு புவனமும் வாழிமிக வாழி
பார்வாழி மன்னர் செங் கோல் நிதம் வாழி
பஞ்சாட்ச ரத்துடன் பாவையர்கள் வாழி
கார்வாழி மட்டக்க ளப்புநகர் வாழி
காசினியி லித்தமிழை யோதினோர் வாழி
சீர்வாழி சம்பூர் நகர்ப்பதிக் கோவிலுறை
தேவி பத்ர காளிபதம் வாழ வாழியதே.

முற்றும்

இக்காவியத்தை மகாமாரித் தேவி திவ்விய கரணி என்னும் நூலிலிருந்து பெற்றுக் கொண்டேன். ஏட்டுப் பிரதியாகவிருந்த இதை மட்டக்களப்பு அட்டப்பள்ளத்தை சேர்ந்த திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தொகுத் தளித்துள்ளார். இயற்றப்பட்ட காலம் அறியப்படவில்லை. ஆனால் சம்பூரைச் சேர்ந்த கூத்தாடி வைரர் என்பவர் இக்காவியத்தை இயற்றிப் பாடியதாக பெரியவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

1. அருள்தரும் சம்பூர் நகர்ப் பதியமர்ந்த
   ஆதிபத்திர காளியம்மனின் மீது
முருகு செந்தமிழில் யான் காவியமியம்ப
   முக்கண்ணனார் மகன் மூத்தவனை வேண்டி
வருபிழைகள் ளொன்றுமே வராதிருக்கவும்
   வளர் தங்கு சம்பூர் நகர்ப்பதி தழைக்கவும்
திருவருளும் செய பத்திர காளி புகழோதும்
   சிறியேனுக் கருள்புரிய வரம் வேண்டினேனே!

2. ஆதி பத்திர காளியம்மனே அன்று
   ஆழ்கடல் தாண்டியே ஈழநகர் வந்து
தாதியாய் சம்பூர் நகர்ப்பதியை நாடி
   தாயே நீ பொங்கலுடன் பூசையும் வேண்டி
நீதிநெறி அன்பினோர்க் கருள்புரிய வென்று
   நிமலியே நீ காட்டுத் தென்னைமர நிழலில்
சோதியாய் அமர்ந்ததை உலகமறியாதோ
   சூலியே அருள் பத்திர காளி மாதாவே!

3. இரணமுக நரசிங்கி ஈசனார் தேவிநீ
   இடுகாடு நாடி இறைவனுடன் ஆடும்நீ
பரமனிடம் பாகம் பண்பாய் அமர்ந்தநீ
   பத்திநி சத்திநி பராக்கிரம காளிநீ
வரமருள சம்பூர்நகர்ப் பதி உறைந்தநீ
   வடபத்திர காளிநீ வடிவான மோகிநீ
அரகர சிவாயமென ஆடிவரும் தாண்டவீ
   அன்னையே அருள்பத்திர காளி மாதாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஈசனார் தேவியாய் இடப்பாக மானாய்
ஈஸ்வரி இறை பக்தர் உள்ளத்தமர்ந்தாய்
தேசமெல்லாம் புகழ் சிவசக்தியானாய்
தேவர்கள் தொழுது ஏற்றும் சிற்சக்தியானாய்
பாசமுடன் பாலமுருகனின் கை தனில்
பக்தர்களைக் காத்திடும் சக்தி வேலானாய்
ஆசையுடன் உன்பாதம் நாடுமடியேனை
அன்னையே அருள்புரிய வேண்டும் மாதாவே!

5. உத்தண்ட சண்டி கெம்பீரி நீஅம்மா
உத்தமர்க் கருள்புரியும் உயர் தெய்வமம்மா
பித்தனுடன் வாதாடும் பெண்ணே நீஅம்மா
பெரியாச்சி வியாழாட்சி காமாட்சியம்மா
முத்திதரும் முருகனுக் குற்ற தாயம்மா
முகமலர்ந்தே கண் பாரும் அம்மா
சத்தி பத்திர காளி புத்தி தரும் சர்வாணி
சம்பூரில் வாழ்கின்ற தயவான தாயே!

6. ஊழிக் கூத்தாடிய ஓங்காரி வா வா
ஊழ்வினை பிணிதோசம் ஒழிந்தோட வாவா
கூளிகள் தலைவி நீ சூலி வடிவாக வா
கொடிய வினை கிரக வினை நாடாமல் ஓடி வா
காளி நீ ஆடி வா கர்ம வினை தீர வா
காதலாய்க் காவியம் பாடுமென்னைக் காக்க வா
ஆழி சூழ் உலகெல்லாம் ஆளுமென் தாயே
அன்னையே அருள் பத்திர காளி மாதாவே!

7. எக்கால தேவி நீ எல்லம்மை காளி வா
எந்நேரமும் எனக் குற்ற துணையாக வா
சக்கரந் தரித்த மால் தங்கையே வா வா – என்
சத்திராதிகளை தலை கவிழ வைக்க வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கெல்லாம் புகழ் சம்பூரில் வாழும்
செய பத்திர காளி நீ சீக்கிரம் வா வா
தக்கன் மகள் சக்தி தாட்சாயினியுனை
தயவாக வேண்டினேன் தயவு செய்வாயே!

8. ஏவல் வினை பேய் பில்லி எதிரி எதிரேத்தும்
இக்கட்டு தடைக்கட்டு எதுவும் அணுகாமல்
காவலாய் என்னோடு காதலாய் நின்று
கடுகளவும் வாராமல் காளி நீ காக்க
தாவலாய் வரவேணும் தாரணியில் மேலும்
தயவாக அடியேனை தாழ்வின்றி வாழ
பாவலராகவும் பண்பாகவும் எனை
பத்திரகாளி நீ பாது காத்தருள்வாய்!

9. ஐங்கரன் அன்னையே ஆதிபராசக்தி
அகிலாண்ட கோடியே பிரமாண்ட நாயகி
திங்கள் இளம்பிறை சூடிய காளி - ஆதி
சிவனோடு கூட நடமாடும் மாகாளி
பங்கய முகத்தி நீ பாசாங்கு சத்தி நீ
பராக்கிரம காளி நீ சத்தி சிறி சூலி நீ
அங்கயக் கண்ணியுன் னடிபணியு மென்னை
ஆதரித் தருள் புரிய வரவேண்டும் - தாயே!

10. ஒன்றும் மறியா ஏழை உன்திருவடியை நம்பி
ஓதினேன் உன்புகழை ஆதி பத்திர காளி
நன்றி மறவா மக்கள் நல்லோர் சினேகம்
நற்புத்தி நற்பண்பு நானிலம் போற்ற
என்று மெனை இறவாத புகழ் சூழ நாளும்
எந்நாளும் இறை பக்தியுடன் நன்று வாழ
அன்பாக அடியேனை ஆள அருளம்மா
அன்னையே அருள் பத்திரகாளி மாதாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஓம் சக்தி ஓம் காளி ஓம் பராசக்தி உனை
ஓதுவார்க்கருள் புரியும் ஓம் மகாசக்தி
பாம்பணியும் பரனோடு பாராளும் சக்தி
பச்சை மால் தங்கையாய் வந்த நவசக்தி
சாம்பிராணி வாசகி சதுர்முக நாயகி
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய தேவி
சிங்க வாகிநீ திரி சூலம் ஏந்தி நீ – சர்வ
சித்தி தந்தென்னையாள வரவேண்டினேனே!

12. ஔடதமுண்டும் அடங்காத நோயை
அம்மா உன் பெயர் சொல்லி துதி செய்தால் தீர
பௌவிய மாக உன்பாதம் நம்பியே
பணிந்திடும் அடியாரை பாதுகாத்தருள் வாய்
கௌவவே வரும் நாயும் கரடி புலி சிங்கம்
கொடிய விச அரவுகளும் பகைக்கிரக தோசம்
இவ்வுலகில் வரும் துன்பம் மனிதர் இடும் தொல்லை
இல்லாமல் காத்தருள வரம் அருளும் தாயே!

13. சத்தி – பத்திர காளியம்மனே சரணம்
சண்டி மாதேவி தாய் சாம்பவி சரணம்
வித்தகி வீர மாகாளியே சரணம்
வினை தீர்க்கும் வீர பத்திர காளியே சரணம்
அத்தனிட பத்தி நீ அம்மனே சரணம்
அங்கயற்கண்ணி அபிராமியே சரணம்
முத்தி அருளும் சத்தி சம்பூர் நகர்ப்பதியில்
முறையாகக் குடிகொண்ட முக்கண்ணி சரணம்!

14. முக்கண்ணி வீரபத்திர காளியே போற்றி
முப்புரமெரித்த சிவன் பார்வதியே போற்றி
தக்கன் மகளாய் வந்த சக்தியே போற்றி
தாரணி தழைக்க மழை அருள்வாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கையே போற்றி திரிசூலியே போற்றி
துயர்நீக்கி எமையாளும் இறைவியே போற்றி
திக்கெல்லாம் புகழ் சம்பூரில் வாழும்
செய பத்திர காளி பொற்பாதம் போற்றி போற்றி!

15. செய பத்திர காளி பொற் பாதமலர் போற்றி
செந்தமிழில் காளிமேல் செப்புமிம் மாலையை
பயபக்தியுடன் அன்பாய் பாடுமடியாரையும்
பக்தியுடன் ஆசையாய் கேட்குமடியாரையும்
தீயசக்தி எதுவுமே ஒட்டாமல் காத்திடும்
வீரபத்திர காளி விழி ஒளி துணையாகும்
பயமொன்றும் அணுகாது அம்மனருள் நிச்சயம்
பத்திர காளி புகழ் பாடிப் பணிந்துய்வோமே!

ஆக்கியோர்
கவிக்குயிலன்
**சிவஸ்ரீ. அ. அரசரெத்தினம்**
சேனையூர் – திருகோணமலை

*இக்காவியத்தை சிவஸ்ரீ அ. அரசரெத்தினம் ஐயா அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டேன். இக்காவியம் 1970களில் இயற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

1. சீர்தங்கு சம்பூர் செழிக்க வாழ்கின்ற
   செயபத்திர காளிமேல் செந்தமிழுரைக்க
   பேர்தங்கு கெவுளிமுனை ஊர் தங்கு மீகாமன்
   பெரிய அன்பினொடு நாளும் வணங்க
   நீர்தங்கு முண்டகப் பொய்கையின் கரை நிழலில்
   நிலையாகக் குடிகொண்ட கடகரி முகத்தோன்
   கோர்தங்கு கோட்டினால் பாரத மெழுதிய
   குஞ்சரத் தும்பிமுகவன் துணையதாமே!

2. துணையாக உமையம்மை கூட நடமாடிடும்
   துரந்தரி மாகாளி பதமே மனதில் வைத்து
   வினையொன்றும் அணுகாமல் அடியவர்க்கருளும்
   மெல்லியேயுன் புகழை யான் பாடுதற்கு
   அணையாக வரவேண்டும் அருள் பெருகியெந்நாளும்
   ஆதியாகிய பத்திரகாளி மாதாவே
   கணை கொண்டு மகிடாசூரன் தலைதுணிந்த
   காரணி பதம் எந்தன் நாவில் மறவேனே!

3. மறவாத கருணையே தந்துரட்சித்தருளும்
   மாதங்கி மாகாளி மகிட சங்காரி
   உறவாக சிவனோடு கூட நட மாடிடும்
   உத்தண்ட சண்டி கெம்பீரி திரிசூலி
   நிறமான தக்கன் சிரந்தனை அரிந்த
   செய வீரபத்திரன் தனை மருவும் காளி
   குறையொன்றும் அணுகாமல் சம்பூரில் வாழ்கின்ற
   கோதையை நினைக்க வினையோடி மாறிடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சங்கரி சிவானந்தி லோகவுட்சாகரி
சாம்பவி மகேஸ்வரி வாணி கெங்காதரி
சிங்கவாகனி கௌரிசக்தி சம்பூரணி
சிந்தை மகிழ்வாகவே எங்களை ரட்சினி
பங்கய முகத்தினி பார்பதி லெட்சுமி
பாசாங்கு சக்தினி பரம கல்யாணி
குங்கும மயோதரி கொல்லனிட தங்கச்சி
கோடி நவகாளியாய் எங்கும் நின்றவளே!

5. காளியாய் உலகெலாம் நின்றாடுங் காரணி
கசடர்களை நெஞ்சம் பிளக்கின்ற நாரணி
தோழியாய் உலகெலாம் நின்ற மகா பூரணி
துட்டன் மகிடன்தலை துணித்த அவதாரணி
கூளியான களம் வேண்ட ஆதி நாரணிநீ
குமரனது கைக்கு சக்தி வேலான காளிநீ
ஆழி சூழ் உலகெலாம் ஆழ்கின்ற சூரனுடல்
அழித்தொழித்த வேலான நாரணியே!

6. வெண்கமல மலர்வாசம் வீசவே சம்பூரில்
மேவியே குடிகொண்டு வாழ்கின்ற தாயே
பண்பினுடன் உன்னடி பணிந்தவர்க் கருள்புரியும்
பரலோக சக்தியாய் தொண்டர்க்கு அற்புதமாய்
நின்றாடும் துர்க்கையே பகவதி சூரசங்காரி
நிமலி பரிபூரணி பஞ்சாட்சரத்தி
வண்டுறையும் மலர் வாசம் வீசு மெழில்
வளமான சம்பூரிலங்கைக்கு வந்த நாயகியே!

7. வந்த நவகாளியே அந்தர சாமுண்டியே
வன்பினுறு தேவியே பெண்ணான நீலியே
கொந்தழக வல்லியே விந்தைமிகு செல்வியே
கோபமுறு கோதையே குளிர்முகமாக வரும்
தேவியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழ்வாகவே எங்களை ரட்சித்து
தேவியே உன்னடி பணிந்தவர்க்கெல்லாம்
வந்தவினை போக்கி அருள்பட பத்திரகாளியே
செந்தமிழர் துயர்தனைத் தீர்த் தருளுமம்மா!

8. சம்பூரிலும் திருகோணமலை தன்னிலும்
தம்பலகமத்திலும் மட்டக்களப்பிலும்
அம்புவியில் அழகான வடதேசந்தன்னிலும்
அயோத்தி நகர் தன்னிலும் யாழ்ப்பாண மீதிலும்
தும்பிமுகனுக் கிளைய வீரபத்திர தேவனோடு
துயர்நீக்கி எந்த எந்தப் பொது இடங்களிலும்
நம்பினோர் தங்களிட நெஞ்சிலும் குடிகொண்ட
நங்கையே வீரபத்திர காளியானவளே!

9. பச்சை மேனி முழுவதும் நீல சய கோதரி
பாடுவிச்சி காமி தாடகை மனோன்மணி
உச்சிதமமான திரிசூலி மகாசக்தி நீ
ஊழிக் கூத்தாடிய உருத்திர சங்காரி
கொச்சிமலை ஆடிச்சி வேணிச்சி வாணிச்சி
கொஞ்சு கிளியாய் ஈஸ்வரி பூரணி
சிச்சி யெனும் மக்காமி காளி சாமுண்டி
சிவகாமி பத்திரகாளி அம்பிகையே!

10. கொத்து முத்துக் குச்சிலாவு மொரு கொண்டையும்
குங்குமப் பொட்டினுட நெற்றியினழகும்
குத்துமுலை மார்பழகும் மூக்குத்தி முத்தழகும்
கொவ்வையிதழ் வாயுமே இலங்க
செல்வியே எந்தனிட கவலையைத் தீர்க்க
திருவுளந் தன்னிலே நீ இரங்கலையோ?
புல்லதைத் தின்கின்ற பக்குறுவை வதை செய்த
பூவையே பத்திரகாளியம்பிகையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பத்திரகாளி நீ உச்சித மனோகரி
    பராக்கிரம வீரிநீ ரெத்தத் திரிசூலி நீ
சத்திமா சத்தி நீ சண்டப்பிரசண்டி நீ
    சகலதும் சர்வமும் சக்திமயமான நீ
புத்தி தரும் சித்தி தரும் புலமை தரும் காளிநீ
    புகழோடும் அருளோடும் சம்பூரில் வாழும் நீ
வித்தகி வீர பத்திரகாளி அருள் தாயே
    வில்லுக் குளத்தருகில் வந்துறைந்தவளே!

12. பத்திரகாளியுன் பாதமலர் போற்றி
    பத்தினி சத்தினி பராசக்தி போற்றி
சித்தி தரும் சிவசக்தி சிற்சத்தி போற்றி
    சிவ வீரபத்திரன் பாரியே போற்றி
சுத்தி வரும் நவக்கிரக நாயகியே போற்றி
    சுகமருளும் ஆதிபராசக்தியே போற்றி
நித்தமும் ''செவ்வாய்'' பூசைதனையேற்கும்
    நிமலி திரி சூலியே போற்றி செய போற்றி!

இக்காவியத்தை சம்பூரின் அயல் கிராமமான மருதடிச்சேனையைச் சேர்ந்த அமரர் மாரிமுத்து அவர்கள் இயற்றியதாகக் கூறப்படுகின்றது. இது பழைய ஏட்டுப் பிரதியாகக் காணப்பட்டதாக கூறும் சேனையூரைச் சேர்ந்த சிவஸ்ரீ அ. அரசரெத்தினம் ஐயா அவர்களிடமிருந்து வாய்மொழியாக இக்காவியத்தைப் பெற்றுக் கொண்டேன் *(2014)*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

1. திருமருவு வெண்கமல வாவிபுடை சூழவரு
   செப்பரிய சம்பூர் நகர்ப் பதியமர்ந்த
மருமருவு வடபத்திரகாளி தன் மீது
   மைந்தன் நான் காவியமியம்ப அருள்சுவர்ந்து
அருமருவு வெண்பிறை அணிந்த சிவனுமை பாதம்
   அர நொடியில் வலமாகி வந்தரிய கனியுண்ட
பெருமையுறும் அழகுடைய வெண்பிறைக் கோடும்
   பேழை வயிறன் பாதம் நாளும் மறவேனே!

2. மறையோது பிரமனது நாவினில் இருந்திடும்
   வாலை சரஸ்வதியினது மலரடிகள் போற்றி
கறையுண்ட கண்டனருள் கந்தனிரு பாதமெக்
   காலுமறவாத நற் கருணையது கொண்டு
தரைமீதில் உறைவான் மறைவாளர் திங்கள்முன்
   தமிய நான் நன்மொழிகள் கூறவருள் கூர்ந்து
முறையான சம்பூர் நகர்பதி தழைக்கவரு
   முத்தியே ஆதிபத்திரகாளி அம்மனே!

3. முத்தாகி வந்த நீ வித்தாகி நின்ற நீ
   மூவுலகம் ஈன்றதொரு மூல நாயகியும் நீ
பக்தர்க்கிரங்கி வினை தீர்த்த மாதங்கி நீ
   பாசாங்குசத்தி நீ பரமகல்யாணி நீ
எந் தேசமும் புகழ் விளங்கவரு தேவிநீ
   எந்தனுக்கே அருள் தந்த கம்பீரி
சக்தியே சம்பூர் நகர்பதி தழைக்க வரு
   தையலே ஆதி பத்திரகாளி அம்மனே!

4. ஆதி பத்திரகாளி என வந்துதித்தாய்
   அசுரரொடு வாதாடி அமரது புரிந்தாய்
சூதம் மிதிற்கனிய தாகியே பாண்டியன்
   சுற்றமொரு மதுரை நகர் முற்றையும் எரித்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியாய் உலகிலுறு மானுடர்கள் நோய் பிணியை
நீக்கவென்றே மனதில் நின்னருள் சுவர்ந்து
மேதினியில் வளமிக்க சம்பூர் தழைக்க வரு
மேவிவளர் ஆதிபத்திரகாளி அம்மனே!

5. மேவியே உந்தன்திரு பாதமதை நம்புவோர்
வினையான கர்மமொரு தீவினைகள் நீக்கி
பூவுலகில் அரிய நற்புத்திர சந்தானமும்
புகழான பலநீதி பொருந்தியே உலகில்
தீவினைகளான பல நோய்பிணிகள் அற்று
தேவியே யுந்தன் இரு பாத தாமரையே
தாவியே சாயுச்சிய நற்கதியில் நன்னுவார்
சம்பூர் நகர்பதியமர்ந்த மாதரசே!

6. சம்புவாகிய சிவன் இடப்புற மிருந்துமுன்
சமருற்ற மகிடனுயிர் வதையே புரிந்தாய்
கம்பகாமாட்சியென வந்து அடியார்களின்
கவலையற வரமது கொடுத்து ரட்சித்து
நம்பவே அருளுதவு அம்மை நீயாகையால்
நல்கிவிலா எந்தனைக் காக்க வா... நீ
சம்பூர் நகர் பதி தழைத்திட அமர்ந்த
சக்தி பத்திரகாளி பாதம் மறவேனே!

7. மறவாத கமலமலர் அனைய திருமுகமும்
வலிய தொருகர மதினில் எடுத்த சக்கரமும்
அறமுற்ற அன்னமிகு சட்டுவும் ஒரு கரமும்
அனல் கொப்பளிக்கு முன் சூலம் ஒரு கையும்
நிறமுற்ற அம்பொருகை வில்லொருகை
வாளொருகை
செப்பெரிய சமராரு சிற்றுடுக் கொருகை
குறையாமல் ஏந்திவரு கோதையே சம்பூரில்
குடிகொண்ட வீரபத்திரகாளி அம்மனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வீரபத்திரகாளி என தினம் வணங்க
வினையான பேய் பில்லியனைய சூனியமும்
பாரில் வரு பூதப் பசாசினொடு நாய் கரடி
பலமிருகு திரி கரிகள் சருவியுற்றிடினும்
ஓரி செ‍ன நாயினொடு விசமிருகம் ஆனதும்
ஓடியவை வீற்றிடும் உந்தனை நீக்கெக்க
திருமருவு வாவிசூழ் சம்பூர் தழைக்க வரு
நிமலி பத்திரகாளி பாதம் மறவேனே!

9. நிமலி திரிசூலி மாதங்கி பஞ்சாட்சரி
நித்தமும் கைலையில் அமர்ந்த ரீங்காரி
அமலி பரிபூரணி ஆதி சிவனுக்குரிய
அன்னையே மின் அணைய வண்ண மாதரசே
கமலி பரிபூரணி சாமுண்டி முக்கோணி
கருதரிய பெலி நித மருந்துமூதண்டி
விமலியே சம்பூர் நகர்பதி தழைக்க வரு
மெஞ்ஞான சக்தி பதமோத வினை போமே!

10. பதமோது மொழியாளை காப்பாய் நமோ நமோ
பழுதற்ற மதுரை மீனாட்சி நமோ நமோ
மதமுற்ற சிங்கமதில் வருவாய் நமோ நமோ
மாங்கனியதாய் வந்த மாதா நமோ நமோ
வதையுற்ற தேனொடு கன்னல் பாலபிஷேகம்
வருபொங்கல் பூசையு முகந்தாய் நமோ நமோ
இதமுற்ற சம்பூர் செழிக்கவரு தேவியே
எளியேனின் கவலையற வரமுகந்தருளே!

11. அருள் பெருகு கைலை வளர் ஈசரும் வாழி
ஆண்டாரைக் காத்த ஆறுமுகனும் வாழி
திருமாலின் ஒரு முனிவர் தேவரும் வாழி
செப்பரிய உலகில் நிதம் மழை பொழிய வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையுற்றிடு காளியப்பு பண்டிதன் உதவ
வருவிசய சிங்கனின் வாய்மொழிகள் வாழி
மருமருவு சம்பூர் நகர்பதி தழைக்கவரு
வடபத்திரகாளியும் வாழ்க வாழியவே!

இயற்றியவர்
**காளியப்பு விசயசிங்கன்**
மருதடிச்சேனை – திருகோணமலை

*இக்காவியம் கி.பி. 1900-இன் முற்பகுதிகளில் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதை சேனையூரைச் சேர்ந்த திரு. நா. சுபராஜ் அவர்களிடமிருந்து திரு. அ. அரசரெத்தினம் ஐயா ஊடாகப் பெற்றுக் கொண்டேன்.*

**5**

சீர் மேவு வளர் கொட்டியாரமா நகரில்
சம்பூர் செழிக்க வரும் அம்மை பத்திரகாளி மீதில்
கார்மேவு முதல் பெருகி முதலாகி நின்ற
பேழ வயிற் றொன்பாதம் ஓதுவர் தமக்கு
ஓதரிய சரவண தாமரைப் பொய்கையொன்று உண்டு
ஓங்கார வடி வுண்டு மாது மகளுண்டு
வள்ளி தெய்வானை மலரடிகள் உண்டு
காதில் அணியும் கவிசல குண்டலமும் உண்டு
[தந்தனத நாதனத நாதா]

கைகள் ஈராறு தன்சமலர் உண்டு
வேதனை தணிக்க வரும் ஆறுமுகவே லுண்டு
சத்தி வடிவேல் பாதம் நாலு மறைவேனே
மறவாமல் அருள் தன்னை நீ அருளல் வேண்டும்
வண்மை யொடு எங்களைக் காத்தருள வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாத செல்வத்தை வருவிக்க வேண்டும்
குணமாக எங்கள் துயர் தீர்த்தருள வேண்டும்
ஆதியே சோதியே சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
தாயே.
[தந்தனத நாதனத நாதென்த நாநா]

*இக்காவியத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய முன்னாள் காரியப்பரான திரு. கோணமலை கண்டுமணி என்பவர் 1980களில் இயற்றிப் பாடியதாகக் கூறப்படுகிறது. இத்தகவலை வழங்கிய இவரது மகன் திரு. க. சிவநேசன் அவர்களிடமிருந்து இக்காவியத்தை வாய்மொழியாகப் பெற்றுக் கொண்டேன் (2014).*

## சம்பூர் அருள்மிகு ஆதி பத்திரகாளியம்பாள் மீது ஆனந்தக் கும்மி

சீரோங்க சம்பூர்ப் பதியில் – அருள்புரிய
பாரோங்க வந்தமர்ந்த பத்திரகாளி மீது
செந்தமிழில் ஆனந்தக் கும்மி பாட
எந்தனண்டை கந்தனுக்கு மூத்த வித்தைக் கணபதியே
வா வா
[சீரோங்க]

கந்தன் கைக்கு வேல்வடிவம் ஆனாள்
நொந்த தேவர் சிந்தை மகிழ்ந்தாடக் காளி
மகிடனையே வென்றாள் – அன்பர்கள்
வேதமோத சம்பூர் அழகு பதி வந்தமர்ந்த பத்திரகாளி
சுந்தரியை நம்பு
[சீரோங்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரியும் நிரந்தரியும் ஆதிசக்தி
கந்தனுக்கும் கணபதிக்கும் அன்பான தாயே
மனம் மகிழ்ந்து பாடுமடியேனை ஒரு குறைவும்
வந்தடைந்து வாட்டாமல் காப்பதுந்தன் ஆணை
[சீரோங்க]

உன்னை நம்பி அடியவர்கள் நாளும் பூசை பொங்கல்
அன்புடனே கொண்டுவரு அழகினைப் பாடும்
என்னை என்றும் கைவிடாமல் காரும் பத்திரகாளி
அன்னையே இவ்வுலக மாந்தர் உனக்கபயமாகும்
[சீரோங்க]

அபயம் அளித்தாளும் ஆதிசக்தி சம்பூரில்
அன்பாகக் கோயில் கொண்ட ஆதி பராசக்தி
உபயம் ஈந்து உனை வணங்கும் பத்தி – அன்பர்களை
ஒரு குறையும் நாடாமல் உவந்தளிப்பாய் சித்தி
[சீரோங்க]

சித்தி தரும் பத்திர காளித் தாயே
உந்தனடி பக்தியுடன் பற்றி நின்றால்
நாடாது பேயே – சுற்றி வரும் நவக்கிரக தோசம்
நம்மை வந்து புத்திகெட வைக்காது காளி தரும் பாசம்
[சீரோங்க]

காளியம்மை கூளிகணம் சூழ – பத்திரகாளி
காட்டுத் தென்னை மரநிழலில் கோயில் கொண்டு வாழ
ஆழி சூழ்ந்த ஆழ் கடலைத் தாண்டி பத்திரகாளி
அடியவர்கள் குறை தீர்க்க வந்தமர்ந்தாள் வேண்டி
[சீரோங்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமர்ந்த சக்தி பராசக்தி எந்தனுக்கு
மகிழ்ச்சியுடன் கும்மி பாட வரந்தந்தாள் சித்தி
எந்த நேரமும் தேவி பக்தி வைப்பவர்கள்
மனம் நொந்து வாழ்ந்திடாமல் வரமருள்வாள் ஓம் பராசக்தி
[சீரோங்க]

இயற்றியவர்
கவிக் குயிலன்
**சிவஸ்ரீ. அ. அரசரெத்தினம்**
சேனையூர் - திருகோணமலை

*இவ் ஆனந்தக் கும்மியை பத்திரகாளி அம்பாளின் தீவிர பக்தரான சிவஸ்ரீ அ. அரசரெத்தினம் ஐயா அவர்களிட மிருந்து பெற்றுக் கொண்டேன் (2013).*

## சம்பூர் தாயே!

பேசரிய பிறவிதனைப் பெற்ற பின்பும்
 பெருமாட்டி என்று மனம் உக்கி உந்தன்
வாசலிலே தினந்தோறும் வந்து நின்று
 வழிபடுதற் கறியாத வறியேனனை
நேசமுடன் நினது புகழ் பரவி மாறும்
 நினையன்றி வேறொன்றில் நினைவைப்
 போக்கிப்
பாசவலைப் பட்டுழலா வாளுஞ் சம்பூர்
 பத்திரநற்கா ளியருள்பா லிப்பாயே!

தீராத நோயெல்லாம் தீர்க்க வல்ல
 திருவென்று தெருவெல்லாம் திறந்து பேசும்
பேரான தெய்வமன்றோ எங்கள் சம்பூர்ப்
 பெருமாட்டி யுனை அறியாப் பேர்களுண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளர் கை ஏந்தி இரவு நாளாய்
ஏத்துகின்ற தெய்வமன்றோ எவர்க்குந் தெய்வம்
வாராமற் காத்து நின்று வரங்களீயும்
வல்லமை நீ யென்றுணர்ந்து வந்தேன் அம்மா!

ஆயிரம் புத்தகத்தை அடித்து வீழ்ந்து
அடுக்கடுக்காய் படித்தாலும் அந்தோ இந்தக்
காயத்தை எடுத்த பயன்காட்ட வல்ல
கடை நூல்கள் இவ்வுலகக் கடையில் இல்லை!
மாயத்தால் எதை எதையோ காட்டி உன்னை
மறக்க வைத்துப் பிறக்க வைக்கும் மாய நூல்கள்
ஈயைப் போல் பெருகுதம்மா சம்பூர்த் தாயே
என் செய்வேன் இரங்கியருள் பாலிப்பாயே!

எண்ணிக்கை யாலிந்த உலகில் இன்று
எவராலுந் தடைசெய்ய முடியா தெங்கும்
மண்ணத்தை போலின்று மனிதக் கூட்டம்
மளமளவென்றோயாது பெருதம்மா
எண்ணத்தை உயர்வாக்கும் சம்பூர்த் தாயே
இச்சை வழி நடக்குமிவ் இழிவைப் போக்கி
உண்ணெக்கு நின்றுருகி உன்னைப் போற்றும்
உயர்வளியா விடினுலகம் உய்யு மாமோ?

எழுதியவர்

கழகப்புலவர்

**பெ.பொ. சிவசேகரன்**

[04.03.1919 - 19.05.1983]

*இக்கவிதை "கழகப்புலவர் பெ.பொ.சி. கவிதைகள்" (1998) என்னும் நூலிலிருந்து பெறப்பட்டது. இதைத் தொகுத்தவர், திருகோணமலை கலாவிநோதன் சித்தி அமரசிங்கம் ஐயா அவர்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அருள்மிகு ஆதிபத்திரகாளியம்பாள் மீது கும்மி

1. கண்கண்ட தெய்வம் பத்திரகாளி
சம்பூரில்
காட்டுத் தென்னை மரநிணலில்
காட்சிதரும் காளி! [தந்தனத்தன தனதன்ன...]

2. காளி பத்திகாளியம்பாள் மீது
கவிக்குயிலன்
காதலுடன் சிந்துபாட
கஜமுகனே வா வா! [தந்தன...]

3. கிண்கிணி தண்டை சிலம்பொலிக்க
சம்பூரணியாள்
தாண்டவி சாம்பவித் தாய்
தடை தாண்டியோடி வருவாள்! [தந்தன...]

4. வருவாள் வரந் தருவாள் காளி
இயல்பு வாழ்க்கை
வளம் பெருக மனம் மகிழ
நலம் தருவாள் காளி! [தந்தன...]

5. காளி மகா காளி திரிசூலி
சிவனோடு
ஊழிக் கூத்தாடுகின்ற
உக்கிர மாகாளி! [தந்தன...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உக்கிர மாகாளி நீலி சூலி
சக்தி பாதம்
பக்தியுடன் பணிந்தோர்க்கு
பாரில் பயமேது? [தந்தன...]

7. பயம் போக்கி ஜெயமருளும் தேவி
பக்தியுள்ள
தூய அடியார்களுக்கு
துணையாக வருவாள்! [தந்தன...]

8. துணையாக வந்தருள்வாள் காளி
கணை கொண்டு
துட்டன் மகிசூரனை
வதைத்த சங்காரி! [தந்தன...]

9. சங்கரி சாமுண்டி சண்டி காளி
சிங்கம் மீதில்
வந்து வரந்தந்திடம்மா தமிழ்
மக்கள் மனை தேடி! [தந்தன...]

10. மக்கள் மனை வாழும் நிலம் போச்சு
சம்பூரிலின்று
வாழ்ந்த மக்கள் அகதிகளாய்
வாழும் நிலையாச்சு! [தந்தன...]

11. நிலை பெயர்ந்த மக்கள் சம்பூரில்
மீண்டுமிங்கு
மீளக் குடியேறி வாழ காளியம்மா
விரைவில் வழி காட்டு! [தந்தன...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வாழ வழிகாட்டும் தெய்வம் காளி
தமிழரது
வயல் நிலங்கள் வளம் பெருக
மழை பொழிய வைப்பாய் [தந்தன...]

13. மழை பொய்த்துப் போனதம்மா கிழக்கில்
இங்கு
வறட்சிக் கொடுமை மேலும்
வாட்டுதம்மா தொடர்ந்து! [தந்தன...]

14. தொடர்ந்து வரும் தொற்றுநோய்கள்
துயர்கள்
இடம் பெறாமலிருக்கக் காளி
இன்னருளைத் தா தா! [தந்தன...]

15. இன்னருளைத் தந்தருள வா வா
கண்ணாயிரத்தி
உன்னடியை நம்பினோரை
வாழ்த்தி அருள் தா தா! [தந்தன...]

16. சரணம் சரணம் மகா சக்தி
சம்பூரணியின்
தாமரைத் திருத் தாளில்
சரணமம்மா சரணம் சரணம்! [தந்தன...]

சுபம்

இயற்றியது
கவிக்குயிலன்
சிவஸ்ரீ அ. அரசரெத்தினம்
சேனையூர் – திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கும்மிப் பாடலை சிவஸ்ரீ அ. அரசரெத்தினம் ஐயா அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன் (2014).

## சம்பூர் அருள்மிகு
## ஆதி பத்திரகாளியம்பாள் திருவூஞ்சல்

### காப்பு

பேர் மேவு மேருமலை முடியிலொன்று
 பெயர்ந்து தந்த தென் கயிலைக் கிழக்கே என்றும்
கார் மேவு வயல் வெளிகள் கனிமரங்கள்
 காட்சி தந்து வளம் கொழிக்கும் சம்பூர் தன்னில்
பார்மேவு சிறப்போடு வாழ்ந்திருந்து
 பலனருளும் பத்ரகாளி அம்பாள் மீது
சீர்மேவு ஊஞ்சல் இசை செப்புதற்கு
 திறமருளக் கணபதியைச் சிந்தை செய்வாய்

### பாட்டு

1. பெருமை பெறு செம்பவளக் கால்கள் நாட்டி
 பேறாக மரகதத்தால் விட்டம் பூட்டி
பருமணியாம் வெண்முத்து வடங்கள் மாட்டி
 பகட்டான நீலமணிப் பலகை யோட்டி
உருவான ஒளிவீசும் பொன்னூஞ்சல் மீது
 உளமார எழுந்தருளி அழகு காட்ட
அருமையென அடியார்கள் வணங்கி நிற்க
 அம்பிகையே தாயாரே ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இந்திரனும் மாலயனும் களிப்புக் கொள்ள
   இருஷிகின்னரர் முனிவர் வாழ்த்துக்கூற
சொந்தமுடன் வான்மகளிர் கவரி வீச
   சோக்காக நந்தி வந்து மேளம்தட்ட
சந்திரனும் சூரியனும் கவிகை தாங்க
   சண்முகனும் ஐங்கரனும் தாளம் போட
அந்தமிலாப் புகழ்படைத்த சம்பூர் தன்னில்
   அமர்ந்தவளே தாயாரே ஆடீரூஞ்சல்

3. தென் னிந்தியாவிலிருந்து தோணி ஏறி
   தெய்வீகப் பிரயாணம் செய்து வந்து
தன் மனது சம்பூரில் விருப்பங் கொள்ள
   தட்டியதாம் தோணியுமே தோணிக்கல்லில்
அந்நேரம் பெரியோர்கள் கூடி ஒன்றாய்
   அரோகரா ஒலியோடு அழைத்துப் போக
தல விருட்சமாய் விளங்கும் காட்டுத் தேங்காய்
   தன்னிழலில் அமர்ந்தவளே ஆடீரூஞ்சல்

4. வில் வளைவைக் கொண்ட வில்லுக் குளத்திலேதான்
   வீசுகின்ற தென்றலிலே தாமரைகள் ஆடும்
கொல் என்று மீன்துள்ள கொக்குக் கூட்டம்
   குறியாகப் பார்த்து நிற்கும் மேதிக் கூட்டம்
உல்லாசமாக எங்கும் மேய்ந்து செல்ல
   உள்ளமெல்லாம் பூரிக்கும் சம்பூர் தன்னில்
அல்லல் அறுத்தெமையாள வந்தமர்ந்த
   அன்னை பத்ரகாளியம்மா ஆடீருஞ்சல்

5. நயமுற்ற சம்பூரும் கூனித்தீவும்
   நவரெத்ன புரத்தோடு சூடைக்குடாவும்
அயலான கடற்கரைச் சேனையோடு
   ஆன கட்டைபறிச்சானும் சேனையூரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாக விரும்பி வந்து பணிகள் செய்ய
இனிதாக அதையேற்று அருள்பாலிக்கும்
கயல் மேவும் கண்ணழகு கொண்ட எங்கள்
காளியம்மா களிகூர்ந்து ஆடீரூஞ்சல்

6. உளமார உனை வேண்டி நேர்த்திகட்ட
உண்மையாய் அருள்புரிந்து நிறைவு செய்வாய்
முழுதாகப் பிரதேசக் குழந்தை முடிகள்
முதன்முதலில் இறக்குவதும் உந்தன் பதியில்
களவோடு தொடர்பான வழக்கு எல்லாம்
கட்டாயம் உன்முன்னம் சத்தியம் செய்யும்
உலகோர்கள் நம்பிக்கை கொள்ள வாழும்
உமையவளே ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

7. உலகத்தைத் தவச் சிறப்பால் உருக்குலைத்த
உரம்மிக்க மகிஷனையே அழித்தாய் போற்றி
பலமிக்க இராவணனை மலைக்குக் கீழே
படிய வைத்த பெருமான் தன் துணையே போற்றி
தலைச் செருக்கால் செய்திட்ட தக்கன் வேள்வி
தானழிய வழி வகுத்த தாயே போற்றி
நலம்பெற்று குடிமக்கள் வாழ்வதற்காய்
நற்கருணை செய்பவளே ஆடீரூஞ்சல்

8. வந்த வினை தீர்ப்பவளே ஆடீரூஞ்சல்
வடிவேலன் தாயவளே ஆடீரூஞ்சல்
சிந்தை யெலாம் நிறைந்தவளே ஆடீரூஞ்சல்
சிங்கத்தில் வருபவளே ஆடீரூஞ்சல்
இங்கிர்த மானவளே ஆடீரூஞ்சல்
ஈஸ்வரனார் தேவியரே ஆடீரூஞ்சல்
பந்தமுடன் சம்பூரில் வாழ்ந்து வருகின்ற
பத்ரகாளித் தாயாரே ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழி

மாரி வளம் குன்றாது மழை பொழிந்து வாழ்க
மடவார்கள் கற்பு நெறி புகழோடு வாழ்க
நீர் வயலில் சாறு செய்யும் உழவர் புகழ் வாழ்க
நீண்ட கடற்றொழிலெல்லாம் நிலைபெற்று வாழ்க
பார் செழிக்க கறவையினம் பால்சுரந்து வாழ்க
பண்ணோடு பொன்னூஞ்சல் பாடினோர் வாழ்க
சீர் பெருகு வாழ்வு தரும் சம்பூரணத்தில்
ஸ்ரீ பத்ரகாளி பதம் வாழ வாழியதே.

## பராக்கு, எச்சரிக்கை, லாலி, மங்களம்

### பராக்கு

1. அகிலமெல்லாம் புகழ்படைத்த அம்மா பராக்கு
அருள் ஒழுகு முக்கண்ணி அம்மே பராக்கு

2. வரமருள வந்தருளும் மாதே பராக்கு
வாரண முகத்தோனை ஈன்றாய் பராக்கு

3. பரவுமடியார் துயரம் தீர்ப்பாய் பராக்கு
பரமனொடு பாகமதாய் நின்றாய் பராக்கு

4. ஆலிலை போல் பள்ளி கொள் வோன் தங்காய் பராக்கு
ஆறுதலை சூடுமரன் தோகாய் பராக்கு

### எச்சரிக்கை

1. அரனாருடன் அருளாடல் செய் அம்மா எச்சரிக்கை
அம்மா பத்திரகாளி எமை ஆள்வாய் எச்சரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. துங்கமிகு அண்டகோடி நிறைந்தாய் எச்சரிக்கை
சிங்கத்தினில் ஏறிவரும் தேவி எச்சரிக்கை

3. எல்லாமுமாய் எந்தையுமாய் இயைவாய் எச்சரிக்கை
இகலோகமும் பரலோகமும் ஈவாய் எச்சரிக்கை

4. அடியார்கள் செய் பிழையானவையும் பொறுப்பாய் எச்சரிக்கை
அருள் செய்தவர் வாழ்வை என்றும் காப்பாய் எச்சரிக்கை

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
தத்துவம் கடந்தவளே லாலி லாலி

1. ஆயிரம் கண் உடையவளே லாலி லாலி
அம்மை பத்ர காளித் தாயே லாலி லாலி

2. உலகமெலாம் ஈன்றவளே லாலி லாலி
உன்னடியார் ஈஸ்வரியே லாலி லாலி

3. சம்பூர் நகர் வாழ்பவளே லாலி லாலி
சண்முகனை ஈன்றவளே லாலி லாலி

4. ஈஸ்வரியே சுந்தரியே லாலி லாலி
எங்கும் நிறையும் பொருளே லாலி லாலி

5. அல்லலெல்லாம் தீர்த்து எமை ஆள்வாய் லாலி
அன்னை பத்ரகாளி அம்மா லாலி லாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

1. சங்கரற்கும் தந்திமுக ஐங்கரற்கும் சர்வலோக
வள்ளி தெய்வ யானை மணவாளன் வடிவேலருக்கும்

2. பங்கமிலா வைரவற்கும் துங்கவீர பத்திரற்கும்
வாணி தேவி லட்சுமிக்கும் மாயக் கிருஷ்ண
தேவனுக்கும்

3. வில்லுக்குளத்தருகில் விளங்கு சம்பூரணத்தில்
உறைந்து புகழ்பரப்பும் ஓங்கு புகழ் அம்பிகைக்கும்

4. காட்டுத் தேங்காய் மரத்தின் கனிவான நன் நிழலில்
பாட்டுக் கமர்ந்திருந்து அருள் பொழியும்
அம்பாளுக்கும்

5. வேதியர்க்கும் பக்தர்கட்கும் அறங்காவல்
சபையினருக்கும்
அம்பிகைக்கு விழாவெடுக்கும் அன்பர் நிறை
ஊர்களுக்கும்.

இயற்றியவர்
சைவப்புலவர்
**கலாபூசணம் அருளம்பலம் குகராசா**
சம்பூர் – திருகோணமலை [2014]

இத் திருவூஞ்சல் பாடலை சைவப்புலவரும், கொட்டியாபுரப்பற்று இந்துசமய அபிவிருத்தி ஒன்றிய பொதுச் செயலாளருமான திரு. அ. குகராசா அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். (2014)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1. சம்பூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கும்பாபிஷேக மலர், 1997.
2. சம்பூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் நவக்கிரக தேவர்களின் கும்பாபிஷேக மலர், 1990.
3. சம்பூர் பிரதேசத்தின் தொன்மை வைத்திய கலாநிதி அ. ஸதீஸ்குமார்.
4. கவிராஜரருளிச் செய்த கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசர் சாசனம்.
5. திருக்கோணேஸ்வரம் தொன்மையும், வண்மையும் - பண்டிதர் இ. வடிவேல்.
6. திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள் - பண்டிதர் இ. வடிவேல்.
7. அம்பிகையின் அருள்வடிவங்கள், திருகோணமலை ஸ்ரீபத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம்.
8. வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் - திரு. ஐ. வீரக்கோன் முதலியார்.
9. கழகப்புலவர் பெ.பொ.சி. கவிதைகள், 1998 - கலாவிநோதன் சித்தி அமரசிங்கம்.
10. மகாமாரித்தேவி திவ்யகரணி - திரு. சி.கணபதிப் பிள்ளை, மட்டக்களப்பு.


ೲ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரைப் பற்றி...



டாக்டர் அ.ஸதீஸ்குமார்

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் என்னும் பாரம்பரியப் பெருமைகள் மிக்க அழகிய கிராமத்தைச் சேர்ந்தவர் டாக்டர் அருமைநாதன் சதீஸ்குமார் அவர்கள்.

தமிழ் இலக்கியங்களில் மிகவும் ஆர்வம்கொண்ட இவர் 2013ஆம் ஆண்டு சம்பூர் பிரதேசத்தின் தொன்மை என்னும் வரலாற்று ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு 2014 கார்த்திகை மாதம் நடைபெற்ற இலங்கையின் கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் சிறந்த நூலுக்கான விருது கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தலைசிறந்த பத்திரிக்கைகளான வீர கேசரி, மலை முரசு ஆகியவற்றின் பத்தி எழுத்தாளராகவும் உள்ள இவரது சமூக சேவைகளைப் பாராட்டி அகில இலங்கை இனநல்லுறவு ஒன்றியத்தால் சாம ஸ்ரீ தேசமான்ய பட்டம் 2013ஆம் ஆண்டு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்ற இவர் இந்து சமய ஆவணங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கோடு வெளியிடும் இந் நூலைப்போல மேலும் பல நூல்களை வெளியிட்டு தமிழ் நல்லுலகிற்கு சேவைகள் பல செய்யவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்,

- பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org